கல்கி



KALKI அக்டோபர் 16, 1955

4 அண

"இந்த அழகு தரும் சோப் தனிவிதமானது"

புதியது! நறுமணமுள்ளது! ப்ரீஸ்



"ஆக்டமர் கலந்துள்ளது"

* உடலிலுண்டாகும் துர்கந்தத்தை நீக்குகிறது
  உங்களை புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!

* சருமத்திலுள்ள கிருமிகளை கொல்லுகிறது
  சருமத்தை ஆரோக்கியத்துடனிருக்க பாதுகாப்பளிக்கிறது!

ஆக்டமர் (பைதியோனல்) மான்ஸான்டோவின் புதுமையான பாக்டீரியோஸ்டாட். அது கிருமிகளை கொல்லக் கூடிய சிறந்த சக்தியை உடையதாயிருந்தாலும், சருமத்திற்கு மென்மையைத் தரக்கூடிய ரசாயனப் பொருள்.



விலை 8 அணாதான்

உள்ளூர் வரிகள் நீங்கலாக

ப்ரீஸ் - ஆக்டமர் கலந்த அழகு தரும் சோப்

கல்கி

மலர் 15
இதழ் 11

மன்மத ஹூ
புரட். 30

பொருளடக்கம்

1955 அக்டோபர் 16

மாகாணப் பிரிவுகள் திருத்தும் பிரச்னை (தலையங்கம்)		...	3
வாழ்க சங்கீத வித்வத் சபை	...	...	4
இந்தியாவின் குரல் (கார்ட்டூன்)	சாமா	...	7
இந்தியாவுக்கு ஒரு இன்ஜினீயர் (அட்டைப்படம்)		...	9
தமிழகத்தில் நேரு (போட்டோ)	...	...	10
சக்கரவர்த்தித் திருமகன்	ராஜாஜி	...	12
சங்கீத மண்டப அஸ்திவார விழா (போட்டோ)...		...	16
காடு வளர்ப்போம்	பகீரதன்	...	18
சிவன் கீர்த்தனைகள்	செம்மங்குடி சீனிவாச ஐயர்	...	27
வாழ்வின் ரகசியம்	டி. எஸ். கோதண்டராமன்	...	31
கல்கியின் அமர தாரா	ஆனந்தி	...	35
ஆற்றங்கரையினிலே	பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை	...	47
டி. கே. சி.யின் கடிதங்கள்	...	...	51
சாமர்த்தியசாலி	ஓ. ரங்கராஜன்	...	53
கூலிப் பணம்	டி. எஸ். ராமச்சந்திரன்	...	62
பர்மா ரமணி (பாப்பா மலர்)	அழ. வள்ளியப்பா	...	67
டாக்டர் சுந்தரி	சரஸன்	...	71
ரவி சந்திரிகா	சோமு	...	76

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

அக்டோபர் 14—ந் தேதி முதல்



சென்னை மிட்லண்ட் & பிராட்வேயில் ஆரம்பம்

தினசரி மூன்று காட்சிகள் - அட்வான்ஸ் புக்கிங் வழக்கம்போல்

வெளியீடு: அலங்கார் சித்ரா - - பெங்களூர்



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | மன்மத ௵
இதழ் 11 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார், | புரட்டாசி 30

மாகாணப் பிரிவுகள் திருத்தும் பிரச்னை

தலைப்பு கொஞ்சம் நீளம். ஆனால் விஷயம் விளங்குவதற்கு அந்த நீட்டம் வேண்டும். இருக்கிற பிரிவுகளையும் எல்லைகளையும் எப்படி மாற்றி யமைத்தால் ராஜ்ய நிர்வாகம் நன்றாக நடைபெறும், மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள் என்பதே கேள்வி.

வெகு நீண்ட ஒரு அறிக்கை இந்தப் பிரச்னைக்கென்று ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார் எழுதி விடுத்திருக்கிறார்கள். அது பத்திரிகைகளில் பிரசுரமாகி யிருக்கிறது. ஞாயிறு அன்று பிரதம மந்திரி நேரு அவர்களின் பேச்சு ரேடியோவில் கேட்டிருக்கலாம். கோபமோ மனத் துடிப்போ அடையாமல் சாவதானமாக விஷயங்களை எல்லாரும் ஆலோசித்துத் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்ட பின், நிதானமாக விவகரித்து மக்களுடைய பிரதிநிதிகள் டில்லியில் முடிவு செய்வார்கள் என்று சொன்னார்.

கவலையும் கோபமும் உண்டாகாமலிருப்பது அவசியம். இதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் மதிப்புக்குரிய தலைவர்கள் 'இந்த வழியில் செல்லுங்கள்' என்று காட்டாமல் எதேச்சையாக விவாதங்கள் கிளப்பினால் மனக் கசப்பும் பரஸ்பர வெறுப்பும் உண்டாகி வளர்வது இயற்கையாகும். திட்டமான ஒரு வழியைக் காட்டாமல் 'ஆராயுங்கள், விவாதியுங்கள்' என்றால் தூசி கிளம்பி, பார்வை தடுமாறும் நிலைமை உண்டாகும். நிலைமை சீர்திருத்தப்படுவதற்குப் பதில் நாடெங்கும் கலவரம் உண்டாகும். தவிர சிலர் தங்களுடைய சுயநலங்களைப் பற்றி ஆராய்ந்து அதற்கு வேண்டிய பிரசாரமும் செய்வார்கள்.

நாம் வற்புறுத்துவது என்னவென்றால் மதிப்புக்குரிய தலைவர்கள் தங்களுக்குள் ஆராய்ந்து இந்தப் பாதையில் செல்லுங்கள் என்று காட்ட வேண்டும். கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்த போதும் கூட அர்ஜுனன் சொன்னான் அல்லவா? "இப்படியும் அப்படியும் குழப்பிச் சொல்லுவது போல் பேசுகிறீரே. ஏதாவது ஒரு வழியை நிச்சயித்துச் சொல்லுவீராக" என்றான்.

நாட்டில் தீர்க்க வேண்டிய பெரும் பிரச்னைகள் பல இருக்கின்றன. மூன்று அல்லது நான்கு ஐந்தாண்டு திட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக முடிவு பெற்ற பின்தான் தேசத்தில் சுபிட்சம் ஏற்படும். அதற்குள் அத்தியாவசியமல்லாத எல்லைப் பிரச்னைகளைக் கிளப்பிப் பழைய நோய்களுக்குப் பதில் புது வியாதிகளை உண்டாக்கிக் கொள்வதில் லாபம் காண மாட்டோம். இப்போதிருந்து வரும் எல்லைகளினாலும் மாகாணப் பிரிவுகளினாலும் ஒன்றும் குடி முழுகிப் போகவில்லை.

பாஷை ஒன்றையே பெரிதாகக் கவனித்துக் கொண்டு, தாண்ட முடியாத வேலிகளைக் கட்டிக் கொண்டு மாகாண வாழ்க்கை நடத்தினோமானால் அனேகப் புதுச் சிக்கல்கள் தோன்றித் தீராத கஷ்டங்கள் விளையும். படிப்புக்கும் பேச்சுக்கும் புஸ்தக வியாபாரத்துக்கும் பாஷைகளைக் கொண்டு எல்லைகளைக் கட்டலாம். ஆறுகளின் ஓட்டத்திற்கும் வாய்க்காலுக்கும் விவசாயத்துக்கும் விற்பனை வியாபாரங்களுக்கும் இவற்றைப் பற்றிய ராஜ்ய நிர்வாகத்துக்கும் அவ்வித எல்லைகளினால் சௌகரியமோ பிரயோஜனமோ உண்டாகாது.

மாகாணங்களைச் சிறிது சிறிதாக்கிக் கொண்டு புது எல்லைகளை வரைந்து கொண்டு அதனால் கிளம்பும் புதுத் தகராறுகளைப் பற்றி இயக்கங்களும் சச்சரவுகளும் நடத்திக் கொண்டு போகிறோம். அதிகாரம் முழுதும் மாகாணங்களிலிருந்து நழுவி மத்திய ஆட்சிக்குச் சென்று விட்டது என்பதை யாரும் கவனிப்பாரில்லை. அப்படி மத்திய அரசாங்கத்துக்கு எல்லா அதிகாரமும் கொடுத்து விடுவதே நல்லது என்று எண்ணினால் கொடுத்து விடலாம். பிறகு மாகாணப் பிரிவுகளைப் பற்றி ஏன் வீண்

கலையே! எப்படியிருந்து போனாலும் குற்றமில்லை என்று எல்லாரும் சினேகமாக இருக்கலாம். சின்னஞ்சிறு விஷயங்களுக்காகப் பிரதேச மந்திரிகளை வைத்துக் கொண்டு மற்றப்படி தில்லி அரசாங்கத்துக்குச் சாஷ்டாங்கமாக வணங்கி எல்லாரும் வாழ்க்கை நடத்தலாம்.

சௌராஷ்டிர ராஜ்யத்தைப் பம்பாயோடு சேர்த்து விட்டதில் குற்றமில்லை. இவ்வளவு நாள் சௌராஷ்டிர ராஜ்யம் மந்திரிகளால் நன்றாகவே நிர்வகிக்கப்பட்டது. ஆயினும் கர்நாடக பாகத்தை இழந்த பம்பாய்க்குச் சௌராஷ்டிரத்தைக் கொடுத்தது, சமாதான சாமர்த்தியமே யாகும். மராட்டி என்றும் குஜராத்தி என்றும் பம்பாய் மாகாணத்தைப் பிரித்துவிட வேண்டும் என்று சிலர் கூக்குரலிட்டுக் கொண்டிருந்த போதிலும் அதற்கு இசையாமல் உறுதியாக நின்றதும் சாமர்த்தியமேயாகும். பம்பாய்த் தலைவர்கள் அதையெல்லாம் வரவேற்பது இயற்கை. தெற்கேதான் நாட்டின் சின்னாபின்னம் யாரும் ஆட்சேபிக்காமல் நடைபெற்று வருகிறது.

இந்திய தேசத்தின் ஒற்றுமை வளர்ந்து நிலைபெற வேண்டுமானால் மக்களுடைய உள்ளங்கள், பல பிரதேசங்களிலுள்ள ஜனங்களுடைய மனோபாவங்கள் இவை ஒற்றுமையடைய வேண்டும். ஒன்று செய்யப் போக மற்றொன்று நாம் விரும்பாத வகையில் உண்டாகும்படி செய்து கொள்ளக் கூடாது. இந்திய முதல் மந்திரியும் அவர்களுடைய சகாக்களும் எல்லா விஷயங்களையும் சீக்கிரமாக ஆலோசித்து மக்களுக்கு வழி காட்ட வேண்டும். 'உங்கள் எண்ணங்களை யெல்லாம் சொல்லுங்கள்' என்று யதேச்சையாக விவகரிக்க விட்டுவிட்டால் நாட்டில் இப்போதுள்ள ஒற்றுமையும் கலைந்து போகும்.

சுதந்திரப் போரில் வெற்றி பெற்ற பெருந் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்து வருகிறார்கள். புதிதாகச் சேர்ந்து கீர்த்தியும் புகழும் பெற்ற மந்திரிகளால் இந்திய தேசத்தின் ஒற்றுமையை ஓம்புதல் கஷ்டம். அவர்களால் பிரதேசப் பொறுமைகளை அடக்கி ஆள முடியாது. வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு என்றெல்லாம் சுயநலக்காரர்கள் வேற்றுமைகளை வளர்ப்பார்கள். நாடு சிதறிப் போகும். ஆனபடியால் பழைய பெரிய தலைவர்களே இந்த மாகாணப் பிரிவினைப் பிரச்னையை இன்னும் இத்தனை ஆண்டுகள் ஒன்றும் மாறுதல் வேண்டாம் என்று தள்ளிப் போட வேண்டும்; அல்லது இந்த விதமாக உடனே செய்துவிட வேண்டும் என்று திட்டமாகத் தீர்த்து வழி காட்ட வேண்டும். பிரச்னையைச் சங்குல யுத்தத்துக்கு விட்டுவிடக் கூடாது!

வாழ்க சங்கீத வித்வத் சபை

தமிழ் நாட்டில் சுமார் முப்பது ஆண்டுகளாகக் கர்நாடக சங்கீதத்துக்குச் சேவைசெய்து வரும் சபை, மியூஸிக் அகாடமி என்று புகழ் பெற்ற சங்கீத வித்வத் சபை. 1927-ம் ஆண்டு சென்னையில் நடந்த காங்கிரஸின் சங்கீதப் பகுதியிலிருந்து ஏற்பட்ட சபை. திரு கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், திரு டி. எல். வெங்கட்ராமய்யர், திரு கஸ்தூரி சீனிவாசன், திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற பிரமுகர்கள் போற்றிப் பாதுகாத்து வரும் சங்கீத சபை. ஆண்டுதோறும் சங்கீத விழா நடத்தி மக்களுக்குக் கர்நாடக சங்கீதத்தின் அருமையையும் பெருமையையும் ஊட்டி வரும் சபை. சங்கீத சாஸ்திரம், நாட்டிய முறை ஆகியவைகளைப் பற்றி விவாதங்கள் நடத்திச் சங்கீதத்தின் உயர்ந்த சம்பிரதாயங்களைக் காப்பாற்றி வரும் சபை. இன்றையதினம் சங்கீத உலகில் முன்னணியில் இருக்கும் சங்கீத வித்வான்களின் ஆர்வத்துக்கெல்லாம் அறிகுறியாக இருந்து வரும் சபை. இளம் வித்வான்களுக்கு ஊக்கமளித்துச் சங்கீத பரம்பரையைப் பேணி வளர்த்து வரும் சபை. எத்தனையோ வாத விவாதப் புயல்களுக்கு மத்தியில் தலை நிமிர்ந்து நின்று ஒளி வீசித் திகழ்ந்து வரும் உன்னதமான சபை சங்கீத வித்வத் சபை.

அத்தகைய வித்வத் சபைக்கு இதுவரையில் சொந்தமாகச் சங்கீத மண்டபம் இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைப் போக்குவதற்காகப் பாரதத்தின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவைக் கொண்டு அக்டோபர் முப்பதாம் தேதி சங்கீத மண்டபத்துக்குக் கால்கோள் விழா நடத்தினார்கள். விழா என்றால் இதுவன்றோ விழா என்று வியக்கும்படி அஸ்திவார விழா 'ஜாம்' 'ஜாம்' என்று நடைபெற்றது. கண்டாமணி முழங்க, மலர்கள் பொழிய, பளீர் என்று தீபங்கள் ஒளிவீசித் திகழ, மக்களின் குதூகல ஆரவாரத்துக்கு மத்தியில் ஜவாஹர்லால் நேரு அஸ்திவாரம் இட்ட காட்சி மறக்க முடியாத காட்சி.

சங்கீத மணி மண்டபத்தின் உதவி நிதிக்காக அன்றையதினம் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு முன்னிலையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது. அந்தக் கச்சேரிக்கு ரூ. 1,60,000 (ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ரூபாய்) வசூலாகியது.

நிதி வசூலுக்குத் தகுந்தபடியும், தலைவர்கள், கவர்னர், மந்திரிகள், நீதிபதிகள், சங்கீத கலாநிதிகள், சங்கீத வித்வான்கள், சங்கீத ரஸிகர்கள், பிரமுகர்கள் கூடிய பெரிய சபைக்கு ஏற்றபடியும் அன்றையக் கச்சேரி அமோகமாக அமைந்தது. வித்வத் சபையின் விசேஷப் பந்தலுக்குள் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கான மழையும், வெளியில் வான மழையும் வெள்ளம் போல் ஒன்று கலந்து ஓடின.

கச்சேரிக்கு நடுவில் அரைமணி நேரம் நடந்த பேச்சுக் கச்சேரியில் ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவும் வித்வத் சபையின் உபதலைவர் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் பேசினார்கள்.

வித்வத் சபையின் சேவையைப் பற்றியும், கர்நாடக சங்கீதத்தின் பெருமையைப் பற்றியும், தமிழ் நாட்டின் சிறப்பைப் பற்றியும் மாற்றி மாற்றிப் பெருமையோடு கூறி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்களை வரவேற்றார் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

நேருஜியோ அழகாகவும், மிகப் பொருத்தமாகவும், குதூகலத்துடனும் பேசினார். சென்னை சங்கீதத்துக்குச் செய்து வரும் சேவையை வானளாவப் புகழ்ந்தார். நாட்டின் உண்மையான உள்ளம் கலைகளில்தான் இருக்கிறது என்றார். புதிதாகக் கட்டப் போகும் கலை மணம் கமழும் வித்வத் சபை மண்டபத்தின் மாதிரியைப் பாராட்டினார். இந்த மண்ட

பத்துக்காக உதவிக் கச்சேரி செய்த ஸ்ரீமதி எம். எஸ். அவர்களைப் பற்றிப் பெருமிதத்தோடு பாராட்டினர். "சங்கீத ராணியைப் பற்றிப் பேச, வெறும் பிரதம மந்திரியாகிய நான் யார்!" என்றார். அப்பொழுது சபையில் ஏற்பட்ட ஆரவாரத்தையும் நேருஜி அவர்களின் முகமலர்ச்சியையும் பார்த்தால் ஸ்ரீமதி எம்.எஸ். அவர்களின் கைங்கரியத்தை எவ்வளவு தூரம் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்தது. உண்மையிலேயே பாராட்டத்தக்க விஷயம் தான். தமிழ் நாடே பெருமைப் படக்கூடிய உத்தமமான காரியம்தான்.

இவ்வளவு பிரமாதமாக அஸ்திவார விழா கொண்டாடிய வித்வத் சபையை "வாழ்க! வாழ்க!" என்று வாழ்த்துகிறோம். இந்த விழாவின் வெற்றிக்குப் பாடுபட்ட எல்லாருக்கும் வாழ்த்துக் கூறுகிறோம். இந்தியா தேசத்தில் உள்ள சங்கீத மண்டபங்களுக்குள்ளே மிகச் சிறந்த சங்கீதக் கலைமண்டபமாக வித்வத் சபை மண்டபம் திகழப் பிரார்த்திக்கிறோம்.

சங்கீத மும்மூர்த்திகள்

வித்வத் சபையின் விழாவை நினைக்கும் போது கர்நாடக சங்கீதத்துக்கு உயிரும், உருவமும் கொடுத்த சங்கீத மும்மூர்த்திகளை நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

கர்நாடக சங்கீதத்தின் சிகரம் என்று சொல்லக் கூடிய அம்சம் பல்லவி, அனுபல்லவி, சரணம் — இவற்றோடு கூடிய கீர்த்தனங்கள் அல்லவா! தியாகராஜர், தீட்சிதர், ஸ்யாமா சாஸ்திரிகள் ஆகிய சங்கீத மும்மூர்த்திகள் திருவாரூரில் தோன்றிக் கீர்த்தனை பாணியில் சிறந்த சாகித்தியங்கள் இயற்றினார்கள். படிப்படியான சங்கதிகள் போட்டு, விஸ்தாரத் தானக் கட்டுடன் கூடிய ஆயிரக்கணக்கான கீர்த்தனங்கள் இயற்றினார்கள். சிறந்த ராக பாவத்துடன், தெய்வீக பக்தி ரஸம் ததும்பும் அருமையான கீர்த்தனங்கள் இயற்றினார்கள். அவைகள் செவிக்கு அமுதமாயும் இதயத்தைப் பரவசப்படுத்தக் கூடியதாயும் அமைந்து விளங்குகின்றன.

சங்கீத மும்மூர்த்திகள் வெறும் சங்கீத வித்வான்களும், சாகித்தியக் கர்த்தாக்களும் மட்டுமல்ல. பகவானுக்கே தங்களை அர்ப்பணம் செய்த பரம பாகவத சிரோமணிகள். ஆழ்வார், நாயன்மார் பரம்பரையைச் சேர்ந்த பெரியோர்கள்.

அவர்கள் சங்கீதத்துக்கு ஆற்றியுள்ள அரும் பணி குறித்து இந்த இதழில் வேறு பக்கத்தில் வெளியாகியுள்ள "ஆற்றங்கரையினிலே!" என்ற இலக்கியப் பகுதியில் சொல்லின் செல்வர் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் மெய்யுருகி எழுதியுள்ளார். மும்மூர்த்திகள் இசைக்கும் சமயத்துக்கும் செய்துள்ள சேவைகளைத் தமிழகம் மறக்கக்கூடாது என்று வேண்டுகோள் விட்டிருக்கிறார்.

கர்நாடக சங்கீதத்துக்கு உரிய எத்தனையோ ராகங்களின் வடிவங்களை இன்று மும்மூர்த்திகளின் கீர்த்தனங்களைக் கொண்டுதானே வகுத்து அறிய வேண்டியதாயிருக்கிறது.

அத்தகைய மகா புருஷர்கள் தோன்றிய திருவாரூரில் அவர்களுக்கு ஞாபகச் சின்னம் அமைக்கும் முயற்சி நடந்து வருவது நேயர்கள் அறிந்ததே. வித்வத் சபையின் தோற்றத்துக்கே காரண புருஷர்கள் சங்கீத மும்மூர்த்திகள் அல்லவா! அவர்களின் ஞாபகச் சின்ன மண்டபத்தின் அஸ்திவார விழாவையும் விரைவில் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ வேண்டாமா! அதற்குச் சங்கீத வித்வான்களும், சங்கீத ரஸிகர்களும், சங்கீதக் கலையைக் காப்பாற்றி வரும் பெரியோர்களும், நன்றிமறவாத் தமிழ் மக்களும் உதவி புரிய வேண்டும். சங்கீத மும்மூர்த்திகளுக்கு விரைவில் ஞாபகச் சின்ன மண்டபம் காண வேண்டும்.

மும்மூர்த்திகள் ஞாபகச் சின்னத்துக்குப் பொருள் உதவி அனுப்ப வேண்டிய விலாசம்:

ஸ்ரீ சதாசிவம், பொக்கிஷதார், மும்மூர்த்தி ஞாபகச் சின்னத் திருப்பணி, 'கல்கி' காரியாலயம், சென்னை - 10.

இலங்கையில் பூதானம்!

—கொழும்பு, அக்டோபர், 7உ

இவ்வாரம் யாழ்ப்பாண குடா நாட்டிலுள்ள பண்ணாகம் என்னுமிடத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆதரவில் சர்வோதய மகாநாடு மூன்று தினங்கள் வரை சிறப்பாக நடைபெற்றன. இம் மகாநாட்டுக்காகத் திருப்பெருந் திரு குன்றக்குடி அடிகளார் விஜயம் செய்திருந்தார்கள்.

குன்றக்குடி அடிகளார், சர்வோதய தத்துவங்களைப் பற்றிப் பேசியபொழுது, சங்க கால இலக்கியங்களிலும் சிவனடியார்களின் பாசுரங்களிலும் சர்வோதய தத்துவங்கள் மலிந்திருப்பதை எடுத்துக் காட்டினார். இந்தத் தத்துவங்கள் தமிழ் மக்களுக்குப் புதியவைகள் அல்லவென்றும், தமிழ் கூறும் நல்லுலகில்தான் சர்வோதய தத்துவம் ஜனித்ததென்பதில் தமிழ் மக்கள் பெருமை யடையலாம் என்றும் கூறினார். மக்கள் மனத்தை மாற்றும் ஒரு பிரம்மாண்டமான சமூகப் புரட்சியைப் பாரதத்தில் வினோபாஜி நடத்தி வருவது இலங்கையின் விசேஷ கவனத்துக்கு உரியது என்றும், இந்தியாவைப் போலவே இலங்கையிலும் பூதான இயக்கம் பெரிய அளவில் மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பித்து நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

குன்றக்குடி அடிகளாரின் இந்த அரிய உபதேசம் உடனேயே பலன் அளித்தது. யாழ்ப்பாண விவசாயியான ஸ்ரீ வைத்தியலிங்கம் என்பவர் தமது நிலத்தில் பத்து ஏக்கராவை பூதானத்துக்கு எழுதி வைத்து அதை நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகிக்குமாறு சொல்லி அந்த நிலத்துக்கு உரிய தஸ்தாவேஜுகளையும் அடிகளாரிடம் சமர்ப்பித்தார். இதை அடிகளார் மகாநாட்டில் அறிவித்து பூதான இயக்கத்துக்கு ஸ்ரீ வைத்தியலிங்கம் வழிகாட்டியிருப்பதாகச் சொல்லிய பொழுது கரகோஷம் வானைப் பிளந்தது. இந்த நிலம் காந்தி சேவா சங்கத்தின் மூலம் நிலமற்ற எளிய விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட விருக்கிறது.

ஸ்ரீ எச். பேரின்ப நாயகம், ஸ்ரீ கே. நாகரத்தினம் முதலான பல அறிஞர்களும் இம் மகாநாட்டில் பேசினார்கள். மதுவிலக்கைச் சட்ட மூலம் அமுல் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானம் உள்படப் பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேறின. குன்றக்குடி அடிகளார் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு முதலிய இடங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்.

* * *

மொழிப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க இவ்வாரம் அகில இலங்கைத் தமிழ்ச் சங்கம் கொழும்பு சைவ மங்கையர்க் கழக மண்டபத்தில் ஒரு மகாநாட்டைக் கூட்டியது. அதில் வித்துவான் வ. மு. கனககசுந்தரம் பேசிய பொழுது, நெருக்கடியான காலத்தில் சிங்களவர்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்காகக் காலஞ்சென்ற ஸர் பொன்னம்பலம் ராமநாதன் சிறைக்குச் சென்று போராடியதையும் சமீப காலம் வரை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவி வந்ததையும் குறிப்பிட்டு, சில அரசியல் வாதிகள் சுயநலனுக்காக நாட்டில் நிலவும் வகுப்பு சௌஜன்யத்தைக் குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார். தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சரிசம அந்தஸ்து அளித்தால் சிங்களம் அழிந்து விடுமென்று ஒரு சாரார் கிளர்ச்சி செய்வது விந்தையானது என்றும் உண்மையாகத் தமிழ் மொழியினால் சிங்களம் வளர்ச்சி யடையுமே தவிர தளர்ச்சி அடையாது என்றும் அவர் கூறினார். ஜனாப் ஏ. எம். ஹனிபா பேசுகையில் இலங்கை முஸ்லீம்களின் தாய் பாஷை சிங்களம்தான் என்று சிலர் கூறுவது அபத்தம் என்றும், முஸ்லீம்கள் வியாபார நோக்கத்துக்காகப் பல மொழிகளைக் கற்ற பொழுதிலும் அவர்களுடைய தாய்பாஷை தமிழ் மொழிதான் என்றும் கூறினார். தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் சரிசம அந்தஸ்து இருக்கும் என்று உறுதி கூறச் சட்டத்தைத் திருத்தினால்தான் தமிழ் மக்களின் மனத்தில் தோன்றியுள்ள பீதி நீங்கும் என்றும் சொன்னார்.

இதற்கிடையில் பல பௌத்த பிக்ஷுக்கள் இவ்வாரம் பிரதம மந்திரியைப் பேட்டி கண்டு சிங்களம் ஒன்று மட்டுமே இலங்கை ராஜாங்க பாஷையாக இருக்கும் என்று பிரகடனப் படுத்த வேண்டும் என்றும் சிங்களத்துடன் தமிழுக்குச் சம அந்தஸ்து அளித்தால் சிங்களம் அழிந்து போகும் என்றும் வற்புறுத்தினார்கள்.

* * *


கொழும்பு நகர மேயர் டாக்டர் என். எம். பெரைராவை மேயர் பதவியிலிருந்து நீக்கி விடுவது என்று கொழும்பு முனிசிபல் சபை ஒரே ஒரு வோட்டினால் இவ்வாரம் தீர்மானித்திருக்கிறது. அவர் மீதுள்ள ஒரே ஒரு குற்றம் அவர் இடது சாரிக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதுதான். அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்து வோட்டுக் கொடுத்தவர்கூட டாக்டர் பெரைராவின் திறமையை வானளாவப் புகழ்ந்து பேசினார். அப்படி யிருந்தும் கட்சி நலனுக்காக வலது சாரியினர் தூண்டில் போட்டு இடது சாரியிலிருந்த இருவரைப் பிடித்து இழுத்துக் கொண்டு டாக்டர் பெரைராவைப் பதவி நீக்கம் செய்து விடுவது என்று தீர்மானித்திருக்கின்றனர். இந்தத் தீர்மானத்தைக் "கொழும்பு நகரின் துக்க தினம்" என்ற மகுடமிட்டு இலங்கைப் பத்திரிகைகள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. மெஜாரிட்டி பலமிருப்பதற்காகச் சர்க்கார்கட்சி தன்னுடைய மனம் போனவாறெல்லாம் செய்வதாயின் அது சர்வாதிகார ஆட்சியில்தான் கொண்டு போய் விடுமென்று பத்திரிகைகள் பலமாக எச்சரிக்கை செய்திருக்கின்றன.

—ரஜனி

பிரச்னையும் பார்வையும்



இந்தியாவின் குரல்



அல்ஜீரியாவில் பிரான்ஸின் காலனி ஆட்சியைப் பற்றிக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆட்சேபித்து பிரான்ஸ் ஐ. நா. சபையை விட்டு வெளியேறியது.

மற்றோர் பெரிய

Gevaert

கேவர்ட் போட்டோக் கலைப் போட்டி!

விஷயம்

"குழந்தைகள்"



பரிசுகள் ரூ. 2,500க்கு மேல்

முதல் பரிசு	ரூ. 1000/-	ரொக்கம்
இரண்டாவது பரிசு	ரூ. 500/-	,,
மூன்றாவது பரிசு	ரூ. 250/-	,,

மற்றும் 17 மதிப்பு மிக்க பரிசுகள்

முடிவு தேதி 31 ஜனவரி 1956


"குழந்தைகள்" என்ற விஷயம் பற்றிய இப் புது கேவர்ட் போட்டோ போட்டி உங்கள் திறமையைக் காண்பிக்க ஒரு நல்ல வாய்ப்பை அளிக்கிறது. குழந்தைகளின் மோகனப் புன்னகையை....மனோபாவங்களை, முகபாவங்களை மகிழ்ச்சியூட்டும் குறும்புச் செயல்களை படம் பிடித்து கவர்ச்சி மிக்க ரொக்கப் பரிசைப் பெறுங்கள்! நீங்கள் இப்போட்டிக்கு எத்தனை போட்டோக்கள் வேண்டுமாயினும் அனுப்பலாம். ஆனால் போட்டோக்கள் கேவர்ட் பிலிமில் எடுத்து கேவர்ட் பேப்பரில்பிரிண்ட் போடப்பட்டிருக்க வேண்டும். குறைந்தது ஒவ்வொரு படமும் அரைப் பிளேட் அதாவது 4¾"×6½" அளவில் இருக்க வேண்டும். ஒவ்வொரு போட்டோவும் ஒரு கேவர்ட் பிலிமின் மேல் பெட்டியோடு அனுப்பப்பட வேண்டும். ஒன்று அல்லது பல குழந்தைகளைக் குறிப்பதாக இருக்கலாம். ஆனால் யாவும் சின்னஞ் சிறு குழந்தைகளின் போட்டோக்களாகத்தான் இருக்க வேண்டும். இப் போட்டியின் பூரா விவரங்களை அருகிலுள்ள போட்டோ கடைக்காரர்களிடமோ அல்லது எங்களிடமோ பெறலாம்.

Allied Photographics Limited

அல்லைட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

கஸ்தூர் பில்டிங், ஜாம்ஷெட்ஜீ டாடா ரோடு, பம்பாய்-1

பிரதி வெள்ளி இரவு 8 மணிக்கு ரேடியோ சிலோனில் (31.48 மீட்டரில்) "போட்டோ-பெண்டஸி" (PHOTO-FANTASY) என்ற நிகழ்ச்சியில் இப்புதிய கேவர்ட் போட்டி பற்றிய இதர விவரங்களைக் கேளுங்கள்.



ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு காசியில் புதிதாகக் கட்டிய "மாளவியா பால"த்தைத் திறந்து வைப்பதற்கு இப்பொழுது சென்னை கவர்னராக இருக்கும் கனம் ஸ்ரீ பிரகாசா சென்றார். மிகப் பெரிய அந்தப் பாலத்தையும் அது அமைந்திருக்கும் அழகையும் உறுதியையும் பார்த்தார். "இதற்கு 'மாளவியா பாலம்' என்று பெயரிடுவது அவ்வளவு பொருத்த மில்லை. 'கணபதி பாலம்' என்று தான் பெயரிட்டு அழைக்க வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டவுடன் எல்லாரும் "யார் அந்த கணபதி!" என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அந்த கணபதி வேறு யாருமில்லை. மாளவியா பாலத்தை இன்ஜினீயர் உலகமே வியந்து போற்றும்படி கட்டிய இன்ஜினீயர் திரு எம். கணபதி, B. E., M. E. (Hons), M. I. E. (Ind)., அவர்கள்தான்.

புகழ்பெற்ற தஞ்சை ஜில்லாவில் திருவாரூருக்கு அருகில் உள்ள காக்கழனி என்ற கிராமத்தில் பிறந்தவர். இன்றைய தினம் இந்தியாவில் உள்ள மிகச் சிறந்த இன்ஜினீயர்களில் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார். அகில இந்தியாவும் வியக்கும்படி காரியங்கள் செய்து புகழ் பெற்ற பெருமையைப் பெற்றவர்.

கல்வி கேள்வியும் ஆராய்ச்சித் திறனும் திட்சண்யமான அறிவும் படைத்தவராதலால் நம்முடைய நாட்டின் வளர்ச்சி ஒன்றையே எண்ணி, நவீன வசதிகளைக் கொண்டு வீண் பொருள் விரயம் இல்லாமல் செயலாற்றி வருகிறார். இதிலேதான் மக்களுக்கும் நன்மையுண்டு; இந்தியாவுக்கும் பெருமை உண்டு என்ற நோக்கம் கொண்டவர். வெறும் பதவியை விரும்பும் சுயநலப் பாதையில் செல்லாமல் தேசப்பணிக்குத் தாம் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து அற்புதமான முறையில் பணியாற்றி வருகிறார்.

சுதந்திர இந்தியாவில் புதிதாக சித்தரஞ்சன் ரயில் இன்ஜின் கட்டும் தொழிற்சாலை ஆரம்பித்தார்கள் அல்லவா! அதற்குத் தலைமை இன்ஜினீயராகச் சர்க்கார் அவரை நியமித்தனர். சர்க்கார் அவர்மீது வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. உலகமே வியக்கும் வண்ணம் அந்தத் தொழிற்சாலையை அமைத்து விட்டார். பதினைந்து கோடி ரூபாய் செலவில் ஐந்து பெரிய தொழிற்சாலைகளையும், அதையொட்டி 5,000 வீடுகள் கொண்ட அருமையான நகரையும் நிர்மாணித்தார். ஆனால் அங்கு அவர் கட்டிய வீடுகளுக்கெல்லாம் சிகரம் போன்றது தொழிலாளர்களுக்காகக் கட்டிக் கொடுத்த வீடுகள்தான். ஆறு ரூபாய் வாடகையில் குளிக்கும் அறை, 'பிளஷ் அவுட்' என்னும் சுகாதார வசதி ஆகியவைகளை அமைத்துக் கொடுத்ததை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். அந்த வீடுகளைப் பார்த்த நேருஜி அவர்கள் "வீடென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்" என்று பல முறை வியந்து பாராட்டியிருக்கிறார்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய ரயில்வண்டி கட்டும் தொழிற்சாலையைச் சென்னை பெரம்பூரில் காந்தி ஜயந்தி யன்று பிரதம மந்திரி நேரு திறந்து வைத்தார் அல்லவா! அந்தத் தொழிற்சாலையைக் கட்டுவதற்கு வேண்டிய எல்லாத் திட்டங்களையும் வகுத்து ஆரம்பித்து வைத்தவர் ஸ்ரீ கணபதி.

கடற்கரை துறைமுக அபிவிருத்தியிலும், அவருடைய சாதனை அபாரமானது. பம்பாயிலிருந்து ஏறக்குறைய இருநூறு மைல்களுக்கு அப்பால் உள்ள கண்டலா துறைமுகத்தை இந்தியத் துறைமுகங்களுக்குள் சிறந்ததாக மாற்றி அமைத்து விட்டார். கண்டலா துறைமுகத்தில் அவர் அமைத்துள்ள எண்ணெய் இறக்கும் துறைமுகத்தைப் பார்த்த ஸ்டாண்டர்ட் வாக்குவம் எண்ணெய்க் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸர் பர்ட்டன் "இந்தியாவுக்கு ஒரு இன்ஜினீயர்" என்று திரு கணபதியைப் போற்றிப் பாராட்டினார்.


இவ்வாறு பல துறைகளில் அபாரமாகச் சேவை செய்து புகழ் பெற்ற திரு கணபதியை இப்பொழுது மேற்கு பிராந்திய ரயில்வே ஜெனரல் மானேஜராக நியமித்திருக்கிறார்கள். திரு கணபதி அவர்களின் சேவையினால் மேற்கு பிராந்திய ரயில்வே சிறப்பும் மேன்மையும் அடையும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு கணபதிக்கு இப்பொழுது வயது ஐம்பத்தொன்றுதான் ஆகிறது. பார்த்தால் முப்பத்தைந்து வயது நிரம்பிய இளைஞரைப் போல் தோன்றுகிறார். ஆனால் நூறு ஆண்டுகள் ஒரு ஸ்தாபனமே செய்ய வேண்டிய தொண்டைச் சிறந்த முறையில் அவர் செய்திருக்கிறார்.

தமிழ் நாட்டில் பிறந்த ஒருவர் அகில இந்தியாவிலும் புகழ் பெற்றிருப்பது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் உண்மையாகவே பெருமைப்பட வேண்டும்!

அவருடைய அபாரமான சேவையைப் பாராட்டிச் சென்ற ஆண்டு "பத்மபூஷணம்" என்ற ஜனாதிபதி விருதை அவருக்கு அளித்துக் கௌரவப்படுத்தினார்கள்.

நாமும் அவருடைய படத்தை இந்த வாரத்து அட்டையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியிட்டுப் பாராட்டுகிறோம்.




தமிழகத்தில் நேரு


அக்டோபர் முதல் வாரத்தில் பிரதமமந்திரி ஜவாஹர்லால் நேரு தமிழ் நாட்டில் மின்னல் வேகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். இந்தியாவுடன் இணைந்த காரைக்கால் புதுச்சேரி ஆகிய ஊர்களுக்கும் சென்றார். சென்ற இடங்களில் எல்லாம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக லட்சக் கணக்கில் கூடி நின்று நேருஜியை வரவேற்றனர். இந்த வைபவங்களில் நமது விசேஷ புகைப்பட நிருபர் காமிராவுக்குள் அகப்பட்ட சில காட்சிகளே இந்தப் பக்கங்களில் காணலாம்.







1. காஞ்சீபுரம் பொதுக் கூட்டத்தில் நேருஜி. 2. காஞ்சீபுரம் தெருக்களில் கூடியிருந்த கூட்டத்தை நேருஜி பார்க்கிறார். 3. புதுச்சேரி அரவிந்த ஆஸ்ரமத்தில் அன்னையுடன் இந்திரா காந்தியும், நேருஜியும். 4. கடலூர் பொதுக் கூட்டம். 5. வேலூரில் கூடியிருந்த மாபெரும் ஜனத்திரள். 6. திருச்சி நகரில் கூடியிருந்த மக்கள். 7. விசேஷ அலங்காரத்துடன் விளங்கிய தஞ்சாவூர் பொதுக்கூட்ட மேடையும், உற்சாகமான பெருங் கூட்டமும்.





சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

90. இந்திரஜித்து மாண்டான்

''நான் உயிருடன் இருக்கத் தாங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?'' என்றான் இந்திரஜித்து.

இப்படித் தகப்பனுக்குத் தைரியம் சொல்லி விட்டு, சேனையைத் திரட்டிக் கொண்டு யுத்த களம் சென்றான்.

வானர சேனையைத் தாக்கி முறியடித்து லக்ஷக்கணக்கான உயிர்ச்சேதமும் படுகாயங்களும் உண்டாக்கினான். வானர சேனை தோல்வியுற்று ஒன்றும் செய்ய முடியாமல் தத்தளித்தது.

ராம லக்ஷ்மணர்களும் இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டு பிரக்ஞையற்றுக் கிடந்தார்கள். அரக்க வீரன் கவலை கொண்டிருந்த தந்தையிடம் இந்தப் பெரிய வெற்றியைச் சொல்லிச் சந்தோஷப் படுத்தலாம் என்று சென்றான்.

* * *

விபீஷணன் வானரத் தலைவர்களைத் தேடித் தேடிக் கண்டு பிடித்துத் தேற்றிக் கொண்டு வந்தான்.

ஜாம்பவான், அரை ஜீவனாகக் கிடந்தவன் மெதுவாகச் சென்று வானரர்களை விசாரித்தான். 'மாருதி உயிரோடிருக்கிறானா?' என்று கேட்டான். மாருதி 'இதோ இருக்கிறேன்' என்று வந்து ஜாம்பவானின் பாதத்தில் பணிந்து நமஸ்கரித்தான்.

''அப்பனே! உடனே வடக்கே செல்வாய். கடலைத் தாண்டி இமயமலைத் தொடருக்குப் போய் ரிஷப பர்வதத்துக்கும் கைலாச பர்வதத்துக்குமிடையில் இருக்கும் ஓஷதி பர்வதத்தின் உச்சியில் நான்கு மருந்துச் செடிகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு வந்தாயானால் ராம லக்ஷ்மணர்களும் வானர சேனையும் நினைவு அடைந்து, ரணங்கள் தீர்ந்து, ஆரோக்கியம் அடைவார்கள். இதைக் காலதாமதமின்றி உடனே செய்வாய். இதைச் செய்யக் கூடியவன் நீ ஒருவன்தான்'' என்றான்.

* * *

அவ்வாறே ஹனுமான் குதித்துக் கிளம்பினான். ஆகாய மார்க்கமாகச் சென்று குறிப்பிட்ட பர்வதத்தை அடைந்தான். ஆனால் ஓஷதிகளைக் கண்டெடுக்க அவனால் முடியவில்லை. அப்படியே முழு பர்வதத்தைத் தூக்கியெடுத்துக் கொண்டு லங்கைக்குத் திரும்பினான்.

* * *

ஹனுமான் தூக்கி வந்த சஞ்சீவி மலை ஆகாயத்தில் லங்கையை நெருங்கிய உடனே ராம லக்ஷ்மணர்களும் வானர சேனையும் உடலில் ஏறிய சரங்கள் நழுவி, காயங்கள் ஆறி, பூரண சுகநிலையில் எழுந்து நின்றார்கள்.

* * *

சுக்ரீவன் ராமனிடம் கலந்து யோசித்துச் சில வானரர்களைப்

பொறுக்கியெடுத்து, லங்கைக்குள் பிரவேசித்து நகரத்துக்கு நெருப்பு வைக்கும்படி உத்தர விட்டான்.

அப்படியே வீரர்கள் ராத்திரி மூன் ஜாமத்தில் தீவட்டிகளுடன் பிரவேசித்தார்கள். காவலாளிகளை அடித்துத் தள்ளி லங்கையிலுள்ள கோபுரங்கள், மாளிகைகள் இவற்றுக்கு நெருப்பு வைத்தார்கள். ஆயிரக்கணக்கில் வீடுகள் எரிந்து சாம்பலாயின. செல்வமும் நாகரிகமும் நிறைந்த லங்கா நகரம் கோரமான நாசம் அடைந்தது.

இந்தச் சம்பவத்தை வால்மீகி முனிவர் மிக விவரமாகச் சித்திரித்திருக்கிறார். அதைப் படித்தால் இந்த யுகத்தில் நடத்தப்படும் யுத்தங்களில் நடைபெறும் நகர நாசக் கதையாகவே காணப்படுகிறது.

வானரர்களால் லங்கா நகரம் எரிக்கப்படுவதைக் கண்ட ராவணன் பெருங் கோபம் கொண்டு கும்பகர்ணனுடைய புத்திரர்களான கும்பன் நிகும்பன் இவர்களை யூபாக்ஷன் முதலிய அரக்க வீரர்களுடன் யுத்தகளத்துக்கு அனுப்பினான். ராக்ஷசர்களுக்கும் வானரர்களுக்கும் கோர யுத்தம் நடந்தது.

கும்பன் சுக்ரீவனாலும் நிகும்பன் மாருதியாலும் வதம் செய்யப்பட்டார்கள்.

கரனுடைய மகன் மகராக்ஷன் என்ற அரக்கன் ராமனையே எதிர்த்து ராமனுடைய ஆக்னேய அஸ்திரத்துக்கு இரையானான்.

இன்னும் பல பெரிய அரக்கர்கள் மாண்டார்கள். அதன்மேல் இராவணன் சொல்லின்படி இந்திரஜித்து மறுபடியும் புறப்பட்டான். இந்திரஜித்து அசுர வேள்வி ஒன்று செய்து, அதன் பயனாக ஆகாயம் ஏறிப் பார்வைக்கு மறைந்து, யுத்தம் செய்தான்.

* * *

இந்திரஜித்து தன்னுடைய மாய வித்தையினால் ஒரு பொய்ச் சீதையை உண்டாக்கி அவளைத் தேரில் ஏற்றிக் கொண்டு வானர சேனைக்கு எதிரில் சீதையை நிறுத்தி அவளை அவர்கள் முன்னிலையில் கொன்றான். இதைக் கண்டு வானர வீரர்களும் மற்றவர்களும் ஏமாந்து போய் இனி யுத்தம் செய்து என்ன பயன் என்று யுத்தத்தை நிறுத்தி விட்டு ராமனிடம் போய் யோசிக்கச் சென்றார்கள். இவ்வாறு ஜாலம் நடத்திவிட்டு இந்திரஜித்து வேறொரு பெரிய அசுர யாகம் செய்யச் சமயம் செய்து கொண்டான். இது வானர வீரர்களுக்காவது ராமலக்ஷ்மணர்களுக்காவது தெரியாது. அவர்கள் சீதை உயிரிழந்ததைப் பற்றி ஆறாத துக்கம் அடைந்து இன்னது செய்வது என்று தோன்றாமல் அறிவு இழந்து கிடந்தார்கள். அப்போது விபீஷணன் வந்து என்ன விஷயம் என்று விசாரித்தான். நடந்ததையெல்லாம் அவனுக்குத் தெரிவித்தார்கள். "ஐயோ, இப்படி நீங்கள் மோசம் போனீர்களே, ஒருநாளும் ராவணன் சீதையைக் கொல்ல விடமாட்டான், இது ஒரு யுக்தி. பொய்யும் மாயையும் செய்து இந்திரஜித்து



தன்னுடைய சூழ்ச்சியை நிறைவேற்றப் பார்க்கிறான். மற்ற எவ்விதத்திலும் காரியம் நிறைவேறாது என்று அவன் இப்போது அசுரயாகம் செய்யப் போயிருக்கிறான். அது முடிந்து விட்டால் பிறகு நம்மால் அவனை ஜெயிக்க முடியாது. ஆனபடியால் உடனே அந்த யாகத்தை நாம் தடுத்து விட வேண்டும். சீதை இறந்தாள் என்று எண்ணி ஏமாந்து போகாதீர்கள். லக்ஷ்மணன் உடனே சென்று இந்திரஜித்தினுடைய வேள்வியைக் கலைத்துவிட வேண்டும்" என்று யோசனை சொன்னான்.

இந்த யோசனையே சரி என்று ஒப்புக்கொண்டு ராமசந்திரன் தம்பியை அனுப்பினான். அவனுடன் ஆஞ்சநேயனும் பல வானரர்களும் விபீஷணனும் சென்றார்கள்.

இந்திரஜித்து பூத கணங்களுக்குச் செய்ய விருந்த யாக பூமிக்குச் சென்றார்கள். வேள்வி தடைப்பட்டு அவ்விடம் வெகு நேரம் பெரும் யுத்தம் நடந்தது. தேரின்மேல் நின்று ராவண குமாரன் பாணங்கள் செலுத்தினான். லக்ஷ்மணன் ஆஞ்சநேயன்மேல் நின்று பாணங்கள் செலுத்தினான். இருவரும் விற்போரில் நிபுணர்கள். ஒருவருக்கு ஒருவர் குறைந்தவர்களல்ல. நிகரற்ற திறமையுடன் வெகுநேரம் யுத்தம் நடத்தினார்கள். விபீஷணன் லக்ஷ்மணனுக்கு உற்சாகம் ஊட்டிக் கொண்டு நின்றான். இந்திரஜித்தின் தேர் அழிந்தது. பிறகு தரையில் நின்று இருவரும் போர் செய்தார்கள். முடிவில் லக்ஷ்மணன் இந்திராஸ்திர மந்திரம் சொல்லி ராமன்மேல் ஆணையிட்டு பாணத்தைச் செலுத்தினான். இந்திரஜித்தின் தலை அறுபட்டு ஜொலித்துக்கொண்டு தரையில் விழுந்தது. தேவதானவ கந்தர்வர்கள் ஆகாயத்திலிருந்து புஷ்ப மாரி பெய்தார்கள்.

இந்திரஜித்தை வீழ்த்தி விட்டு லக்ஷ்மணன் ராமன் இருந்த இடம் சென்றான். உடம்பெல்லாம் காயம் பட்டு ரத்தம் பெருகிய நிலையில் லக்ஷ்மணன் மெள்ள ஜாம்பவான் ஹனுமான் இவர்கள் பேரில் சாய்ந்து நடந்தான். இந்திரஜித்தின் வதத்தை யறிந்த ராமன் தம்பியை ஆலிங்கனம் செய்து, "லக்ஷ்மணா! இனி ராக்ஷஸ குலம் மடிந்தது" என்று சொல்லி மகிழ்ச்சிப் பரவசப்பட்டான்.

அடக்கத்துடன் ஒதுங்கி நின்ற லக்ஷ்மணனை ராமசந்திரன் தன் மடியின் மேல் உட்கார வைத்து, உச்சி மோந்து தன் ஆனந்தத்துக்குப் போக்கு விட்டுப் பேசலானான்: "ஒருவராலும் செய்ய முடியாத வீரச்செயலைச் செய்து தீர்த்தாய். ராவணனுடைய வலது கை உன்னால் இன்று வெட்டப்பட்டது. விபீஷணனுக்கும் ஹனுமானுக்கும் உனக்கும் சமானம் யார்? இனி எனக்கு ஒரு கவலையுமில்லை. இந்திரனை ஜெயித்த வீரனை நீ ஜெயித்து வதம் செய்து விட்டாய். சீதையை அடைந்து விட்டேன் என்றே எண்ணுகிறேன்" என்றான்.

* * *

இந்திரஜித்து லக்ஷ்மணனால் வதம் செய்யப்பட்டான் என்கிற செய்தி ராவணனுக்கு எட்டியது. "உன் மகனை விபீஷணனுடைய சகாயத்தைக் கொண்டு லக்ஷ்மணன் கொன்றான்" என்று சொல்லக் கேட்டதும் அவன் துக்கமும் கோபமும் சமுத்திரம்போல் பொங்கி எரியும் சுடர் எண்ணெய்த் துளிகள் போல் கண்ணீர் விட்டான். அரக்க அரசனுடைய வாயினின்று புகையும் நெருப்புமாக மூச்சு வெளி வந்தது.

"ஐயோ! என் அருமைக் குழந்தாய்! ஒப்பற்ற வீரனே! மகேந்திரனை வென்ற சூரனே! யமன் வெற்றியடைந்து விட்டானா! நீ வீரசுவர்க்கம் அடைந்து விட்டாய். நான் துக்கப் படலாகாது!" என்றான்.

"இந்திரஜித்து மாண்டானா? உலகம் எனக்கு சூன்யமாகிப் போய் விட்டது" என்றான் மறுபடியும்.

"மந்தோதரியையும் உன் பிரிய மனைவியையும் என்னையும் விட்டுப் போய் விட்டாயே! உன் பிரதிக்ஞையை நிறைவேற்றாமலும், பழி தீர்க்காமலும் எங்களை விட்டுப் போய் விட்டாயே!" என்று கதறினான்.

"இந்த விபத்துக்களுக்கெல்லாம் காரணமான ஜானகியைக் கொன்று விடுவதே நலம். என் குமாரன் மாயை செய்து சீதையைக் கொன்றதாகக் காட்டினான். இன்று உண்மை சீதையையே நான் வெட்டிக் கொல்லப் போகிறேன்" என்று கத்தி எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

சில மூர்க்க அரக்கர்கள் ராவணன் கோபமாகப் புறப்பட்டதைக் கண்டு சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். ஆனால் சுபார்சவன் என்ற மந்திரி ராவணனைத் தடுத்தான்.

"மகாராஜனே! என்ன செய்யத் துணிந்தீர்! என்ன காரியம் செய்யப் போகிறீர்! தசக்ரீவா! குபேரனுடைய தம்பியாகிய நீர் ஒரு பெண்ணைக் கொன்று, அந்த அவமானத்தையும் தோஷத்தையுமா சம்பாதிக்கப் போகிறீர்? கோபத்தை இவ்விதத்திலா போக்கு விடுவது? வேதங்களை ஓதி சகல வித்தையும் கற்று விரதம் அனுசரித்த நீர் இப்படிச் செய்யலாகாது. உமக்கு நிகர் யார்? யுத்தத்தில் உம்மை எதிர்ப்பவர்கள் யார்? யுத்தத்தில் வென்று சீதையை கிரமமாக அடைவீர். சந்தேகமில்லை. ராமன் பேரில் கோபத்தைச் செலுத்துவோம். இன்று சதுர்தசி. இரவு கழிந்தால் நாளை அமாவாசை. எல்லா பலத்தையும் கொண்டு லங்கையிலிருந்து புறப்பட்டு ராம லக்ஷ்மணர்களை வதம் செய்து வெற்றி பெறுவீர். பிறகு சீதையை அடைவீர். பிரம்மாவிடமிருந்து பெற்றிருக்கும் கவசத்தை தரித்து ரதம் ஏறிக் கிளம்புவீராக!" என்றான்.

சுபார்சவன் சொன்னதே ஹிதமென்று ராவணனும் ஒப்புக் கொண்டான்.

சிம்மாசனத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு கொஞ்ச நேரம் பேசாமல் யோசனையில் ஆழ்ந்த வண்ணமாக இருந்தான். பிறகு சேனைத் தலைவர்களுக்குக் கை கூப்பி, "நீங்கள் சகல பலத்துடனும் உடனே சென்று இந்த ராமனை வதம் செய்யுங்கள். உங்களால் முடியா விட்டால் நானே சென்று அவனை ஹதம் செய்வேன்" என்றான்.

* * *


மலைகளைப் போன்ற ரதங்களிலும் யானைகள் குதிரைகள் ஏறியும் ராக்ஷச சேனை முழு பலத்துடன் யுத்தத்திற்குப் புறப்பட்டது.

வானரர்கள் கற் பாறைகளையும் மரங்களையும் பிடுங்கி எடுத்து ராக்ஷசர்களை பலமாகத் தாக்கினார்கள். ராக்ஷசர்களும் வானரப் படையை பலமாகத் தாக்கினார்கள். ரத்த வெள்ளம் ஆறாகப் பெருகிற்று. வானரர்கள் தாவித் தாவி அரக்கர்களையும் அவர்கள் ரதங்களையும் வாகனங்களையும் ஆயுதங்களையும் ஒடித்தும் அறுத்தும் கிழித்தும் துவம்சம் செய்தார்கள். ஒவ்வொரு ராக்ஷசனையும் அநேக வானரர்கள் சூழ்ந்து கொண்டு கொன்றார்கள்.

ராக்ஷசர்களும் வானரர்களைச் சும்மா விடவில்லை. பலமாகத் தாக்கிப் பதினாயிரக் கணக்கில் கொன்றார்கள்.

* * *

ராமன் தன் வில்லை வளைத்து அரக்கர்கள் பேரில் சரமாரி பொழிந்தான். நெருப்பைப் போல் ராக்ஷச சேனையை அவன் பாணங்கள் எரித்தன. தங்களுடைய சகாக்கள் விழுந்து மடிவதைத்தான் கண்டார்கள்; அம்பு மழையில் ராமனை அவர்கள் காணவில்லை. அநேக ராமன்களைக் கண்டார்கள். எங்கும் அவனைக் கண்டார்கள், எண்ணற்ற ராக்ஷசர்கள் மாண்டார்கள். எண்ணற்ற யானைகளும் குதிரைகளும் மடிந்தன. ரதங்கள் ஒடிந்தன. அரக்கர் சேனை அழிந்தது. எஞ்சினவர்கள் சிதறி ஓடினார்கள். தேவர்களும் கந்தர்வர்களும் சித்தர்களும் ராமனைக் கொண்டாடினார்கள். லங்கையில் ராக்ஷஸ ஸ்திரீகள் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு பெருங் கூக்குரலிட்டு பிரலாபித்தார்கள். ராவணனுடைய அறிவீனத்தால் இப்படி ஆயிற்றே என்று அழுதார்கள்.



சங்கீத மண்டப அஸ்திவாரவிழா

1



3




4

அக்டோபர் 5ல் சென்னை வித்வத் சபையின் சங்கீத மண்டப அஸ்திவார விழா கோலாகலமாக நடைபெற்றது. மண்டப உதவி நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு முன்னிலையில் நிகழ்ந்தது. பிறகு சங்கீத மண்டபத்துக்கு நேருஜி தம் பொற்கரங்களால் அஸ்திவாரம் இட்டார்கள். இந்த விழாக் காட்சிகளை இரு பக்கங்களிலும் உள்ள படங்களில் காணலாம்.

1. ஜவாஹர்லால் நேரு அவர்களைச் சங்கீத வித்வத் சபையின் தலைவர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும், வித்வத் சபை உபதலைவரும் ஹிந்துப் பத்திரிகை சொந்தக்காரருமான ஸ்ரீ கஸ்தூரி சீனிவாசன் அவர்களும் வரவேற்கிறார்கள். 2. வித்வத் சபைக் காரியதரிசி டாக்டர் ராகவன் முதலிய சபை நிர்வாகிகள் நேருஜியை அழைத்து வருகிறார்கள். 3. வித்வத் சபையின் விழா வெளியீட்டைப் பார்த்து மகிழ்கிறார் நேருஜி. 4. நேருஜியே வியந்து கூறும்படியான மிகப் பெரிய மாலையை 'கல்கி' மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ சதாசிவம்




5 6



7




8




9

அணிவிக்கிறார். 5. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி நடைபெறுகிறது. 6. அன்றைய வித்வத் சபையின் தோற்றம். 7. மண்டபத்துக்கு அஸ்திவாரமிட்ட பின் நேருஜி பேசுகிறார். 8. இன்ஜினியர் ஸ்ரீ கிட்னின் அவர்களிடமிருந்து கடைசி பொட்டு சிமிண்ட் கலவையில் எடுத்து அஸ்திவாரத்துக்கு அடியில் நிரவினார் நேருஜி. வித்வத் சபையின் சார்பில் நேருஜிக்கு வரவேற்புரை கூறிய ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் மலர்ந்த முகத்துடன் நிற்கிறார். 9. தீப ஜோதிக்கு மத்தியில் இருப்பதுதான் நேருஜி அஸ்திவாரமிட்ட கல். 10. விழாவுக்கு வந்து சிறப்பித்த ராஜாஜியுடன் நேருஜி. 11. சங்கீத மண்டபத்துக்குப் பிளான் வரைந்து கொடுத்த ஸ்ரீ [illegible] அவர்களை ஜவாஹர்லால் நேரு பாராட்டுகிறார்.



10



11



மா மரம் நிமிர்ந்து நின்று மார்பைப் பார்த்துக் கொண்டது. தேக்கு மரமும் தேவதாரு மரமும் தெம்மாங்கு பாடின. சீடு மரம் "ஆகா! அற்புதம்" என்றது. சால் மரம் பெருமை தாங்காமல் "தாம் தோம்" என்று குதித்தது. காட்டு மரங்கள் எல்லாம் தங்கள் கண்டத்தைத் திறந்து பாட ஆரம்பித்தன. மூங்கில் மரம் மூக்கைத் நீட்டிக் கொண்டு கதகளி நடனம் புரிந்தது. பூவரச மரம் "பாரத நாடு என்னுடையது!" என்றது. வேப்ப மரம் வீறு கொண்டு எழுந்து பரத நாட்டியம் ஆடியது. செனர் மரம் "காஷ்மீரம் இந்தியாவுக்கே!" என்றது. இன்னும் சில பெயர் தெரியாத விசித்திர மரங்கள் எல்லாம் "என்ன விசேஷம்!" என்று கேட்டன. கட்டை குட்டையான கறுப்பு மரம் ஒன்று "வாருங்கள்! வாருங்கள்" என்று வணங்கி வரவேற்றது.

இந்தியாவில் உள்ள எல்லாப் பாகத்தைச் சேர்ந்த பத்திரிகைப் பிரதிநிதிகளும் டேராடூனில் உள்ள வன ஆராய்ச்சிக் கழகத்துக்குள் சென்று "காடு வளர்க்க வேண்டியதுதான்!" என்று சொன்னதினால்தான் மரங்கள் எல்லாம் இவ்வளவு குதூகலப்பட்டன.

மரங்களில் எல்லாம் சிறந்தது தேவதாரு என்று மர ஆராய்ச்சி நிபுணர்கள் சொன்னதைக் கேட்டதும், மற்ற மரங்கள் தேவதாருவைப் பார்த்துப் பொறாமைப் படவில்லை. பாரத நாட்டின் செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வமான தேவதாருவுக்கு இந்தப் பெருமை ஏற்பட்டதைக் குறித்து எல்லா மரங்களும் சந்தோஷப்பட்டன. ஒன்றை ஒன்று கட்டிக் கொண்டு கூத்தாட ஆரம்பித்தன. அப்படி அவைகள் கண் மண் தெரியாமல் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து கொண்டு உற்சாகமாக ஆடியதால் காட்டுத் தீயே வந்து விடுமோ என்று பயந்து மழை 'சோ' என்று பெய்தது.

இந்த நிகழ்ச்சிகள் எங்கே நடந்தன தெரியுமா! டேராடூன் வன ஆராய்ச்சிக் கழகத்தில் இருந்த 'மியூஸியம்' கண்காட்சியில்தான்.

** ** **

கவியரசர் பாரதியார் சுதந்திர பாரத நாட்டுக்காக முப்பது ஆண்டுகளுக்கு முன்பே பல அருமையான திட்டங்கள் வகுத்துக் கொடுத்து விட்டுப் போனர். அதிலே அவர் சொல்லுகிறார்:

"காரியம் செய்வோம்,
நல்ல காடு வளர்ப்போம்!
கலை வளர்ப்போம்,
கொல்லருலை வளர்ப்போம்!"

என்று. அவருடைய வாக்கை நிறைவேற்றி வைப்பதற்கு நமது இந்திய சுதந்திர சர்க்கார் இப்பொழுது அரும்பாடுபட்டு வருகிறார்கள். பாலைவனத்தைச் சோலை வனமாக மாற்றி வருகிறார்கள். ராஜஸ்தான் பாலைவனத்தில் அடர்ந்த காடு வளர்க்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

ஒரு நாட்டின் செழுமைக்கும் சிறந்த வேளாண்மைக்கும் இயற்கை வழங்கியுள்ள சாதனங்களில் சிறந்தது காடுகள்தான்.

மழை பெய்வதற்கு மலைகளும், காடுகளும் மிகவும் அவசியம். காடுகள் இல்லையேல் மழை பெய்யாது. மழை இல்லையேல் நாடு பஞ்சத்தால் அடிபட்டுப் பாழாக வேண்டியதுதான்.

அதாவது காடுகள் இல்லாத நாடு பாலைவனம் ஆகிவிடும். மரங்களும், வனங்களும் இல்லாவிட்டால் ஊற்றுக் கண்கள் அடைபட்டுப் பூமி வறண்டு போய் விடும்.


காடுகள் சீதோஷ்ண நிலைமையைக் கட்டுப் படுத்தும். நதிகளின் வெள்ளத்தினால் நாசம் ஏற்படாமல் நாட்டைக் காப்பாற்றும். பருவ கால மழை தவறாமல் பெய்வதற்குக் காடுகள் பேருதவியாக இருக்கும்.

அதனால்தான் காடு வளர்ப்பதற்கும், இருக்கும் காடுகளைக் காப்பாற்றுவதற்கும் இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அருமையான "வன ஆராய்ச்சிக் கழகம்" ஒன்றை அமைத்து அதன் மூலம் எத்தனையோ அபூர்வமான முறையில் காட்டை வளர்த்து நாட்டின் கேட்டைப் போக்க வழி செய்து வருகிறார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த வன ஆராய்ச்சிக் கழகத்தைப் பார்க்கும் பாக்கியம் எனக்குச் சென்ற ஜூன் மாதம் கிடைத்தது.

வன ஆராய்ச்சிக் கழகம்

வன ஆராய்ச்சிக் கழகக் கட்டடத்தை நெருங்கும்போது பாரத தேசத்தின் அற்புதமான ஆராய்ச்சி நிறைந்த கலைக் கோயிலை நெருங்குகிறோம் என்ற உணர்ச்சிதான் மேல் ஓங்கி இருந்தது! உலகிலேயே மிகப் பெரிய வன ஆராய்ச்சிக்கல்லூரி இது



காடு வளர்ப்போம்

என்று ஏற்கனவே தெரிந்து கொண்டிருந்தோம். அதனாலெல்லாம் அந்த வன ஆராய்ச்சிக் கல்லூரியை நெருங்கும்போது மனத்தில் உணர்ச்சி பெருகியது.

என்ன காடுதானே! உயிரும் உணர்ச்சியும் அற்ற காய்ந்த மரங்கள் உள்ள இடம்தானே! என்று எண்ணிக்கொண்டு வன ஆராய்ச்சிக்கழகத்துக்குள் போனால் அவர்கள் வன ஆராய்ச்சிக் கழகத்தின் அருமையைத் தெரிந்து கொள்ள முடியாது. பொதுவாக ஆராய்ச்சிச் சாலைகளைப் பார்க்கும் முறையும் இது அல்ல. ஆராய்ச்சிக்கும் வெறும் கண் காட்சிக்கும் வெகு தூரம். ஏதோ கண்காட்சிகளைப் பார்ப்பது போல நினைத்துக் கொண்டு வன ஆராய்ச்சிக் கழகத்துக்குள் பிரவேசிப்பதில் பயன் ஒன்றுமில்லை.

அவ்விதமின்றி உண்மையாகவே காட்டை வளர்க்கும் அவசியத்தையும், மரங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள முக்கியத்தையும் உணர்ந்து, ஆராய்ச்சிக் கலைச் செல்வம் நிறைந்துள்ள அந்த வன ஆராய்ச்சிக் கலைக் கோயிலுக்குள் பிரவேசிக்கலாம் வாருங்கள்.

வன ஆராய்ச்சிக் கழகம் உள்ள கட்டடம் ஆராய்ச்சிக் கலைத் தெய்வம் நடமாடும் அழகான கோயிலாகும். கட்டடத்துக்குள் நுழைவதற்கு முன்னதாகவே அந்தக்கட்டடத்தின் அகலமும், நீளமும், உயரமும், பெரிய பெரிய பிரம்மாண்டமான தூண்கள் கட்டடத்தைத் தாங்கி நிற்கும் அழகும் நம்முடைய கவனத்தைக் கவர்கின்றன.

அந்தக் கட்டடத்தின் எல்லைக்குள் நுழைந்ததும் உண்மையில் நாம் ஏதோ புது உலகத்தில், இதுவரையில் பார்த்தறியாத உலகத்தில் பிரயாணம்செய்வதாய் நினைத்துக் கொள்வோம். அவ்வளவு அழகும், வசதியும் நிறைந்த அபூர்வமான இடத்தில் கட்டடம் அமைந்திருக்கிறது. கட்டடத்துக்குள்செல்லுவதற்கு அமைந்துள்ள சாலையோ சுத்தமான கருங்கல், காங்க்ரீட் சாலை. அதில் அப்பழுக்கு காண முடியாது. இரண்டு பக்கங்களிலும் பசிய மரங்கள், மலர் குலுங்கும் செடிகள். அதற்கு அப்பால் நெருக்கமான பெரிய பெரிய மரங்கள் அடர்ந்த காடுகள். இவைகளுக்குப் பின்னால் இமய மலையின் கம்பீரமான இயற்கை அழகு ததும்பும் எழில் மிக்க தோற்றம். அதற்கும் மேலே எல்லையற்று விரிந்து கிடக்கும் நீல வானம்.

இந்த மாதிரியான இயற்கைச் சூழ்நிலையில் ஆயிரத்து நூறு ஏக்கர் கொண்ட அற்புதமான வனத்துக்கு மத்தியில், ஏழு ஏக்கர் சுற்றளவில் இரண்டு மாடியுள்ள அந்த வன ஆராய்ச்சிக் கழகம் பெருமிதத்துடன் காட்சி தருகிறது.


நட்ட நடுவில் அமைந்திருக்கும் கம்பீரமான அந்தக் கட்டடத்தைச் சுற்றிச் சின்னஞ் சிறு வீடுகள், பள்ளிக்கூடம், மாணவர் விடுதி, ஆஸ்பத்திரி முதலியவைகளைக் காணலாம். அவைகள் எல்லாம் ஏதோ நம் பக்கத்தில் உள்ள கட்டடங்களைப் போல இருந்தாலும், அத்தகைய அழகான இயற்கைக் காட்சிகளுக்கு மத்தியில் இருப்பதால், அந்த வீடுகளில் வாழும் மனிதர்கள், பள்ளியிலே படிக்கின்ற











மேலே: வன ஆராய்ச்சிக் கழகத்தின் எழில் மிகுந்த கட்டடம். கீழே: ஆராய்ச்சிக் கழகத்துக்குள் இருக்கும் அதிசயமான தொழிற்சாலை.

இந்திய சரித்திரத்தை—அதாவது எழுநூற்று நாலு வருஷத்துச் சரித்திரத்தை மளமள வென்று சொல்லிக் கொண்டிருந்தது காதிலே விழுந்தது. "எழுநூற்று நாலு வருஷங்களுக்கு முன்னால் இந்தியா இருந்த நிலைமை, இந்தியாவின் மீது முகம்மதியர்கள் படை எடுத்தது, முகம்மதியர் கைக்கு இந்தியா வந்தது, பிறகு அவர்களிடமிருந்து ரஜபுத்திரர்களிடம் போனது, மீண்டும் முகம்மதியர்களிடம் மாறியது, பின்னர் வெள்ளைக்காரர்களிடம் வந்தது, அவர்களிடம் பாரதநாடு அடிமைப்பட்டது எல்லாவற்றையும் நேரிலேயே பார்த்திருக்கிறேன். வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் எத்தனையோ கவர்னர் ஜெனரல்களைப் பார்த்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. சுதந்திரத்துக்காக ஏற்பட்ட எல்லா இயக்கங்களையும் பார்த்து விட்டேன். இப்பொழுது சுதந்திர நாடாக இந்தியா இருப்பதையும் பார்த்து விட்டு இங்கு வந்து நிம்மதியாக ஓய்வெடுக்கிறேன்" என்று சொன்னதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

எழுநூற்றுநாலு வருஷத்துச் சரித்திரத்தை நேரில் பார்த்த அந்தப் புண்ணிய புருஷர் யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் திரும்பிப் பார்த்தேன். எங்களுடன் வந்திருந்த சர்க்கார் அதிகாரி திரு திருவேதி ஒரு பெரிய மரத்தில்எழுதியிருந்த மேற்படி இந்திய சரித்திரத்தை இரைந்து படித்துக் கொண்டிருந்தார்.

எழுநூற்று நாலு வயதுள்ள மரத்தின் அடிப்பாகத்தைப் பலகை போல அறுத்துக் கொண்டு வந்து அந்தக் கண்காட்சியில் வைத்திருக்கிறார்கள். அதில் இந்த வருஷம் இந்திய அரசியலில் இன்னின்ன மாறுதல்கள் ஏற்பட்டன என்பதைச் சரித்திர ஆதாரத்துடன் வருஷம் மாதம் தேதியோடு குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள்.

சிறுவர்கள், தோட்டத்தில் உலாவுபவர்கள், ஆஸ்பத்திரியில் நோயுடன் படுத்திருக்கும் நோயாளிகள் ஆகியவர்களைப் பார்த்து அவர்களிடம் பொறுமைப்பட வேண்டியிருக்கிறது.


அபூர்வக் கண்காட்சி

வன ஆராய்ச்சிக் கழகக் கட்டடத்துக்குள் சென்றதும் முதலில் 'மியூஸியம்' அதாவது கண்காட்சி இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே மரங்களில் எத்தனை வகை உண்டோ அத்தனை வகை மரங்களும் பல்வேறு மாதிரியில் கலை உணர்ச்சியுடன் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக் கணக்கான மரங்களின் மாதிரிகள் இங்கு இருக்கின்றன. இங்குள்ள மரங்களைவிட இன்னும் சில மரங்கள் உலகில் வேறு எங்கேயாவது இருக்கலாம். ஆனாலும் இங்குள்ளவைபோன்று அத்தனை ஆயிரம் மரங்களின் மாதிரிகள் வேறு எங்குமே கிடையாது என்று சொன்னார்கள். ஆராய்ச்சி அறிவும், மரங்களைப் பற்றிய ஞானமும் உள்ள ஒருவர் அதனுள் நுழைந்து விட்டால் ஏதோ மரங்களின் ஆராய்ச்சிச் சொர்க்கத்துக்கே வந்து விட்டது போல மகிழ்ந்து போய் விடுவார்.

கண்காட்சியின் மத்தியில் நடுநாயகமாக உள்ள இடத்தில் போய் நின்றோம். யாரோ

மரங்களிலேயே சிறந்தது தேவதாரு என்று சொன்னேன் அல்லவா? அப்படிப்பட்ட தேவதாரு மரம்தான் அது. அந்த மரம் எழுநூற்று நாலு ஆண்டுகள் இருந்தாலும் மத்தியில் கெட்டுப் போகவில்லை. அப்படியே எஃகு போல உறுதியுடன் இருக்கிறது. அதன் முழு உருவமும் சிறிதும் சிதைந்து போகாமல் விளங்குகிறது. எழுநூற்று நாலு ஆண்டுகள் நிறைந்த மரம் என்பதை எப்படிக் கண்டு பிடித்தார்கள், தெரியுமா?

மற்ற மரத்துக்கும் தேவதாரு மரத்துக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். ஒவ்வொரு வருஷமும் ஒரு சிறு நூல் அளவு அந்த மரம் பருக்கிறது. அப்படிப் பருத்து வளரும் போது அங்கு ஒரு கோடு—ரேகை உண்டாகிறது. அந்த மரத்தின் நடுவில் சிறு புள்ளியில் இருந்து ஆரம்பித்து அதைச் சுற்றி வளையம் வளையமாக ரேகைகள் இருக்கின்றன. அந்த ரேகைகளைப் பெரிய பூதக் கண்ணாடியைக் கொண்டு பார்த்துக் கணக்கிட்டு எழுநூற்று



மார்கோ சோப்

வேப்பெண்ணெயிலிருந்து தயாரிக்கப்படுகிறது



சருமத்தை மிருதுவாக்கும், மார்கோ சோப்பின் விசேஷ நுரை, சருமத்துவாரங்களில் நன்கு ஊடுருவிச்செல்லும், சுத்தமாக்கும் தன்மையில் சக்திவாய்ந்தது. ஆகையால் சருமம் மழமழப்பாக, ஆரோக்கியமாக, இளமைப் பொலிவுடன் விளங்குகிறது. எனவே இது குடும்பத்திற்குகந்த இணையற்ற சோப்பாகும்.

சுகாதாரமானது
இனிய நறுமணமுள்ளது

மார்கோ சோப்

தயாரிப்பவர்கள்: கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்., கல்கத்தா-29.

CCK-1 TM

நாலு வயது நிறைந்த மரம் என்பதைக் கண்டு பிடித்து வைத்திருக்கிறார்கள்.

இன்னும் எத்தனையோ அதிசயங்கள் எல்லாம் அங்கு இருக்கின்றன. அடாடா! மரங்களில்தான் எத்தனை விதங்கள்! அந்த மரங்களில்தான் எத்தனை மாதிரிகள்! அவற்றின் தன்மைகளில்தான் எத்தனை வேறுபாடுகள்! இவற்றையெல்லாம் பார்க்கப்பார்க்க இயற்கையின் அற்புத விந்தைகளை எண்ணி எண்ணி வியக்க வேண்டியிருந்தது.

பச்சை மரமாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள மரத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, காய்ந்து போனவுடன் அதில் எவ்வளவு தண்ணீர் குறைந்து விடுகிறது என்பதை ஒரு இடத்தில் காட்டுகிறார்கள். மரங்கள் மனிதர்களுக்கு எப்படி எப்படியெல்லாம் உபயோகமாகின்றன என்பதையும் விளங்கும்படி செய்து வைத்திருக்கிறார்கள். துப்பாக்கி, விமானம், கப்பல், ரயில், மேஜை, நாற்காலி, விளையாட்டுச் சாமான்கள் இப்படி எல்லாவற்றையும் எந்தெந்த மரத்தைக் கொண்டு எந்த எதைச் செய்யலாம் என்பதைச் செய்து வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து விட்டு இன்னொரு பகுதிக்குச் சென்றோம்.

இந்தியக் காடுகள்

அங்கு சென்றதும் எனக்குத் திகைப்பாகி விட்டது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. கருங்கல்லும், சிமெண்டும் கொண்டு கட்டிய கட்டடத்துக்குள்ளிருந்து எப்படிக் காட்டுக்குள் வந்தோம் என்று பிரமித்துப் போனேன். அந்தப் பிரமிப்புத் தீருவதற்குள் "இதுதான் உத்தரப் பிரதேசத்தில் உள்ள காடுகள்" "இது மலையானத்தில் உள்ள காடுகள்" "இது இமயமலைப் பக்கத்திலுள்ள காடுகள்" என்றார் காட்டிலாகா அதிகாரி.

'டேராடூன் எங்கே! மலையான தேசமெங்கே! அது ஒரு கோடி, இது ஒரு கோடி அல்லவா!' என்று ஒன்றும் புரியாமல் தவித்தேன். என் மீதே எனக்குச் சந்தேகம் வந்து விட்டது. என்னோடு வந்திருந்தவர்கள் எல்லாரும் சுற்றிலும் இருப்பதைப் பார்த்த பிறகு தான் எல்லாம் சரியாகவே இருக்கிறது என்று எனக்குத் தைரியம் ஏற்பட்டது.

அதற்குள் "இங்கு இந்தியாவில் உள்ள எல்லாக் காடுகளுக்கும் மாதிரி செய்து வைத்திருக்கிறோம்" என்றார் காட்டிலாகா அதிகாரி.

"ஓகோ! அப்படியா!" என்று எல்லாரும் பெருமூச்சு விட்டோம். இந்தியாவில் உள்ள எல்லாவிதமான காடுகளுக்கும் பெரிய அளவில் 'மாதிரிக் காடுகள்' செய்து வைத்திருக்கிறார்கள். காட்டில் மரங்களை எப்படி வெட்ட வேண்டும் என்பதை அந்த மாதிரிக் காட்டில் வெட்டிக் காண்பித்தார்கள். காடுகள் வேகமாக வளர்வதற்கு நடு நடுவில் ஒவ்வொரு மரத்தை வெட்டி மரங்களின் நெருக்கத்தை எப்படிக் குறைப்பது என்று காண்பித்தார்கள். பாலைவனத்தில் புதிதாகக் காடு வளர்க்கும் அதிசய முறையைக் காண்பித்தார்கள்.

காடுகளில் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து காட்டில் தீ உண்டானால் அதனாலும் காடு அழிந்து விடுகிறது அல்லவா! குறிப்பிட்ட மரத்துடன் இன்னொரு மரம் சேர்ந்து உராய்வதால்தான் தீ ஏற்படுகிறது என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மரங்கள் காட்டுக்கு மத்தியில் இருந்தால் அந்த மரத்தை வெட்டி எடுத்து விடுவார்களாம்.

இன்னும் பலவித காரணங்களினால் நம் காடு அழிந்து விடுகிறது. காட்டில் உள்ள மரங்களுக்கு நோய் உண்டாகி அது பரவிக் காடுகளை அழித்து விடுமாம். அதற்காக அடிக்கடி காட்டுக்குள் சென்று மரங்களின் நிலைமையை ஆராய்கிறார்கள். ஏதாவது மரங்களுக்கு நோய் வந்தால் அதைக் கண்டு பிடித்துத் தீர்ப்பதற்கும் ஏற்பாடு செய்கிறார்கள்.

இந்த விவரங்களை யெல்லாம் காட்டிலாகா அதிகாரியைக் கேட்டுத் தெரிந்துகொண்டோம்.

"பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இவ்வளவு பெரிய நிலயம் அமைத்துக் காட்டிலாகாவைக் கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியமா! நூற்றுக் கணக்கான

மும்மூர்த்திகள் ஞாபகச் சின்னம்

தென்னாட்டு சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகள் பக்தி நிலையில் பரவசமாகி நின்று பாடப் பெற்றவை. சங்கீதத் துறையிலும், சாஹித்தியத் துறையிலும் ஒப்பற்ற மதிப்புப் பெற்றவை. அதனால்தான் இம் மும்மூர்த்திகளின் கீர்த்தனைகள் பாரத நாட்டுக்குப் பெருமையளிக்கும் விஷயங்களில் முக்கியமானவை யாகின்றன.

இந்தப் பெரிய சங்கீத சாகித்ய கர்த்தாக்களுக்குத் தக்க ஞாபகச் சின்னம் எழுப்புவது சிறந்த காரியம். இந்தப் புனிதப் பணிக்காக ஒரு செல்வாக்குள்ள கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். தென்னிந்தியக் கலை, சமயத் துறைகளில் முக்கியமான இடம் வகிக்கும் திருவாரூரில் இம் மும்மூர்த்திகளுடைய பிறந்த நாட்களைக் கொண்டாடவும் ஞாபகச் சின்னங்கள் எழுப்பவும் இக் கமிட்டி வேலையில் மும்முரமாக இறங்கி விட்டது என்று அறிந்து மகிழ்கிறேன்.

இத்தகைய முயற்சியில் நான் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது என் பெரும் பாக்கியம் எனக் கருதுகிறேன்.

— காசி சர்வகலாசாலைத் தலைவர் ஸி. பி. ராமசாமி ஐயர்

ரூபாய்ச் சம்பளத்தில் பல அதிகாரிகள் வேண்டுமா!'' என்று கேட்டார் ஒரு நிருபர்.

'' அவசியம்தான் '' என்றார் அதிகாரி.

'' ஏன்!''

'' என் அனுபவத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்'' என்று தம்முடைய அனுபவத்தைக் கூறினார் காட்டிலாகா அதிகாரி.

வன விலங்குகளின் உதவி

காட்டிலாகா அதிகாரிகள் பயங்கர மிருகங்கள் நிறைந்த காட்டுக்குள் புகுந்து சென்று காட்டில் உள்ள மரங்களைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். மரங்களுக்கு வியாதி வராமல் தடுக்க வேண்டும். மேலும் காடுகள் செழித்து வளர்வதற்கு வேண்டிய வழிகளைச் செய்ய வேண்டும்.

காட்டு மிருகங்கள்கூடக் காடு வளர்ப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. யானைகள் வெட்டிய மரங்களைத் தூக்கிக்கொண்டு வருவதற்கு உதவி புரிகின்றன. சிங்கம் புலி போன்ற கொடிய வன விலங்குகளின் உதவியைச் சொல்லி முடியாது. அவைகளும் அற்புதமான வகையில் உதவி புரியத்தான் செய்கின்றன.

வன விலங்குகள் எப்படிக் காட்டிலாகா அதிகாரிகளுக்கு உதவி செய்கின்றன என்பதைப் பாருங்கள். காட்டிலாகா அதிகாரிகள் அடிக்கடி காட்டுக்குள் புகுந்து காட்டின் நிலைமையை ஆராய்ந்து வர வேண்டும்.

அடர்ந்த காட்டுக்குள் புகுந்து சோதனை செய்து பார்க்கும் போது ஒரு சமயம் புலியின் பாதங்கள் பதிந்து இருந்ததைக் காட்டிலாகா அதிகாரி ஒருவர் பார்த்தார். அந்தப் புலி சென்ற வழியே அவரும் தொடர்ந்து சென்றார். ஒரு இடத்துக்கு வந்ததும் அந்தப் புலி வளைந்து சென்றதைக் கவனித்தார். அந்த இடத்தில் புலி வளைந்து செல்ல வேண்டிய காரணத்தைக் கண்டு பிடிக்க அவருக்கு ஆவல் உண்டாயிற்று. உடனே அங்கிருந்த காய்ந்த இலைச் சருகுகளைத் தள்ளிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! அந்த இடத்தில் இருந்த பெரிய மரம் ஒன்று வெட்டப்பட்டு, வெட்டிய அடி மரம் தெரியாமல் காய்ந்த இலைச் சருகுகளைப் போட்டு மூடியிருந்தது.

காவற்காரர்களைக் கூப்பிட்டுப் பயமுறுத்தி விசாரித்ததில் உண்மை வெளியாயிற்று. காட்டுக் காவலாளி ஒருவன், பிரபல மர வியாபாரியிடம் ஐந்நூறு ரூபாய் லஞ்சம் வாங்கிக் கொண்டு மரத்தை வெட்டிக் கொள்வதற்கு உதவியாக இருந்திருக்கிறான்.

'' ஒரு மரத்துக்கு ஐந்நூறு ரூபாய் லஞ்சமா!'' என்று ஆச்சரியப் பட்டோம்.

'' ஆமாம், சார்! அந்த மரம் என்ன மரம் தெரியுமா? தேவதாரு மரம். அதன் விலை ஐம்பதாயிரம் ரூபாய்! ஐம்பதாயிரம் ரூபாய் மரத்துக்கு ஏன் ஐந்நூறு ரூபாய் லஞ்சம் தரக் கூடாது!'' என்றார் அதிகாரி.

ஒரு தரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மேலே சொன்னார்: '' இது போல் லட்சக்கணக்கான தேவதாரு மரங்கள் இருக்கின்றன ஒவ்வொரு காட்டிலும். அதற்குக் கட்டும் காவலும் இல்லாவிட்டால், எல்லாவற்றையும் அழித்துவிட மாட்டார்களா! அது கிடக்கட்டும். இப்படி விலை மதிக்க முடியாத காடுகளைத் தவிர, ஆண்டு ஒன்றுக்குக் காடுகளின் மூலம் நமது சர்க்காருக்கு நாற்பது கோடி ரூபாய் வருமானம் வருகிறது'' என்றார்.

'' அதெப்படி வருகிறது!''

'' காட்டிலிருந்து எத்தனை எத்தனையோ உப பொருள்கள் கிடைக்கின்றன. மருந்துப் பொருள்கள், கொழுப்புச் சத்துள்ள எண்ணெய்கள், தேன், மெழுகு, அரக்கு, பிசின், காகிதம் தயார் செய்வதற்கு வேண்டிய புற்கள், பல மாதிரி நார்கள், உணவுப் பொருள்கள் எல்லாம் கிடைக்கின்றன. அவைகளை ஏற்றுமதி செய்வதன் மூலமாக நமது சர்க்காருக்கு வருமானம் கிடைக்கிறது'' என்றார்.

பிறகு நாலு புறமும் ஒரு தரம் கண்ணோட்டம் விட்டார். ஒரு மூலையில் இருந்த வேரைக் கூர்ந்து பார்த்தார். அந்த வேர் இருந்த இடத்துக்கு எங்களை அழைத்துச் சென்றார்.

'' கல்கிப் பத்திரிகை பிரதிநிதி யார்!'' என்றார்.

'' நான்தான் '' என்றேன்.

'' உங்கள் ஆசிரியர் சோமு புதிய தொடர் கதை எழுதுகிறார் அல்லவா!'' என்றார்.

இவருக்குத் தமிழே தெரியாதே! ஆசிரியர் சோமு அவர்களின் தொடர் கதையை இவர் எப்படிப் படித்துத் தெரிந்து கொண்டார் என்று வியந்து போனேன்.

'' எனக்குத் தமிழ் தெரியாதுதான். ஆனால் திரு சோமு அவர்கள் எழுதும் ரவிசந்திரிகா என்னும் தொடர்கதையைப் பற்றித் தெரியும். அதன் குறிப்பு எனக்கு வந்தது'' என்றார்.

''ஏன், கதை எப்படி இருக்கிறது!''

'' கதை ரொம்ப பேஷாக இருக்கிறது. அதை விட பேஷானது அந்தக் கதைக்கு ஆதார கருவியாக அமைந்துள்ள சர்ப்பகந்தி என்னும் வேர். இல்லையா!'' என்றார்

'' சர்ப்பகந்தி வேரின் மகிமையைக் கொண்டு தானே கதை ஆரம்பமாயிற்று'' என்றேன்.

''சர்ப்பகந்தி இந்தியாவில் உள்ள எல்லாக் காடுகளிலும் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு இடத்தில் அதற்கு ஒவ்வொரு பெயர். இது இரத்த அழுக்கத்துக்கும், பைத்தியத்துக்கும், இன்னும் பல மூளை வியாதிகளுக்கும் மிகவும் உபயோகமாக இருக்கிறது. அந்த அதிசய சர்ப்பகந்தி வேர்தான் இது'' என்று அங்கிருந்த வேரைச் சுட்டிக் காண்பித்தார்.

தடிமனாகக் கிழங்குபோலப் பலகிளைகளுடன் கூடிய அந்த அபூர்வ வேரைக் கூர்ந்து பார்த்தேன். அடுத்த கணம் நான் சர்ப்பகந்தி வேரை மறந்து விட்டேன். அந்த வேரும் மறைந்து விட்டது. புள்ளி மான்போல் சந்திரிகா துள்ளிக் குதித்து ஆடுவதும் அந்த ஆட்டத்துக்கு ரவீந்திரன் தன்னை மறந்த லயத்தில் புல்லாங்குழல் ஊதும் மோகனக் காட்சியும்தான் தெரிந்தன.

'' இது போன்ற எத்தனையோ அதிசயமான மருந்துப் பொருள்களெல்லாம் காடுகளில் நிறைந்திருக்கின்றன. அதன் மூலமாகத்தான் சர்க்காருக்கு நிறைய வருமானம் வருகிறது'' என்று சொல்லி விட்டு எங்களை இன்னொரு பகுதிக்கு, தொழிற்சாலை இருக்கும் இடத்துக்கு அழைத்துப் போனார் காட்டிலாகா அதிகாரி.

பல அதிசயங்கள் நிறைந்த அந்தத் தொழிற்சாலைக்குள் போவோம் வாருங்கள். அங்குள்ள விசித்திரமான, கற்பனை செய்து காண முடியாத விந்தைகளைக் காண்போம். (தொடரும்)


"பாவம்! மறுபடியும் கையை வெட்டிக் கொண்டான்!"
உடனே— 'டெட்டாலை' எடு!
சுறுசுறுப்பாக ஓடியாடி விளையாடும் குழந்தைகளுக்கு பழைய காயங்கள் ஆறுவதற்கு முன்பு புதிய வெட்டுக் காயங்கள் ஏற்படுவது சகஜமே. ஆம் அதைத் தடுக்க முடியாதுதான். ஆயினும் அவர்களின் காயங்களை அலட்சியம் செய்யாதீர்கள். நம்மைச்சுற்றி எங்கும் கோடிக் கணக்கான, கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் இருக்கின்றன. வியாதியை உண்டு பண்ணக்கூடிய இக்கிருமிகள் நம் சருமத்தின் மேல் ஏற்படும் மிகச்சிறிய வெட்டுக் காயங்களின் மூலமாக சரீரத்தில் உட்புகுந்து விஷ நோய்களை பரப்பக்கூடும். விஷ நோய்களிலிருந்து உங்கள் குழந்தையைக் காப்பாற்ற 'டெட்டால்' உபயோகியுங்கள். 'டெட்டால்' மிகவும் பத்திரமானது. இனிமையான வாசனையுள்ளது. ஆதலால்தான் 'டெட்டால்' உபயோகிக்கும் பழக்கத்தை குழந்தைகள் வெகு சீக்கிரத்தில் அடைகிறார்கள். 'டெட்டால்' உபயோகிக்கும் முறையை அவர்களுக்குக் கற்பியுங்கள்.
நோய் வரும் முன்பே பாதுகாத்துக் கொள்ள
'DETTOL'
டாக்டர்கள் உபயோகிக்கும் கிருமிநாசினி
'டெட்டாலை' கையிருப்பாக வீட்டில் வைத்திருங்கள். சொந்த சுகாதாரத்திற்கும், வீட்டின் துணிமணிகளை சுத்தம் செய்வதற்கும் 'டெட்டாலை' உபயோகியுங்கள். நோயாளிகள் இருக்கும் அறையில் 'டெட்டாலை' தெளியுங்கள். விஷ நோய்கள் அதிருதியாக துர்நாற்றம் தோன்றும் சமயங்களில் 'டெட்டாலை' தரையிலும் சாக்கடையிலும் தெளியுங்கள்.
கர்ப்பஸ்திரீகளை பிரசவ சமயத்தில் காப்பாற்றுவதற்காக டாக்டர்கள் 'டெட்டால்' உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறார்கள். இச் சமயத்தில் சருமத்தின்மேலோ அல்லது கர்ப்பாசயமார்க்கத்திலோ ஏற்படும் சிறிய வெட்டுக் காயமும் கொடிய விஷ நோய்களை விளைவிக்கக்கூடும்.
க்ஷவரம் செய்து கொள்ளும் ஜலத்தில் சிறிதளவு சேர்க்கப்பட்ட 'டெட்டால்' வெட்டுக் காயங்களில் விஷ நோய்கள் நேராமல் பாதுகாக்கும்.
ANTISEPTIC
DETTOL
NON-POISONOUS
GERMICIDAL
இலவசம்
"நோய்க்குச் சிகிச்சை தேடுவதைவிட நோய் வராமல் தடுத்துக் கொள்வதே நல்லது" என்ற இலவசப் புத்தகத்தைப் பெற இலாகா FB-3 தபால் பெட்டி நெ. 664 கல்கத்தா-1 விலாசத்திற்கு எழுதுங்கள்.

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு: செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனம் 5 — ராகம் — உசேனி — மிச்ரசாபு தாளம்

பல்லவி

பிழை பொறுத்தருள்வாய் இறைவா
பிறந்த முதல் அறிந்தறிந்து புரிந்த என் (பிழை)

அனுபல்லவி

புழுவென பவ வெயிலில் நொந்தேன்
போதுமே நின் சோதனையும் இனி (பிழை)

சரணம்

உனை மறந் துலகபோகம் மெய்யென
உள்ளம் மயங்கி உழன்றதும்
உனதடியர் மனம்நோக என் நா
கொடிய மொழிகள் புகன்றதும்
எனது வல்வினைப் பயனிதோ உடல்
இழி தொழில்கள் பயின்றதும்
என் சொல்வேன் ஐயகோ அளவிலை
ராமதாஸனுக்கிரங்கி கனிந்து வெம் (பிழை)

ஹுஸேனி ராகம் 22-வது மேளமானது கரஹரப்ரியையில் பிறந்த பாஷாங்க ராகமாகும், வக்ர ஸம்பூர்ண ராகமாகும். இதில் எல்லா ஸஞ்சாரங்களும் வருகின்றன. ஆனதால் இதன் ஆரோஹண அவரோஹணத்தைப் பலவிதமாகக் கூறலாம். இதில் வரும் அன்ய ஸ்வரம் சுத்த தைவதமாகும் * இந்த அடையாளமிட்டிருப்பது.

ஆரோஹணம்: ஸ ப ம ப நி த ம ப நி த நி ஸ்

அவரோஹணம்: ரி ஸ் நி த ப ம ப த நி ப த* ப ம க ம ப ம க ரி ஸ

ரிகாமபமாகரிஸ என்றும், நிகமரிகஸ, என்றும், ஸநிதநிஸா என்றும் ஸஞ்சாரங்கள் ராக ஸ்வரூபத்தை விளக்குகின்றன. மற்றவை லக்ஷ்யத்தில் தெரிந்து கொள்ளவும்.

உசேனி — சாபு

பல்லவி

1 ஸா ஸா ஸா | பா ; | தா* பா || மா ; ; | ; ; | ப த* ப த* ||
பி ழை பொ | று | த்த ருள் || வாய் | | இ - றை - ||

மபா, ; ; | ; ; | ; ; || ; ; ; | ; ; | ப ம க ரி ||
வா - | | || | | என் - - - ||

2 க ஸ ஸா ஸா | பா ; | தா* பா || மா ; - ; | ப த* ப த* | மபா, ; ||
பி - ழை பொ | று | த்த ருள் || வாய் | இ - றை - | வா - ||

பா பா தாஸ்நி | நி* த த* ப | கா மா || பா ப நி த* ப | ம க ப ம | க ரி ரி ரி ||
பி ற ந்த - - | மு - தல் - | அ றி || ந்த றி - ந்து - | பு - ரி - | ந்த - என் - ||

3 ஸா ஸா ஸா | பா ; | ம ப ஸ் நி || நிதா, மா | ப த* ப த* | மபா, ; ||
பி ழை பொ | று | த்த - ருள் - || வாய் - - | இ - றை - | வா - ||

பா தா ரிஸ் | நி த தமா, | பா தா || நி ப ப நி த* ப | ம க ப ம | க ரி ரி ரி ||
பி ற ந்த - | மு - தல் - | அ றி || ந்த - றி - ந்து - | பு - ரி - | ந்த - என் - ||

4 ஸா ஸா ஸா | பா ; | ம ப ஸ் நி || நிதா, மா | பா நி த | நி ஸ்ா, ||
பி ழை பொ | று | த்த - ருள் - || வாய் - - | இறை - | வா - ||

ரீ க ம க ரி | ஸா ஸா | த நி ரி ஸ ‖ நீ தா பா | த ப ப ம | க ரி ரி ஸ் ‖
பிற - ந்த - மு தல் அ - றி - ந்த றி ந்து பு - ரி - ந்த - என் -

5 ஸா ஸா ஸா | பா ; | பமா, பாஸ்நி ‖ நிதா, மா | ப நி த நி | ஸ் ரி ஸ் ‖
பி ழை பொ று த்த - ருள் - - வாய் - - இ - றை - வா - -

ரீ கா ப ம | க ரி ஸா | தா நீ ‖ ரி ஸ் நி த பா | ம க ம ப | ம க ரி ஸ் ‖
பி ற ந்த - மு - தல் அ றிந் த - றி - ந்து பு - ரி - ந்த - என் -

6 ஸா ஸா ஸா | பா ; | பமா, பாஸ்நி ‖ நிதா, மா | ப நி த நி | ஸ் ரி ஸ் ‖
பி ழை பொ று த்த - ருள் - - வாய் - - இ - றை - வா - -

*

ரீ கா மாபம் | க ரி ஸா | த நி ஸ் ரி ‖ நீ,ஸ் நி த தம | த ப ப ம | க ரி ரி ஸ் ‖
பி ற ந்த - - மு - தல் அ - றி - ந்த - றி - ந்து - பு - ரி - ந்த - என் -

(பிழை பொறுத்தருள்வாய் இறைவா) என்று 4-வது ஸங்கதி பாடி நிறுத்தவும்.

அநுபல்லவி

நீ தா நீ | ஸா ; | நீ ஸா ‖ ஸ் க ரி ரி நி | ஸா ; | ஸா , ரி ‖
பு மூ வெ ன ப வ வெ - யி லில் - சொ ங் தேன் -

நீ தா நீ | ஸா ; | நீ ஸா ‖ ரி க ம க ரி | ஸா ; | ஸாக்ரி, ரி,ஸ் ‖
பு மூ வெ ன ப வ வெயி - லில் - சொ ங் தேன் - - - -

நீ தா நீ | ஸா ; | ஸ் நி ஸா ‖ ரிக மாபம் க்ரி | ஸா ; | ஸாக்ரி ரி,ஸ் ‖
பு மூ வெ ன ப - வ வெ - யி - - லில் - சொ ங் தேன் - - - -

*

ஸா ; நீ | தா ; | மா ; ‖ பா ; த ப | ம க ப ம | க ரி ரி ஸ் ‖
போ து மே னின் சோ த - ணை - யும் - இ - னி -

* * *

ஸ் நி ரி ஸ் நி த | பா , த | த ப மா ‖ ப த நி ப த ப | ம க ப ம | க ரி ரி ஸ் ‖
போ - - - து - மே - னின் - - சோ - - - த - ணை - யும் - இ - னி -

*

ப த நி ஸ் ரி க்ரி | ஸாரிஸ் நி த | தமா, ; ‖ ப த நி ப த ப | ம க ப ம | க ரி ரி ஸ் ‖
போ - - - து - - மே - - - - னின் சோ - - த - ணை - யும் - இ - னி -

*

பத நிஸ் ரிக்ரி | ஸாரிஸ் நி த | பா ப ம ‖ ஸ் நி ஸ் ப த ப | ம க ப ம | க ரி ரி ஸ்
போ - - - து - - மே - - - - னின் - - சோ - - - த - ணை - யும் - இ - னி -

‖ பிழை பொறுத்தருள்வாய் ‖ கடைசி ஸங்கதி பாடி முன் சொன்னபடி நிறுத்தவும்.

சரணம்

*

1 மா பா தா | பா ; | நீ தா ‖ நீ ஸா ; | ஸா நிஸ்நீ | , த தம ‖
உ ணை ம ற . ந்து ல க போ கம்மெ - - ய் யெ ன -

*

2 மா நீ பதா, | மபா, ; | நீ தா ‖ நீ ஸ் ரீஸ் | ஸா ஸ்க்ரிஸ் | நித தம ‖
உ ணைம - ற - ந்து ல க போ - - கம் மெ - - ய்யெ-ன -

*

ம பநிதா, பா | ம க ப ம | கரிக ஸ ‖ ரீ க ம ரி க | ஸரீ, ; | ; ; ‖
உன்ன - ம் ம யங் - - - வி - உ - மு ன் - - ற - தும் - - - -

* *

1 கா ரீ கா | மா மா | பஸ் நிஸ் ‖ ஸ்பா, ; தப | ம த பம | கரி கஸ ‖
உ ன த டி யா ம - ணம் - கோ - க - என் - - - நா - - -

*

கா ரீ கா | மா த ப | பம கா ‖ ரீ ; ரிஸ் | ஸா ; | ; ; |
கொ டி ய மொழி - கள் - பு க ன்ற - தும் - - -

2 ரீ கா மா | மா மா | பத நீ,ஸ் ‖ நிதா, ,நி தபா, | மக ப ம | கரி கஸ |
உ ன த டி யா ம - ணம் - கோ - - க - என் - - - நா - - -

*

கரி கா மா | த ப பம | கரி பம ‖ கரீ, ; ரிஸ் | ஸா ; | ; ; |
கொ - டி ய மொ - ழி - கள் - பு - கன் - ற - தும் - - -

```
      *
மா பா தா | பா ; - | பா பா || மா பா ஸ்நி | நி த தா | நீ ஸா ||
எ  ன  து   வல்       வி  னை   ப  ய  னி -   தோ - -     உ டல்
தா நீ ஸா | ரி ம் க ரி | ஸா ஸா || ஸ் நி ரிஸ் நித | பா ; | தநிதா, ம ||
இ  ழி தொ   ழில் - - -   கள் ப    யி - - - ன்ற -   தும்     - - - -

        *
2 மா பா தா | பா ; | பா பா || மா பா ஸ்நி | நி த தா | நீ ஸா ||
  எ  ன  து   வல்     வி  னை   ப  ய  னி -   தோ - -     உ டல்
  தா நீ ஸா | ரி ம் க ரி | ஸா தா || நீ ரிஸ் ரி த | பா ; | தநிதா, ம ||
  இ  ழி தொ   ழி ல் - - -   கள் ப    யின் - - ற -     தும்     - - - -   -

      *
3 மா பா தா | பா ; | பா பா || மா பா ஸ் நி | நி த தா | நீ ஸா ||
  எ  ன  து   வல்     வி  னை   ப  ய னி -     தோ - -     உ டல்
  தா நீ ஸா | ரிக மாபம் | க ரி ஸா || நிஸ் ரீ,ஸ் நித | பா ; | ; ; ||
  இ  ழி தொ   ழில் - - - -   க ள் - ப   யின் - - ற -    தும் -    - -
1 மா ; மா | நீ நிதாம | பா ; || ரி ஸா ; | நீ தா | த ம மா ||
  என்  சொ   ல்வேன் - -   அ ய்       ய  கோ     அ  ள    வி - லை

              *
பா தா நீ,ஸ் | தா,நி | ப நி த ப || ம க மா பா | ம க ப ம | க ரி க ரை ||
ரா - ம -     தா -    ஸ - னு -   க்கி - ரங் இ   க - னி -    ந் து - - -
2 பா ; ஸ் நி | நி தா ம | ப த நி ஸ் || ரி ஸா ; | ரி ஸ் நி த | பா ப ம ||
  என் சொல் -   வேன் - -   அய் - - -   ய  கோ      அ - ள -      வி லை -

                                      *
பத நிஸ் ரிக்ரி | ஸாரிஸ்நித | பா பா || ஸ் நி ஸ் ப த ப | ம க ப ம | க ரி ரி ஙி
ரா - - - ம - -   தா - - - -   ஸ  னு   க்கி - ரங் - இ -    க - னி -   ந்து - வெம் -
```

[பிழை பொறுத்தருள்வாய்]

* இந்த அடையாளம் சுத்த தைவதத்தைக் குறிக்கும்.



வாழ்வின் ரகசியம்

டி. எஸ். கோதண்டராமன்

அலுவலகத்திலிருந்து திரும்பி வரும்போதே கை நிறைய வாசனைக் கதம்பத்துடன் தான் நாராயணன் வீட்டுக்குள் நுழைந்தான். "பவானி, பவானி" என்று ஆதுரத்துடன் அழைத்தபடியே சமையற்கட்டுக்குள் நுழைந்த அவனைச் சிற்றுண்டித் தட்டும் கையுமாக நின்ற பவானி திரும்பிப் பார்த்தாள். ஆச்சரியத்துடன், "அட, நீங்களா! சீக்கிரமாக வந்து விட்டீர்களே! நீங்கள் வருவதற்குள் உடை மாற்றிக் கொண்டு விடலாம்..." என்று கூறியபடியே, சிற்றுண்டித் தட்டை நாராயணன் கையில் கொடுத்தாள்.

"சீக்கிரம் 'டிரஸ்' செய்துகொண்டு புறப்படு, பவானி! மெட்ரோவில் இன்று புதுப் படமாம்" என்று துரிதப்படுத்தினான் நாராயணன்.

"இதோ ஒரு நிமிஷத்தில் தயாராகி விடுவேன்" என்று லாகவமாகக் கழுத்தை அசைத்துக் கூறினாள் அவள். அவளது பார்வையின் இன்ப வெட்டில் செயலிழந்து நின்றான் அவன்.

இதையெல்லாம் கவனித்த நடராஜனின் கைகள் பத்திரிகையைப் பரபரப்புடன் புரட்டின. அப்படியாவது வேண்டாத அந்தச் சிந்தனையிலிருந்து தப்பித்துக் கொண்டு விடலாமா என்ற நப்பாசை அவனுக்கு.

மனத்தில் ஊசலாட்டம். கதையில் வந்த பாத்திரங்களான பவானியும் நாராயணனும் அவன் முன் பிரம்மாண்டமாகக் காட்சி யளித்தனர். எவ்வளவு இன்பகரமான ஜோடி! இணைந்த தாம்பத்தியம்!

எல்லாம் கதையில்தான்! வாழ்வில் இன்பமாக வாழ எவராலாவது முடிகிறதா! உலகில் நடமாடும் பெண்கள் எல்லாருமே 'பவானி'யாக இருந்து விடுகிறார்களா! அவள் கனிவம் என்ன! எழில் என்ன!

நடராஜன் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்ததற்குக் காரணமே இது தான். சந்தோஷமாக வாழ வேண்டுமென்ற ஆசை இருந்தது அவனுக்கு.

ஒவ்வொரு பெண்ணையும் தள்ளிக் கொண்டே வந்தான். பெண்களிடம் அவனுடைய தாய்க்கும் மற்றவர்களுக்கும் தெரியாத குறைகள் அவன் கண்களில் பட்டன. பிள்ளைக்குக் கல்யாணமாக வேண்டுமே என்று அவன் தாயார் படாத கவலை இல்லை. எல்லாவற்றுக்கும் ஒரு நாள் விடிவு ஏற்படத்தான் செய்தது.

"ஏண்டா, இந்தச் சசிலாவினிடம் என்ன குறையைக் கண்டாய்! சொல்லிவிடு. அவர் களைக் காக்க வைக்காமல் ஒரு மூக்காலணா கார்டில் இன்றே எழுதிப் போட்டு விடலாம்" என்று மனத் தாங்கலுடன் அவன் தாயார் கேட்டாள், அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு வந்த மறுநாள்.

"உனக்கு நாட்டுப் பெண் வரவேண்டிய காலம் வந்து விட்டது, அம்மா!"

பொங்கி வந்த சந்தோஷத்தில் வாயடைத்துப் போய் நின்றாள் அவன் அம்மா.

புத்திரனை மணக் கோலத்தில் பார்க்க வேண்டுமென்றுதான் காத்துக் கொண்டிருந்தாளோ, என்னவோ, அவனுக்குக் கல்யாணமான பின் அதிக நாள் காத்துக் கொண்டிருக்க வில்லை, அவன் தாயார்.

சென்னையில் இருக்க விருப்பமில்லாமல் பம்பாய்க்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்து விட்டான், நடராஜன். புது மனைவி சசிலாவுடன் வாழ்க்கையைத் தொடங்கினான்.

* * *

அலுவலகத்திலிருந்து மாலையில் திரும்பி வரும்போது வாசனைக் கதம்பத்துடன் வருவான், நடராஜன். அவள் ஓடி வரவேண்டுமென்று எதிர்பார்த்து, "சசிலா......!" என்று அன்புடன் அழைப்பான். அவள்வரமாட்டாள்!

"இன்னும் டிபன் தயாராகவில்லை. சற்று உட்காருங்கள். இதோ வந்து விடுகிறேன்..." என்று அடுத்த அறையிலிருந்து பதில் வரும்.

"டிபனுக்கு அவசரமில்லை, சசிலா! கதம்பம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன்......!"

"தினமும் ஏன் இப்படிக் காசைச் செலவழிக்கிறீர்கள்! பூ வேண்டுமென்று கேட்டேனா!"

நடராஜன் நா வறண்டுவிடும்; உடல் உலர்ந்து நிற்கும். இந்தப் பதிலைக் கேட்கத்தானா, அவன் பூச்சரம் வாங்கி வந்தான்! "புஷ்பமா!" என்று கேட்டுக் கொண்டே துள்ளிக் குதித்துக் கொண்டு வந்து, அழகாகக் கழுத்தைத் திருப்பி, 'நீங்களே தலையில் வைத்து விடுங்கள்' என்று அவள் சொல்லாமல் சொல்லியிருந்தால், நடராஜன் எவ்வளவு பூரித்துப் போவான்!

அன்று அவன் அலுவலகத்துக்குப் புறப்படுவதற்காகச் சட்டையை மாட்டிக்கொண்டான். சட்டையில் பொத்தான்களைக் காணோம்.

"ஏய் சசிலா,...உன்னைத்தானே!...சட்டையில் பொத்தானைப் போடு என்று சொல்லியிருந்தேனே......"

"அப்போதே போட்டு வைத்துவிட்டேனே!"

"இங்கே வந்துதான், பாரேன்........"

"அதோ, 'ஸ்டாண்'டில் மாட்டியிருக்கிறதே, சட்டை—அந்தச் சட்டையைத்தானே

பெட்டியிலிருந்து எடுத்து வைத்திருக்கிறீர்கள்! அதில்தான் பொத்தான் போட்டேன்......"

காரியாலயத்துக்கு நேரமாகி விட்ட அவசரத்தில் கோபம் குமுறிக் கொண்டு வந்தது அவனுக்கு. "சீச்சீ, அதிகப் பிரசங்கி, இந்தப் பதிலை அப்போதே சொல்லித் தொலைப்பதற்கு என்ன......!" என்றான்.

"அனாவசியத்திற் கெல்லாம் இப்படிக் கோபிக்கிறீர்களே!"

"வாயை மூடு. எது அவசியம், எது அனாவசியம் என்று எனக்குத் தெரியும்...... நாலு வார்த்தை படித்தவுடன் வாயும் நீண்டு விடுகிறது......"

"இப்போது என்ன சொல்லி விட்டேன்!"

"என்ன சொல்லி விட்டாயா!......அதைச் சாயங்காலம் வந்து சொல்லுகிறேன்!"

மாலையில் அவன் வீட்டுக்குள் நுழைந்ததும் அவள் ஊருக்கு வாங்கிய டிக்கட்டை மேஜை மேல் எறிந்தான். அன்றே சுசீலா ஊருக்கு அனுப்பப்பட்டாள்.

மூன்றிரவில் தூங்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்து விட்டு, வெகு நேரம் கழித்துத் தூங்கியதன் விளைவாக, காலையில் எட்டு மணிக்குத்தான் நடராஜன் கண்விழித்தான். பத்து மணிக்குக் காரியாலயத்தில் இருக்க வேண்டும் என்ற நினைவு வந்ததும் அவசரம் அவசரமாகத் தன் காரியங்களை முடித்துக் கொண்டு, ஒன்பதே கால் மணிக்கு மாதுங்கா ஸ்டேஷனில் போய் நின்றான்.

மாலையில் வீடு திரும்பும் போது மணி ஆறரை. அவள், ஒரு காலத்தில் கனாக் கண்டு கொண்டிருந்ததைப் போல அவனுடைய 'அவள்' வாசல் நிலைப்படியருகே ஒய்யாரமாக நின்று கொண்டு அவன் வரும் வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கவில்லை.

சே, என்ன வாழ்க்கை! புது மண வாழ்வாம்! எல்லாம் மூன்று மாதத்துக்குள் ஒடிந்து போய் விட்டது! மீண்டும் அது உயிர் பெறுமா! உயிர்ப்பித்தாலும் அவன் கனவு கண்ட சௌஜன்யம் மீளுமா!—எல்லாம் எட்டிக்காய்ச் சிந்தனைகள்!

அறைக் கதவுக்குள் சாவியைக் கொடுத்துத் திருப்பியபோது அவன் நெஞ்சம் புரண்டு கொடுத்த மாதிரி இருந்தது. 'சில்'லென்று பள்ளம் விழுந்தாற்போன்ற உணர்ச்சி. சுசீலா 'அவனை'ப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருப்பாள்!......

'படக்'கென்று கதவை உட்புறம் தள்ளினான். முதல் அடியையும் உள்ளே வைத்து விட்டான். தலையைத் திருப்பியபோது, பக்கத்துப் பகுதியில் குடியிருந்த குப்புசாமியின் அறைக் கதவைத் திறந்து கொண்டு ஒரு நங்கை வருவதைக் கவனித்தான். யாரது!...

ஒரு கணம் நின்று பார்த்து விட்டு உள்ளே போய் விட்டான் நடராஜன். அந்தப் பெண் குப்புசாமியின் குமாரத்திதான். சென்ற மாதம் தான் அவளைக் கணவன் வீட்டிற்கு அனுப்பினார், அவர். அதற்குள் ஏன் திரும்பி விட்டாள்?

குப்புசாமியின் மாப்பிள்ளை பூனாவில்தான் உத்தியோகத்தில் இருக்கிறான். இரண்டு நாட்கள் லீவு போட்டு விட்டு 'ஜாய்'யாக இருந்து விட்டுப் போகலாமே என்பதற்காக மனைவியுடன் மாமனார் வீட்டுக்கு வந்திருப்பான். உம்... அவன் பாக்கியசாலி!......

"இந்தாருங்கள், நடராஜன்! காலையில் பத்திரிகை படிக்கவில்லையே, நீங்கள்! நான் வந்து கதவைத் தட்டினேன். உங்களுக்கு அசந்த தூக்கம்" என்று சொல்லிக் கொண்டே செய்தித் தாளை நீட்டினார் குப்புசாமி. செய்தித் தாளின் பாகஸ்தர்கள் அவர்கள் இருவரும்.

"ஓ... ஆமாம்! காலையில் சற்றுத் தூங்கி விட்டேன்!.........மாப்பிள்ளை வந்திருக்கிறாப் போல இருக்கிறது......"

"இல்லையே. பெண் மட்டும்தான் வந்திருக்கிறாள். அதை ஏன் கேட்கிறீர்கள்! என் பெண்ணுக்குப் பாட்டு நன்றாக வரும். சங்கீதப் பித்து அவள். இப்படி அவள் சங்கீதமயமாக இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லையாம்! 'பாடாதே' என்று சொல்லியிருக்கிறான். அவன் எதிரில் பாடுவதை இவள் நிறுத்தி யிருக்கிறாள். அவன் ஆபீஸுக்குப் போன பின் தன் இஷ்டம் போல மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாளாம். ஒருநாள் ஆபீஸிலிருந்து 'திடு'மென அவன் வந்திருக்கிறான். இவள் கல்யாணி ராகத்தில் மூழ்கியிருந்திருக்கிறாள். வந்ததே கோபம், அவனுக்கு! கன்னா பின்னா வென்று பேசியிருக்கிறான். 'சங்கீதத்தை ரசிக்கத் தெரியாத கணவராக வாய்த்து விட்டாரே' என்று இவளுக்கும் ஆதங்கம். ஏதோ பதில் சொல்லியிருக்கிறாள். உடனே அந்தப் புத்திசாலி இவளை இங்கே அனுப்பி விட்டான்! இப்படிப்பட்டவன் வாழ்க்கையில் எதைச் சாதித்து விடப் போகிறானோ தெரியவில்லை" என்றார்.

அவனிடமிருந்து பதிலே வரவில்லை.

"எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால், தான் எதிர்பார்க்கும் ஒரு லட்சியப் பெண்ணாகத் தன் மனைவி இருக்க வேண்டும் என்று விரும்புகிறான் அவன். நியாயமான ஆசைதான். ஆனால் அதே போல இவளும் தன் கணவன் தன்னுடைய லட்சியக் கணவனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாள் என்பதை மறந்து விட்டான்! சரி, வரட்டுமா!"

நடராஜனின் பதிலுக்குக் காத்திராமலேயே குப்புசாமி எழுந்து சென்று விட்டார். ஆனால், அவரது வார்த்தைகள் நடராஜனைச் சுற்றிச் சுழன்று சுழன்று வீசி அவன் முகத்தில் பளீர் பளீர் என்று அறைந்தன. மனத்துக்குள் மலையும் கடலும் புரள்வது போன்ற இரைச்சல். 'சோ'வென்று மழையின் ஓலம். பின்பு நிச்சலனம்! அமைதி!

நடராஜன் மெல்ல எழுந்து மேஜை அருகே சென்றான். கைகள் பேனாவையும் காகிதத்தையும் நாடின.

"அன்புள்ள சுசீலாவுக்கு,

ஆசி பல. யோசித்துப் பார்த்ததில், நான் உன்மீது கோபப்படுவதற்குக் காரணமே இல்லை என்று தெரிந்து கொண்டேன். நான் ஆத்திரப்பட்ட போதெல்லாம் கூட நீ பொறுமையுடனேயே இருந்தாய் என்பதை எண்ணும்போது என் மனம் வெட்கமடைகிறது.

நீ இல்லாமல் வீடு களையிழந்து நிற்கிறது. உடனே வா......!"

கடிதத்தைத் தொடர்ந்து படிக்கும் உரிமை இனி நமக்கு இல்லை!

உங்களுடைய சருமத்தை அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்கொள்ள இந்த சுலபமான இரவு-பகல் சரும பாதுகாப்பு உங்களுக்குத் தேவை

பாண்ட்ஸ் கோல்டு க்ரீமையும்
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமையும்
சேர்ந்து உபயோகிப்பதனால்
உங்களுடைய இயற்கை அழகு
வெளிப்படுகிறது



பிருதுத்தன்மையும் சுத்தத்தையுமளிக்க ஒரு இராக்கால க்ரீம்: நீங்கள் படுக்கப் போகுமுன் செழுமையான பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் உபயோகிக்கவும். சில செகண்டுகளில் இது உங்கள் சருமத்திற்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது—இயற்கையான எண்ணெய்ச்சத்து அளித்து வறட்சியை அகற்றி உங்கள் சருமத்தின் யௌவனத்தையும் வனப்பையும் நீடிக்கச் செய்கிறது.

பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் ஒரு ஆச்சரியமான சுத்திகரிப்பு சாதனமென்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். உங்கள் சருமத்திலுள்ள கண்ணுக்குத் தென்படாத துவாரங்கள் பெரிதாகாமல் தடுத்து உங்கள் சருமத்தை களங்கமற்றும் அழகுடனுமிருக்கச் செய்கிறது.

பாதுகாப்பிற்கும், சௌந்தரியத்திற்காகவும் ஒரு பகல் நேர க்ரீம்: பனியைப்போன்ற பிரகாசமான வானிஷிங் க்ரீமின் ஒரு நேர்த்தியான சன்னப் பூச்சு பகல் நேரத்தில் உங்கள் சௌந்தரியத்தை அதிகப்படுத்துகிறது. இதன் காக்கான பாதுகாப்புத்தன்மை, வனப்புள்ள சருமத்தின் வைரியான தூசி, வெயில் மற்றும் வறட்சிக்காற்று முதலியவற்றின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுகின்றது. அளவுக்குமிஞ்சிய எண்ணெய்ச்சத்து சருமத்தின் துவாரத்தில் படிந்து கெடுதலைத்தரும். இவ்விதம் அதிக எண்ணெய் வழியும் சருமத்திற்கு, பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் ஒரு குணமளிக்கும் ஆச்சரிய சாதனம்.

பாண்ட்ஸ்

கோல்டு க்ரீம்
வானிஷிங் க்ரீம்



அழகிய நங்கையர் எங்கிருப்பவர்களாயினும் தங்கள் சௌந்தரியத்திற்கு இச்சுலபமான இருவிதப் பாதுகாப்பையே நம்பியுள்ளனர். அவர்கள் உதாரணத்தையே நீங்களும் பின்பற்றுங்கள்—இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமையும் பகலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமையும் உபயோகியுங்கள். உங்கள் பிரகாசமான—அழகிய வதனத்தைக்கண்டு நீங்களே குதூகலமடைவீர்கள்.

P. 1633


கல்கியின்
அமர தாரா
மூன்றாம் பாகம்
ரங்கதுரையின்
கதை
மணியம்
ஆனந்தி

கல்கியின்

அமர தாரா



பூர்வ கதை

சிங்கன்காரன் காசிலிங்கம், சந்திரமணியைக் காதலித்து மணந்து கொள்கிறான். சந்திரமணிக்கு இருந்த செல்வத்தை நாங்கள் அடைய முடியவில்லையே என்ற ஏமாற்றத்தினால் அவளுடைய மாமன்மார்கள் அவர்களுக்கு சகலவரமூர்த்தி என்பவர் மூலமாகத் தீங்கிழைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இவர்கள் போய்க் கொண்டிருக்கும் பஸ் விபத்துக்குள்ளாகிறது. அதில் பிரயாணம் செய்த மந்திரமூர்த்தி என்ற குங்குமத்துறைப் பண்ணையார் அவர்களுக்கு உதவி செய்கிறார்.

இது நடந்து எட்டு மாதங்களுக்குப் பின் காசிலிங்கமும் சந்திரமணியும் குங்குமத்துறைக்குச் செல்கிறார்கள். அங்கே மந்திரமூர்த்தியைச் சந்திக்கிறார்கள். அவர் மறுபடியும் அவர்களுக்கு மிகவும் உதவி புரிகிறார். அங்கே சந்திரமணி அழகிய பெண் குழந்தைக்குத் தாயாகிறாள். குழந்தைக்கு இந்துமதி என்று பெயர் சூட்டி மகிழ்கிறார் காசிலிங்கம்.

குங்குமத்துறை ஜமீன்தாருக்கும் காசிலிங்கத்துக்கும் சிநேகம் ஏற்படுகிறது. இருவரும் சேர்ந்து வேட்டைக்குப் போய் வருகிறார்கள். ஜமீன்தாருக்கும் சகலவரமூர்த்திக்கும் விரோதம் என்று தெரிந்து காசிலிங்கம் அவரிடம் இன்னும் நெருங்கிப் பழகுகிறான். ஜமீன்தாரின் மைத்துனனான சொக்கையாவுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை.

ஒரு தடவை காசிலிங்கமும் ஜமீன்தாரும் சேர்ந்து வேட்டைக்குப் போகிறார்கள். ஜமீன்தார் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற விவரம் தெரிய வருகிறது. காசிலிங்கத்தின் மீது அந்தப் பழியைச் சுமத்தப் பார்க்கிறான் சொக்கையா. அதிர்ஷ்டவசமாகக் காசிலிங்கம் அந்த நேரத்தில் குங்குமத் துறையிலேயே இல்லை என்று அசைக்க முடியாத சாட்சி இருந்தபடியால் காசிலிங்கம் தப்புகிறார். ஆனால் சகலவரமூர்த்தியின் வீட்டில் புகுந்து கலாட்டா செய்ததற்காக ஒன்றரை வருடம் சிறைத் தண்டனை அடைகிறார்.

சந்திரமணி மந்திரமூர்த்தியின் ஆதரவில் இருக்கும்படி நேரிடுகிறது. அவர் அவளைத் தம் புத்திரியாக நினைந்து அவளிடம் அளவற்ற வாஞ்சையோடு இருக்கிறார். சிறையிலிருந்து திரும்பிய பின் காசிலிங்கத்தின் போக்கே மாறிவிடுகிறது. தாம் மறுபடியும் சிக்கலில் சேரப் போவதாகச் சந்திரமணியிடம் கூறி விட்டுப் போகிறார். பிறகு அவரைச் சந்திரமணி மிக அபூர்வமாகச் சில சந்தர்ப்பங்களில் தான் சந்திக்கிறாள். பின்னர் காசிலிங்கம் காணவே இல்லை.

இந்துமதிக்குப் பதினைந்து வயதாகிறது. அப்போது இறந்துபோன ஜமீன்தாரின் மகனான தங்கபாண்டியன், தன் நண்பன் ரங்கதுரையுடன் குங்குமத்துறைக்கு வருகிறான். இந்துமதிக்கும் ரங்கதுரைக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பிலேயே ஒருவருக்கொருவர் மனத்தைப் பறி கொடுத்து விடுகிறார்கள். அவர்களது காதலைக் கண்டு சந்திரமணியும், குங்குமத்துறைப் பண்ணையார் மந்திரமூர்த்தியும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

ரங்கதுரையைச் சொக்கையாவுக்குப் பிடிக்கவில்லை. தங்கபாண்டியனுக்கும், சொக்கையாவுக்கும் சண்டை வருகிறது. தங்கபாண்டியனுக்கு வயது வந்து விட்டபடியால் ஜமீன் அதிகாரங்கள் அவன் கைக்கு வர இருவருமாக ஏற்பாடு செய்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சந்திரமணி, ரங்கதுரையிடம் இந்துமதியைக் காப்பாற்ற வேண்டுமென்று வாக்குறுதி பெற்றுக் கொண்டு இறந்து விடுகிறாள்.

ரங்கதுரை ஸ்காலர்ஷிப்பில் சீமை செல்லுகிறான். அவன் குங்குமத் துறையிலிருந்து புறப்பட்ட தினத்தன்று மாலை இந்துவுக்கு ரங்கதுரை எழுதியது போல் ஒரு கடிதம் வருகிறது. இந்து உடனே கடிதத்தில் குறிப்பிட்ட இடத்துக்குப் போகிறாள். அங்கே சொக்கையா நிற்கிறான். இந்து திகைத்து நிற்கும்போது ஒரு உருவம் சொக்கையாவைக் கத்தியால் குத்தி விடுகிறது. இந்து வீட்டுக்கு ஓடி வருகிறாள். மந்திரமூர்த்தியிடம் கூறுகிறாள். அவர் இதைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாதென்று எச்சரிக்கை செய்கிறார்.

அவருடைய தூரத்து உறவினனான ராஜாராம் என்ற அய்யாக்குட்டி இந்துவை மணந்து கொள்ள விரும்புகிறான். அதற்காக அவளைப் பயமுறுத்துகிறான். அவள் எழுதும் கடிதத்தையும், ரங்கதுரை அவளுக்கு எழுதிய கடிதங்களையும் எரித்து விடுகிறான். இந்துவுக்குச் சீமை சென்ற ரங்க துரையின் சமாசாரமே தெரியவில்லை. இந்துமதி பிரிவெனும் துயரினால் பெரிதும் தவிக்கிறாள்.

ஒரு வருஷம் ஆகிறது. இந்துவும் மந்திரமூர்த்தியும் பத்மநாபன் என்ற வக்கீல் குடும்பத்தினரை விஜயராம பட்டினத்தில் சந்திக்கிறார்கள். எல்லோரும் இந்துவிடம் பிரியமாக இருக்கிறார்கள்.

வக்கீல் குடும்பத்தோடு அவர்களுக்கு நெருங்கிய நட்பு ஏற்படுகிறது. மந்திரமூர்த்தி நோய்வாய்ப்படுகிறார். அவர் இறக்கும் போது வக்கீல் பத்மநாபனை இந்துமதிக்கு கார்டியனாக நியமித்து விட்டு இறக்கிறார். இந்துமதி அனாதையாகிறாள். பத்மநாபனின் பெண் சுலோசனா அவளைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறாள்.

அங்கே ஒரு வருஷம் சுலோசனாவின் தாயாரிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறாள் இந்து. ஒரு நாள் தற்செயலாகப் பத்மநாபன் புதுச்சேரியிலிருந்து கள்ளத்தனமாக வைரம் வரவழைத்து வியாபாரம் செய்பவர் என்று தெரிந்து கொள்ளுகிறாள். அதன் பிறகு தன் நண்பரான சகலவரமூர்த்திக்கு இந்துவைக் கல்யாணம் செய்து கொடுக்க எண்ணுகிறார்

பத்மநாபன். இவையெல்லாம் அறிந்த இந்து மனம் கசந்து வீட்டை விட்டு ஓடிவிடுகிறாள்.

ரயிலில் தனியே பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது முனிசாமி கவுண்டரையும் அவர் மனைவியையும் பார்க்கிறாள். அவர்களது பேத்தி வள்ளியைத் துணிச்சலுடன் ரயில் விபத்திலிருந்து காப்பாற்றுகிறாள். அவளது உதவியைப் பாராட்டி அவர்கள் அநாதையான இந்துவைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றனர். அவர்களுக்கும் கடன் சுமையால் துன்பங்கள் நேரிடுகின்றன.

அப்போது தற்செயலாக ராஜாராமைச் சந்திக்கிறாள் இந்துமதி. அவர் அவளைச் சினிமா உலகுக்கு அறிமுகப்படுத்துகிறார். இந்துமதி அமரதாரா என்ற பெயரில் சினிமா வானில் பெரும் புகழ் அடைகிறாள். ஆயினும் ரங்கதுரையை அவளால் மறக்க முடியவில்லை. ஏங்கிப் போகிறாள். இத்தருணத்தில், ராஜாராம் மனம் மாறி ரங்கதுரையிடமே இந்துமதியைச் சேர்க்கப் பெரும் பிரயத்தனம் செய்கிறார்.

பல வருஷங்களுக்குப்பின் ஒரு நாள் சினிமா தியேட்டரில் ரங்கதுரையும் சுலோசனாவும் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கிறாள். அவள் மனம் கசந்து விடுகிறது. ரங்கதுரை அவளைப் பார்க்க வரும்போது எரிந்து விழுகிறாள்.

இந்துவை எப்படியாவது மணம் புரிந்து கொள்ள சகவரமூர்த்தி பல வழிகளில் முயற்சி செய்கிறார். இந்துவை சகவரமூர்த்தி ஓர் இரவு கடத்திக் கொண்டு போகிறார். அப்போது அவளை ''பகத்சிங்'' காப்பாற்றுகிறார். 'பகத்சிங்' தன் தந்தை காசிலிங்கமாகத்தான் இருக்க வேண்டுமென்று இந்துமதி ஊகிக்கிறாள்.

மறுபடியும் ரங்கதுரை இந்துவைப் பார்க்க வருகிறான். அப்போது தன் இதயத்தை இந்துமதி அவனுக்குத் திறந்து காட்டுகிறாள்.


ரங்கதுரையும் அவளிடம் தான் கொண்ட அன்பு மாசு மறுவின்றி இருப்பதைக் கூறுகிறான். இருவரும் மணந்து கொள்ளத் தீர்மானிக்கிறார்கள். ரங்கதுரைக்கு வேலை மாற்றலாகி இருப்பதால் மூன்று மாதங்கள் பொறுத்துக் கொள்ளும்படியும், அதுவரை குங்குமத் துறையிலேயே போய் இருக்கும்படியும் கூறுகிறான். இந்துமதி கவுண்டர் குடும்பத்தினருடன் குங்குமத்துறை செல்கிறாள்.

விதி அவளை வஞ்சித்து விடுகிறது. அங்கே சென்றதும் சொக்கையாவைக் கொலை செய்ததாக அவள் கைது செய்யப்படுகிறாள். கோர்ட் விசாரணையில் நடந்தது நடந்தபடி கூறிவிடுகிறாள். இந்துமதிக்கு விரோதமாக எல்லா சாட்சியங்களும் அமைகின்றன. இந்துவுக்கு மரண தண்டனை விதிக்கிறார் நீதிபதி. ரங்கதுரை அவளைச் சிறையில் சந்தித்து, ''தண்டனை நிறைவேறு முன் மணந்து கொள்வேன்'' என்று கூறுகிறான்.

பிறகு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள். ரங்கதுரை இந்துவைத் தன் சுயசரிதையை எழுதச் சொல்லுகிறான். இந்துவும் ரங்கதுரையைத் தன் வாழ்க்கைச் சம்பவங்களை எழுதச் சொல்லி வேண்டுகிறாள்.

இந்துமதியை ஜாமீனில் விடுதலை செய்ய மறுத்துவிட்டபடியால் அவள் சிறையிலேயே இருக்க நேருகிறது. ரங்கதுரை தான் குங்குமத்துறை சென்று இந்துவை விடுவிக்க ஏதேனும் ருசு கிடைக்கிறதா என்று கண்டுபிடிக்கச் செல்கிறான். இந்து சிறையில் தன் கதையை எழுதுகிறாள். அதைத் தன் அன்புப் பரிசாகத் தன் உள்ளம் கவர்ந்த ரங்கதுரைக்கே சமர்ப்பணம் செய்கிறாள்.

ரங்கதுரை தன் கதையைக் குங்குமத்துறையில் எழுதுகிறான்.



அத்தியாயம் 1

அல்லிக் குளம்

இந்த உலக வாழ்க்கையைப் பற்றி எத்தனையோ மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். வாழ்வே மாயை என்றும், உலகம் அநித்தியம் என்றும், காயம் பொய்யென்றும் சொல்லியிருக்கிறார்கள். நானும் அந்த உண்மைகளைப் புரிந்து கொள்ள முயற்சித்துத் தோல்வி அடைந்திருக்கிறேன். உண்மையில் என் வாழ்க்கையிலேயே நான் தோல்வியடைந்த விஷயம் இது ஒன்றுதான் என்று நினைத்து இறுமாப்பு அடைந்திருந்தேன். இந்த விஷயத்தில் தோல்வியடைவதனால் அவமானம் ஒன்றும் இல்லையல்லவா?

'வாழ்க்கையை ஏன் மாயை என்று சொல்லுகிறார்கள்? விஞ்ஞானப்படி வாழ்க்கை எவ்வளவு ஸ்திரமானது? உலகம் எப்படி மாயையாக இருக்க முடியும்? கடவுள் இந்த உலகைப் படைத்திருந்தால் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? இறைவனுடைய உலகத்தை மாயை என்று நாம் ஒதுக்

...கித் தள்ளி விடலாமா?' என்று பல நாட்களை எண்ணியிருக்கிறேன்.

'உடலைப் பொய்யென்று எப்படி எண்ண முடியும்? நான் மூச்சுவிடுகிறேனே, நடக்கிறேனே, படிக்கிறேனே, உணர்கிறேனே! இதெல்லாம் எப்படிப் பொய்யாகும்? என்னை நான் படைத்துக் கொள்ள வில்லை. உண்மைதான். என்னை உண்டாக்கிய சக்திக்கு இறைவன் என்று பெயரிட்டு நான் வணங்குகிறேன். என்னை அவர் இந்த உலகத்துக்குப் பொய்யாக அனுப்பியிருப்பாரா? அவர் எனக்குக் கொடுத்த தேகம் பொய்யா?



'எல்லாவற்றுக்கும் மேலாக உள்ளம் என்ற வஸ்துவைப் படைத்திருக்கிறாரே இறைவன்! அது எப்பேர்ப்பட்ட விந்தை! அந்த மனம் எங்கே இருக்கிறது என்று யாராலாவது சொல்ல முடியுமா? அந்த உள்ளத்தில் அன்பு என்னும் சக்தியை உற்பத்தி செய்கிறாரே அந்த அற்புதத்துக்குத் தான் ஈடு இணையுண்டா? அந்த அன்பென்னும் அற்புதத்தை மாயை என்று சொல்வதில் பொருள் இருக்கிறதா?' என்று யோசித்துப் பார்த்திருக்கிறேன்.

உலகையும், அதிலுள்ள எண்ணற்ற ஜீவராசிகளையும், மனித குலத்தையும் ஏதோ ஒரு லட்சியத்துடன் தான் இறைவன் படைத்திருக்கிறார். அவருடைய லட்சியத்தை நாம் உணர்ந்து அதை மதித்து நடப்பதே வாழ்க்கையாகும். அதுதான் இப்போது மனித குலத்துக்கு அவசியமானதும் ஆகும். இதை மாயை என்று உதறுவது இவைகளின் சிருஷ்டி கர்த்தாவையே உதாசீனம் செய்வதாகும் என்று எனக்குத் தோன்றுகிறது.

என் இதயத்தில் ஜோதியாக விளங்கும் இந்துமதியை என்னால் மாயை என்று எண்ண முடியவில்லையே. அவள் மீது எனக்கு ஏற்பட்ட அன்பினால் என் உள்ளம் விசாலமாகி நான் மனிதனாகி இருக்கிறேனே. இதெல்லாம் பொய்யாக இருக்க முடியவே முடியாது. இது இந்த ஜன்மத்தோடு முடிவடைந்து விடும் விஷயமும் அல்ல. இந்த அன்பு என்னை உயர்த்தியிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

நான் இங்கிலாந்தில் இருந்த சமயத்தில், ஒரு சமயம் யுத்தம் ரொம்ப உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. எறும்புப் புற்றுக்குத் தீ வைத்தால் எறும்புகள் சாகுமே அந்த மாதிரி மனிதர்கள் நெருப்பில் மடிந்தார்கள். நான் சிறுவனாக இருந்த பொழுது எறும்புப் புற்றின்மீது வைக்கோலைக் கொளுத்திப் போடும் பயங்கரக் காட்சியைக் கண்டு அழுதிருக்கிறேன். மனிதர்கள் அந்த மாதிரி என் கண் முன்னால் செத்துப் போனதைப் பார்த்தபோது எனக்கு உலகத்தின் மீதே அளவு கடந்த வெறுப்பு உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் நான் தத்துவப் புத்தகங்கள் பலவற்றைப் படித்து, 'பிறப்பு, இறப்பு இவைகள் ஏன் ஏற்படுகின்றன? உலகத்தில் துன்பம் ஏன் ஏற்படுகிறது?' என்பனவற்றைத் தெரிந்து கொள்ள முயன்றேன். பல வாசக சாலைகளுக்குச் சென்று, இறந்த பிறகு என்ன ஆகும் என்று தெரிந்து கொள்ள முயற்சி செய்தேன்.

நமது மதங்களில் சொல்லப்படும் சுவர்க்கம், நரகம் இவற்றில் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. என் அன்னை, வெகு காலத்துக்கு முன்பு நான் குழந்தையாக இருந்த காலத்தில் இதைப் பற்றியெல்லாம் எனக்குச் சொல்லியிருக்கிறாள். பல மதங்களைப் பற்றிப் படித்தேன். இந்திய வேதாந்தப் புத்தகங்கள், கிறிஸ்தவ நூல்கள், இஸ்லாமிய தத்துவங்கள், அவற்றுக்கு விளக்கங்கள், புத்த மதக் கொள்கைகள் எல்லாம் படித்தேன். ஒன்றிலாவது நான் தேடிய விஷயம் கிடைக்கவில்லை. உயிர்களின் பரிணாம தத்துவப்படி முதன் முதலில் 'ப்ரோடோப்ளாஸம்' என்ற உயிர் தோன்



றியதாம். அது எப்படித் தோன்றியது என்பது யாருக்கும் தெரியவில்லை.

இதனாலெல்லாம் எனக்கு ஒரு முக்கியமான உபயோகம் ஏற்பட்டது. பல மதங்களைச் சேர்ந்தவர்களுடன் வித்தியாசம் இல்லாமல் பழக முடிந்தது. விசால நோக்கம் ஏற்பட்டது. மொத்தத்தில் எல்லா மதங்களின் அடிப்படையிலும் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் ஒன்றுதான் என்பது தெரிந்தது. அதாவது எல்லா மதங்களும், "மனிதன் ஒருவனிடம் ஒருவன் அன்பாக வாழ வேண்டும். ஒருவனை இன்னொருவன் துன்புறுத்தக் கூடாது" என்னும் விஷயத்தையே சொல்லுகின்றன.

பொய் சொல்லக் கூடாது என்றும், திருடக்கூடாது என்றும் எல்லா மதங்களிலும் கட்டுப்பாடு இருக்கிறதல்லவா? ஏன்? அதனால் மற்றவர்களுக்குத் துன்பம் ஏற்படும். அதனால்தான். வீட்டுக்குப் பசியுடன் வந்தவர்களை உபசரிக்க வேண்டுமென்று எல்லா மதங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. தர்ம சிந்தனையை வற்புறுத்துகிறது! ஏன்? மனிதர்கள் ஒருவரை யொருவர் நேசிக்க வேண்டும் என்பதற்காகவே. யோசித்து ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை ஒவ்வொரு மதக் கொள்கையிலும் இருப்பது விளங்கும்.

இந்து வேதாந்தமும், புத்தருடைய பஞ்சசீலமும், கிறிஸ்தவர்களின் ஏட்டு ஆணைகளும், இதே விஷயத்தைத்தான் சொல்வதாக எனக்குப் படுகிறது.

ஆனால்? இந்த ஆனாலைப் போட்டு ஒரு பெரிய மிகப் பெரிய கேள்விக் குறி போட வேண்டியிருக்கிறது. இத்தனை மதங்களும் இவ்வளவு சொல்லியும் இன்று உலகம் என்ன நிலையில் இருக்கிறது? உலகத்தில் அன்பு தழைக்கச் செய்வதற்கு இந்தக் கொள்கைகளும் மதங்களும் போதவில்லையல்லவா? ஏன்? கம்யூனிஸ தத்துவங்கள் கூட ஒருவருக்கொருவர் அன்பாக இருப்பதைத்தானே சொல்லுகின்றன? கோடிக்கணக்கான ஏழை மக்கள் மீது இருந்த அன்பினால் எழுந்ததுதானே கம்யூனிஸம்? அதைப் பிரயோகித்தவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்தார்கள். அது கொள்கையின் தவறல்ல.



ஆகவே இத்தனை மதங்களும், கட்டுப்பாடுகளும் உலகத்தில் ஒற்றுமையை வளர்க்கச் செய்யப் போதவில்லை. வேறு புதிய தத்துவம்தான் வேண்டும்போலிருக்கிறது.

அதை நினைக்கும்போது ஏன் இப்படிப்பட்ட மனிதப் பிறவி எடுத்தோம் என்று அவமானமாக இருக்கிறது.

ஆனால் அதே சமயத்தில் இந்து மதியைப் பற்றி நினைக்கும்போது, என் இதயத்திலிருந்து அவளுடைய உள்ளத்தில் இடையறாமல் பாய்ந்து கொண்டே இருக்கும் அன்பு என்னும் தேனாற்றை உணரும்போது பிறவி எடுத்ததன் பயனே இதுதான் என்று தோன்றுகிறது.

ஆம்! உலகில் ஒவ்வொருவரும், யாரேனும் ஒருவரை உண்மையாகவே விரும்பி நேசிக்கத் தெரிந்து கொண்டு விட்டால் இந்த உலகம் பிருந்தாவனமாகவே ஆகிவிடும். அது இல்லாததனால்தான் உலகம் இப்படி நாசத்தைத் தேடி வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

"இந்துமதி!" ஆகா! அந்தப் பெயரை நினைக்கும்போது என் நெஞ்சத்தில் உண்டாகும் உணர்ச்சியை விவரிக்க முடியுமா? அது ஒரு குழந்தையிடம் தந்தைக்கு ஏற்படும் வாத்ஸல்யமா? கணவனுக்கு மனைவியிடம் ஏற்படும் காதலா? குருவுக்கு சிஷ்யனிடம் உண்டாகும் சிரத்தையா? தாய்க்குத் தன் மகனிடம் உண்டாகும் வாஞ்சையா? சிறுவனுக்கு மாம்பழத்தினிடம் ஏற்படும் கவர்ச்சியா? கண்ணனுக்கு ராதையிடம் ஏற்பட்ட பிரேமையா?

இவைகள் எல்லாமே எனக்கு அவள் மீது ஏற்படும் அன்புக்குப் பொருத்தமானதுதான். இத்தனையும் கலந்த உணர்ச்சிதான் இந்துவை நினைக்கும் போது ஏற்படுகிறது?


அது எதற்காக ஏற்படுகிறது என்று இந்துவே நினைக்கலாம்.

கடல் அலைகள் ஓயாமல் கரையின் மேல் வந்து ஏன் மோதுகின்றன? வானத்து விண்மீன்களிலிருந்து ஏன் இடைவிடாமல் ஒளி நாலா பக்கங்களிலும் பாய்ந்து கொண்டே இருக்கிறது? வண்ண மலர்கள் செடிகளில் ஏன் பூத்துக் குலுங்குகின்றன? மரங்கள் ஏன் கனிகளைப் பொழிகின்றன? தண்ணீர் ஏன் பள்ளத்தை நோக்கிப் பாய்கிறது? அதேமாதிரிதான் எனக்கு இந்துவிடமிருக்கும் அன்புக்கும் காரணம் கூற முடியாது. இயற்கை என்று கூறலாம்.

இந்துமதி என்னை, "உங்களைப்பற்றி ஒன்று விடாமல் எழுதித்தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள். அவள் என்னைப் பற்றி எப்படி எப்படியோ தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அனுபவத்தின் மூலமாகவும், அன்பின் மூலமாகவும், பேச்சு பாட்டு, இவைகளின் மூலமும் என்னைப் பற்றி அவளுக்குச் சொல்ல நினைத்திருக்கிறேன். இப்படிச் சொல்ல நேரிடுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. என் இந்துவின் மீது நான் வைத்திருக்கும் அன்பைச் சொல்லா விட்டால் நான் என்னைப் பற்றி எதுவுமே சொல்லிக் கொண்டதாகாது.

என்னைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் நான் நாலு பேரைப் பற்றிக் கட்டாயம் சொல்ல வேண்டும். முதலில் இந்து, பின்னர் என் அருமைத் தோழன் தங்கபாண்டியன், அதன்பின் என் அன்னை, பிறகு என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிய ஒரு உத்தமர்.


இந்துவைப் பற்றிச் சொல்ல வார்த்தைகளே இல்லை. அதை விட்டு விடுகிறேன். என் நண்பன் தங்கபாண்டியனைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். முதலில் என்னை மிக அன்போடு, வறுமையுடன் போராடிக் கொண்டே வளர்த்த என் அன்னையைப் பற்றிக் கூறுகிறேன். இந்துவுக்கும் அவளைப்பற்



றித் தெரிந்து கொள்வது நன்மை தரும். வறுமையையும், தாங்கொணுத துன்பத்தையும், கடமைக்காகப் பொறுத்துக் கொண்ட ஒரு உத்தமத் தாயைப் பற்றித் தெரிந்து கொள்வதே மனத்தைப் புனிதமாக்கும். மேலும் அவள் பட்ட துயரங்களையும், வேதனைகளையும், துன்பங்களையும் பற்றிக் கேட்டால் இந்துவுக்கும் தன் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளத் தைரியம் வரும். இப்போதே அவள் சொல்ல முடியாத துணிவுடன் தான் இருக்கிருள். அவளுடைய தைரியத்தையும், அமைதியையும் கண்டு நான் வியக்கிறேன். அனல் அதே சமயத்தில் முன் யோசனையோடு காரியம் செய்யத் தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் அவசரப்படுகிருள். நிதானமாக யோசித்து முடிவுக்கு வராமல், திடீரென்று எதையேனும் நினைத்துக் கொண்டு விடுகிருள். அதைப் பிறகு மாற்றவே முடிவதில்லை.


அவளை லாக் அப்பில் வைத்த உடனேயே இனிமேல் மரணம்தான் என்று தீர்மானித்து விட்டாள். "விடுதலையாக முடியும். முயற்சி செய்தால் அவளை நிரபராதி என்று நிரூபிக்கலாம்" என்று எத்தனை தடவை சொல்லியும் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. அந்தக் காரணத்தினலேயே வக்கீல் வைத்து வாதாடக் கூடாது என்று பிடிவாதம் பிடித்தாள். நான் வக்கீலை அழைத்துக் கொண்டு போனபோது அவரிடம் ஒன்றுமே சொல்லவில்லை. அவர் என்ன செய்ய முடியும்? அவர் சொன்னது போல் ஒரு காரியமும் செய்யவில்லை. தந்தப் பிள்ளையார் என்னுடையதில்லை என்று சொல்லச் சொன்னுர். அவள் கேட்கவில்லை. அவளுக்குக் கடிதம் கொண்டு வந்து கொடுத்த சிறுவனைப் பிடித்துக் கொண்டு வந்து சாட்சி சொல்ல வைத்தார்கள். இந்துமதி கடிதத்தைக் கண்டவுடனே புறப்பட்டுச் சென்றதைப் பார்த்ததாக அவன் சாட்சி சொன்னுன். இப்படியெல்லாம் குளறுபடியாகி விட்டது. நாங்கள் என்ன முயற்சித்தும் அவள் நிரபராதி என்று நிரூபிக்கச் சாட்சியம் கிடைக்கவில்லை.

அவளுடைய வாழ்க்கையில் எவ்வளவு ஏமாற்றங்கள்? எவ்வளவு ஏற்றத் தாழ்வுகள்? எவ்வளவு பயம்? எவ்



வளவு சோதனை? என்ன வேதனை? ஒரு வீரப் பெண்மணியால்தான் இத்தனையையும் தாங்க முடியும். அவளை நான் லாக்அப்பில் போய் முதல் தடவை பார்த்த பொழுது என்னைத் தேற்றினாள். அதை நினைத்தால் வியப்பாக இருக்கிறது.

அதன் பிறகு எவ்வளவோ தடவை என்னைப் புரிந்து கொள்ளாமல் பேசினான்; அவன் என்னிடம் வெறுப்பாகப் பேசினால் என் மனமும் மாறி விடும் என்று எண்ணினானோ என்னமோ தெரியவில்லை. என் இதய வானில் ஒரு சந்திரன்தான் பிரகாசிக்க முடியும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. இந்து இருந்தாலும், மறைந்து விட்டாலும் என் இதய ஆகாசத்தில் அவள் என்றும் பூர்ண சந்திரனாகவே திகழ்வாள். அதில் சிறிதும் சந்தேகமில்லை.



இந்துவுக்காக இந்தக் கதையை எழுதத் தொடங்கியிருக்கிறேன். நான் ஏற்கனவேயே டயரி எழுதுவதுண்டு. ஆனால் அது காலேஜில் ஏற்பட்ட பழக்கம். என் இளமைப் பிராயத்தைப் பற்றி எழுத ஒரு குறிப்பும் இல்லை. நினைவு ஏடுகளில்தான் அத்தனையும் அழுந்தப் பதிந்திருக்கிறதே! என் அன்னையுடன் நான்.........

என் அன்னை! அவரைப் பற்றி நினைக்கும் போது என் நெஞ்சம் பக்தியினால் நிறைந்து விடுகிறது. பழைய காலத்துப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கையும், தெய்வ பக்தியும், பதி பக்தியும் கொண்ட அவருடைய முகமே அலாதியான சோபையுடன் பிரகாசிக்கும். அவருடைய தோற்றத்தைப் பார்த்தாலே நமஸ்கரிக்கத் தோன்றும். இத்தனைக்கும் எத்தனை வறுமையிலும் மனோ வேதனையிலும் உழன்றிருக்கிறார் தெரியுமா? அத்தனை கஷ்டங்களும் அவருடைய உடலைப் பாதித்ததே தவிர உள்ளத்தைச் சிறிதும் பாதிக்கவே இல்லை.

எல்லாவற்றையும் விட என்மீது அவர் வைத்திருந்த அன்பையும், நம்பிக்கையையும் நினைத்தாலே அதிசயமாக இருக்கிறது. எல்லாத் தாய்மாரும் தன் குழந்தையிடத்தில் அன்பு வைப்பார்கள். ஆனால் என்னிடம் அவருக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை நினைத்தாலே என் கரங்கள் அவருக்கு அஞ்சலி செலுத்துகின்றன.

"துரைக்கண்ணு! நீ சமர்த்தாய்ப் படிக்கப் போகிறாய். பெரிய படிப்பெல்லாம் படிப்பாய்! பெரிய வக்கீலாகவோ ஜட்ஜாகவோ வேலை பார்க்கப்போகிறாய். முருகன் அருள் உனக்குப் பூரணமாக இருக்கிறதடா என் கண்ணே! உனக்குத் தைரியம் மட்டும் வேண்டும்" என்று சாதம் போட்டுக் கொண்டே அவர் நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்த போது கூறியது இன்று நடந்தது போல் நினைவிருக்கிறது. 'இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும்' என்றே சொல்ல மாட்டார். "பெரிய ஜட்ஜாக வேலை பார்ப்பாய்" என்றுதான் சொல்லுவார். அன்னையின் வாக்கு பலித்தது. பள்ளிக்கூடத்தில் கெட்டிக்கார மாணவன் என்றே பெயர் எடுத்தேன். படிப்பு முடிந்ததும் பெரிய வேலையே கிடைத்தது. நான் உண்மையிலேயே நீதிபதி உத்தியோகம் பார்த்ததை அவர் இருந்து பார்க்க வில்லையே என்று சில சமயம் வருத்தமாக இருக்கிறது. அவருடைய நம்பிக்கையை நான் வீணாக அடிக்கவில்லை. அந்தத் திருப்தி போதும். அந்த வேலைக்கு ஒரு ஸ்நானம் செய்து விட்டேன். இந்துவின் வழக்கு முடிந்து அவள் விடுதலையாக வேண்டியதுதான். நான் அவளுடன் எங்காவது ஒரு கிராமத்தில் போய் இருந்து விடுவேன். எனக்கு அவளும், அவளுக்கு நானும் இருந்தால் போதாதா? இந்தப் பட்டண வாழ்க்கை எங்களுக்கு எதற்கு?

என் கதையை ஆரம்பிப்பதற்குக் கொஞ்சம் பின்னோக்கிச் சொல்ல வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள அல்லிக்குளம் என்ற கிராமத்தில் என் வாழ்க்கை ஆரம்பமாகிறது. (தொடரும்)



ரெடிமேட் உடைகளில்—உடம்புக்குப் பொருந்தாதபடி அவை ஒருபொழுதும் சுருங்கவே செய்யாது

நீங்கள் ரெடிமேட் ஷர்ட்டுக்களோ, ஜிஜாக்களோ அல்லது வேறு உடைகளோ வாங்கும்பொழுது 'ஸான்பொரைஸ்ட்' (Sanforized) டிரேட் மார்க்கைப் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தவும். அவ்விதமிருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கவே செய்யாது என்று உறுதி செய்துகொள்ளலாம்.

அநேகப்படியான உடைதயாரிப்பாளர்கள் சுருக்கம் செய்யப்பட்ட 'ஸான்பொரைஸ்ட்' துணிகளையே உபயோகித்து வருகிறார்கள். இந்தத் துணி, மில்களில் விஞ்ஞான முறையில் முன்னதாகவே சுருக்கம் செய்யப்பட்டது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற அடையாளம் நீடித்த வேர்ச்சிக்கு உங்களுக்கு உத்திரவாதம்.


·SANFORIZED·
REGD TO ME
SHRUNK FABRIC

ஸான்பொரைஸ்ட்-கே-மெஹ்மான்:
பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணிக்கு ரேடியோ ஸிலோனிலிருந்து 41 மீட்டரில் ஒலிபரப்பப்படும் இனிமையான நாடக நிகழ்ச்சியைக் கேளுங்கள்.

ஸான்பொரைஸ்ட் ஸெர்வீஸ்

'பாசிநாத்', நேதாஜி சுபாஷ் ரோடு, மெரீன் டிரைவ், பம்பாய் 2

ACP. 1788



40. திருவாரூர் (தொடர்ச்சி)

திருவாரூர்த் தியாகேசர் கொடுத்த அரும் பெருங் கொடைகளை விளக்கிப் போந்தார் குமர குருபர அடிகள். மாநிலம் முழுதும் உழுது உண்ண வல்லார்க்கு அளித்தார்; நவநிதியையும் எடுத்து ஒருவன் கையில் கொடுத்தார். அடியார்க்கு வீட்டை வழங்கினார். பொன்னார் மேனியில் ஒரு பாகத்தைப் பெண்ணுக்கு ஈந்தார். இவ்வாறு நிலத்தையும் நிதியையும் வீட்டையும் பிறர்க்கு அளித்ததோடு தம் உடம்பினும் ஒரு பங்கைப் பகிர்ந்து கொடுத்த தலைவரைத் தியாகர் என்று கூறுதல் புனைந்துரை யன்று, புகழுரையும் அன்று! பொருளுரையே என்று கூறுகின்றார் அடிகள்.

> "வையம் முழுதும் உழுதுண்ண
> வல்லார்க்கு அளித்து நவநிதியும்
> கையில் ஒருவர்க்கு அளித்து எமக்கே
> கதிவீ டளித்துமை கன்னிகைக்கு
> மெய்யில் ஒருகூறு அளித்தனரால்
> விமலர் கமலைத் தியாகர் என்பது
> ஐயர் இவர்க்கே தகும், முகமன்
> அன்று புகழும் அன்றுமே"

என்பது அவர் பாடிய அழகான பாட்டு. மண்ணுலகை யெல்லாம் ஏனமாகி உழுது, கண்ணனாகி உண்ண வல்ல திருமாலுக்கு நிலமகளைத் தியாகேசர் கொடுத்தார் என்றால் "உழுதுண்ண வல்லார்க்கே உரியது நிலம்" என்னும் கொள்கை முழுமுதற் பொருளின் ஆதரவு பெற்றது போல் தோற்றுகின்றதன்றோ?

பண்ணலம் திகழும் பரம்பொருளை இன்னிசை வடிவாகக் கண்ட பெருமை உடையது பண்டைத் தமிழ் நாடு. "பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி! பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி!" என்று ஈசனைப் பாடினார் திருநாவுக்கரசர். இசை வடிவாகிய ஈசன், பண்ணோடு இசை பாடும் அடியார்க்கு மண்ணுலகும் விண்ணுலகும் மகிழ்ந்தளிப்பான் என்று அருளிப் போந்தார் திருஞான சம்பந்தர்.

நல்லியற் கவிஞராகிய ஞானசம்பந்தர், திருக்கோலக்காவில் இறைவனை வழிபடப் போந்தார்; தளிர் போன்ற இளங் கைகளால் தாளமிட்டுத் தமிழ்ப் பாட்டிசைத்தார். அப்போது பெருமான் அருள் கூர்ந்து பொற்றாளம் பரிசளித்தான். "நற்றமிழ் பாடிய ஞானசம்பந்தன் பொற்றாளம் பெற்றான்" என்று மாநிலம் புகழ்ந்து மகிழ்ந்தது.

> "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
> ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
> தாளம்ஈந்துஅவன் பாடலுக்கு இரங்கும்
> தன்மையாளன்"

என்று நயந்து பாடினார் நம்பி ஆரூரர்.

திருவாரூரில் அமர்ந்த இறைவனை இன்னிசை வண்ணனாகக் கண்டு வணங்கினார் நம்பி ஆரூரர்; சில காலம் அப்பெருமானைப் பிரிந்திருக்க நேர்ந்தபோது உள்ளம் உருகினார். திருவாரூரைத் திசை நோக்கித் தொழுது "என்னை ஆளுடைய ஐயனே! எழில் ஆர்ந்த ஏழிசையாய் நின்றாய் நீயே! இன்னிசையின் பயனாய் இருந்தாய் நீயே! அமுதின் சுவையாய் அமைந்தாய் நீயே! என்னையும் தோழனாய் ஏற்றாய் நீயே! பேதையேன் பிழையெலாம் பொறுத்தாய் நீயே! இல்லறத்தில் என்னை உய்த்தாய் நீயே! நின்னைப் பிரிந்து எங்ஙனம் வாழ்வேன்?" என்று முறையிட்டார்.

> "ஏழிசையாய் இசைப்பயனாய்
> இன்னமுதாய் என்னுடைய
> தோழனுமாய் யான்செய்யும்
> துரிசுகளுக்கு உடனாகி

மாழையொண்கண் பரவையைத்தந்து
ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே ”

(ஏழிசை - குரல் முதலாகத் தாரம் ஈறாக உள்ள ஏழு இசைகள்; ஊசிக — குற்றம்; மாழை - அழகு)

என்ற பாட்டிசைத்துப் போற்றினார்.

இன்னிசைக் கருவிகளாகிய குழலும் வீணையும், கொட்டும் தாளமும், கொக்கரையும் சச்சரியும் தியாகராசரின் திருக் கரங்களிலிருக்கக் கண்டார் திருநாவுக்கரசர்.

“ குருமணியைக் குழல்மொந்தை தாளம்வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானை
....
அருமணியை ஆரூரில் அம்மான் தன்னை
அறியாது அடிநாயேன் அயர்த்த வாறே”

(மொந்தை-ஒருவகைப் பறை; பாணி-கை)

என்று காதலாகிக் கசிந்து உருகினார்.

திருவாரூர் ஆலயத்தில் நாள் தோறும் நல்லிசை முழங்கும்; திங்கள் தோறும் திருவிழாவின் ஒளி விளங்கும்; ஆண்டு தோறும் அணிவிழா நிகழும். இத்தகைய திருநகரில் அரசு வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார் தியாகராசர்.

“ பாடல்மலி அந்தனியில்
பருமணிச்சிங் காதனத்தில்
ஆடரவக் கிண்கிணிக்கால்
ஐயன்இருந்து அரசுசெயும்”

(தனி - கோயில்; கிண்கிணி - காலணி)

என்று அவர் திருக் கோலத்தை எழுதிக் காட்டினார் ஒரு கவிஞர். அக் காட்சியைக் கண்குளிரக் கண்ட மாணிக்கவாசகர் “ஆரூர் அமர்ந்த அரசே” என்று அழைத்தார்.

அந்நாளில் ஆரூரில் நடந்த ஆதிரைத் திருநாளின் சிறப்பு ஒரு தேவாரப் பதிகத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது. வெண்கொடி பறக்கும் வீதியில் முத்து விதானமும் செம்பொற் கவரியும் சூழ்ந்து வர, பக்தர் குழாம் பாட்டிசைக்க, பல்லியம் கறங்கப் பவனி வருகின்றார் தியாகராசர். முதுமையை வென்ற முனிவர்கள் முன்னே செல்கின்றார்கள். மெல்லியல் வாய்ந்த நல்லடியார் பின்னே போகின்றார்கள். திருநீறணிந்த தொண்டர்கள் ஆனந்தக் களிப்பால் ஆடிப் பாடுகின்றார்கள். இத்தகைய தெய்வக் காட்சியைத் தமிழ்ப் பாட்டிலே காட்டுகின்றார் திருநாவுக்கரசர்.

திருவிழாக் காலங்களில் ஆரூர்ப் பெருமான் அளிக்கும் காட்சியையும், அடியார்கள் அதைக் கண்டு மகிழும் மாட்சியையும் எடுத்துரைக்கின்றது ஓர் இனியபாட்டு.

“ குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகுதிரு ஆரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே”

(விழவு-திருவிழா; ஆளாய்-அடிமையாய்)

என்று சேந்தனார் பல்லாண்டு பாடினார்.

இவ்வாறு அடியார்கள் அல்லும் பகலும் பாடிய நல்லிசைப் பாடல்கள் திருவாரூர்க் கிளிகளின் மனத்திலும் பதிந்து விட்டன. பழமரச் சோலைகளில் அமர்ந்து திருப்பாசுரங்களை அவைகள் அழகாகப் பாடுவதும் அங்குள்ள பூவைகள் இன்புற்றுக் கேட்பதும் வழக்கமாய் விட்டது.

“ உள்ளம் ஆர்உரு காதவர், ஊர்விடை
வள்ள லார்திரு ஆரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள் பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்”

(மருங்கு - பக்கம்; கிள்ளை - கிளி; பூவை-நாகணவாய்ப்புள்)

என்றார் சேக்கிழார் பெருமான்.

இங்ஙனம் தமிழ் பாட்டைப் பாடியும் கேட்டும் இன்புற்ற கிளியையும் பூவையையும் நயந்து நோக்கினாள் ஒரு நங்கை. தமிழ் மாலை அணிந்த தலைவனிடம் அப்பறவைகளைத் தூதனுப்பி அவன் அருளைப் பெற ஆசைப்பட்டாள். “ஆரூர்ப் பெருமானின் உள்ளம் கவர்ந்த கிள்ளைகாள்! பாட்டின் சுவையறிந்த பூவைகாள்! அறமே கண்ணாக உடைய அப்பெருமானிடம் போந்து எனக்காக ஒன்று சொல்ல வல்லீரோ? அவரை மறக்கும் வகையறியாமல் மயங்குகின்றது என் மனம்; உறக்கமின்றி உழல்கின்றது என் கண்; மெலிந்து வாடுகின்றது என் மேனி. இந்த நிலையை ஈசனிடம் எடுத்துரைத்து என் வாட்டம் திருத்த வல்லீரோ?

“ பறக்கும்எம் கிள்ளைகாள்
பாடும்எம் பூவைகாள்
அறக்கண்என் னத்தகும்
அடிகள்ஆ ரூரரை
மறக்ககில் லாமையும்...
வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும்
உணர்த்தவல் லீர்களே”

(வளை - வளையல்)

என்று தன் குறையை முறையிட்டாள்.

திருவாரூரிலே பிறந்தும் இருந்தும் பேரின்ப நிலையடைந்த பெரியார் பலர். நந்தி அடிகளும் தண்டி அடிகளும், கழற்சிங்கரும் கலிக்காமரும், அந்நகரில் செயற்கரிய பணி செய்து சிவனடி சேர்ந்தனர். அருமையான தமிழ்ப் பணி ஆற்றி வரும் தருமபுர ஆதீனத்தை நிறுவிய குருஞான சம்பந்தருக்கு ஒளி நெறி யருளிய கமலை ஞானப் பிரகாசர் பிறந்தது திருவாரூரே! இத்தகைய பெரியார் வந்தனையை எதிர்

நோக்கியே "அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்று நம்பி ஆரூரர் பாடினார் போலும்!

அறவோரும் துறவோரும் அரும் பேறு பெற்ற ஆரூரில் இசை ஞானச் செல்வர் மூவர் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே தோன்றினர்; இன்னிசையாகி நின்ற ஈசனை வழிபட்டு இன்பவாரியில் மூழ்கினர்; அவன் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்றெண்ணி எண்ணிறந்த இசைப் பாடல்கள் இயற்றினர்; தென்னிசையாகிய இன்னிசைக்குப் புத்துயிர் அளித்தனர்.

இன்று "சங்கீத மும்மணிகள்" என்று போற்றப்படும் மூவருள் முதல்வர் தியாகராசர். திருவாரூர்ப் பெருமான் பெயரே இவர் பெயராக அமைந்தது.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமஎன் றிரண்டு எழுத்தினால்"

என்பது இவர் திடமான கொள்கை. தெலுங்கில் இவர் பாடியுள்ள கீர்த்தனங்களில் பக்திச்சுவை சொட்டுகின்றது என்று பண்ணின் திறம் அறிந்தோர் கூறுவர்.

மும்மணிகளில் மற்றொருவராகிய முத்து சுவாமி தீக்ஷிதர் தியாகராசப் பெருமானையும் அவர் தொண்டராகிய நம்பி ஆரூரரையும் போற்றினர்; தேவாரப் பண்ணையும் பாட்டையும் கண்ணெனக் கருதினார். இவர் இயற்றியுள்ள "தியாகராஜ யோக வைபவம்" என்னும் இசைப் பாட்டு தேவாரப் பண் முறையைத் தழுவியது என்று தக்கோர் கூறுவர்.

இசை மணி வரிசையில் வைத்துப் போற்றப்படும் இன்னொருவர் சியாமா சாஸ்திரி ஆவர். இவர் தமிழ்க் கீர்த்தனங்களும் இயற்றியுள்ளார்.

பல்லவி:
தருணம் ஈதம்மா என்னை ரக்ஷிக்க
அனுபல்லவி:
கருணாநிதியாகிய காமாக்ஷி ரக்ஷிக்க
சரணம்:
அனுதினமும் என்தன் நாக்கில்
உன் நாமம்
அதுவல்லால் மற்றென்றும் இல்லை
என் நேமம்
மனக்கவலை தீர்க்க மறுதெய்வம்
உன்னைப் பார்க்க
எனக்குண்டோ உனக்கேற்க இரங்கி
உன்கண் பார்க்க

என்பது இவர் பாடிய இசைப் பாடல்களில் ஒன்று. இன்னிசை நன்மணிகளாகிய இம் மூவரும் ஆரூராகிய ஒரூரில் ஒரே காலத்தில் பிறந்தருளிய பெருமையைத் தமிழகம் மறந்து விடலாகாது.

டி. கே. சி. யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
7—3—45

தமிழ்க் கவி என்றால் அதிலும் கம்பரது கவி என்றால் தமிழனது இதயத்தை என்னவோ பண்ணுகிற காரியம் அது. கவியை அனுபவித்துக் கொண்டே இருந்தால் ரத்தத்துடன் ஒரு அங்கமாக ஆய்விடுகிறது அது. இதர கவிகள் அவ்வளவாக மனதில் ஒட்டுகிற காரியங்கள் அல்லதான். தமிழர்களாகிய நாம் ஏதோ வீண் பெருமைக்கு ஆளாய் விட்டோம் என்று சிலர் சொல்லலாம். தமிழ் அகராதியைப் பல வருஷங்களுக்கு முன் திருத்தமாக எழுதி வைத்த Rev. Dr. Winslow மேல்நாட்டு பாஷைகள் இந்திய பாஷைகள், வேறு பாஷைகள், பலவற்றையும் ஆராய்ந்தவர். "It is not perhaps extravagant to say that Tamil in its poetic form is more exact and polished than the Greek" என்றார். இதைவிட ஒரு பாஷைக்குப் புகழ்ச்சி சொல்ல முடியாது.

இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், கலாக்ஷேத்திரத்தில் நடந்த குறவஞ்சி நடனத்தைப் பார்த்திருந்தால் அது தீர்ந்து போயிருக்கும். **தமிழ்க் கவியை அறிவதற்குச் சங்கீதமும் அபிநயமும் இல்லாமல் முடியாது** என்று இரண்டு மாசத்துக்கு முன் தான் ராஜாஜி சொன்னார்கள்; வெகு உறுதியோடு சொன்னார்கள். தமிழ்க் கவியைக் கண்டு கொள்ளுவதே இவ்வளவு கஷ்டம். ஆங்கிலக் கவியைக் கண்டு கொண்டோம் என்று சொல்லுவதெல்லாம் அநேகமாய்ச் சந்திரனை அமாவாசை இரவில் கண்டோம் என்று சொல்லுகிற கணக்குத்தான். விரதத்துக்கு வார்த்த தோசையைத் தான் சந்திரன் என்று எண்ணிக் கொண்டார்கள்!

தாங்கள் குறவஞ்சி சம்பந்தமாக ஒரு classic ஆய்விட்டீர்கள். "குறவஞ்சியைக் கேட்க வேண்டும் பிறகு குற்றாலம் போக வேண்டும்; குற்றாலம் போக வேண்டும், பின்பு குறவஞ்சியைக் கேட்க வேண்டும்" என்று அற்புதமாய்ச் சொன்னீர்கள். சொன்னது போதாதென்று அருவிப் பக்கம் நின்று கொண்டு 'மடியில் என்ன இருக்கிறது என்று தெரியுமா?' என்று கேட்டு விட்டு, பின்னால் சட்டைக்குள்ளிருந்து குற்றாலக் குறவஞ்சிப் புஸ்தகத்தை வெளியே எடுத்துக் காட்டினீர்கள். தமிழ்க்கவி தங்களை அப்படிப் பற்றிக் கொண்டது. இலக்கிய அனுபவம் அப்படி அல்லவா இருக்க வேண்டும்!


அன்புள்ள,
டி. கே. சிதம்பரநாதன்



உங்கள் சரக்குகளை

சிங்கப்பூர், ஜாகர்தா, மணில்லா, ஸிட்னி

முதலிய ஊர்களுக்கு விமானத்தில் அனுப்புங்கள்



நேரம் மிச்சமாகிறது
பணம் மிச்சமாகிறது

உங்கள் சரக்குகளை பல மார்க்கெட்டுகளுக்கு கொண்டுபோக அவைகளை விமானத்தின் மூலம் அனுப்புவதே வேகமானதும், மலிவானதும், சுலபமான முறை.

- நீங்கள் பணம் மீதமாக்குகிறீர்கள்
- நீங்கள் நேரத்தை மீதப் படுத்துகிறீர்கள்
- நீங்கள் வியாபாரத்தை பெருக்குகிறீர்கள்
- நீங்கள் எல்லா மார்க்கெட்டுகளிலும் ஒரே சமயத்தில் சேவை செய்ய முடிகின்றது.

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

கனி மாளிகை, 33 மவுண்ட் ரோடு, மதராஸ். டெலிபோன்: 86194



சாமர்த்தியசாலி

— கி. ரங்கராஜன் —

விவாகமாகி நாலைந்து வருஷங்கள் வரையில் பாகீரதிக்குத் தன் கணவன் செய்கை அத்தனையுமே பிடித்திருந்தது. அவன் எது வாங்கினாலும், ஏன் என்று கேட்க மாட்டாள். மிக்க மகிழ்ச்சியுடனே ஏற்றுக் கொள்ளுவாள். அவளுடைய அந்த சந்தோஷத்தைக் கெடுக்கத்தானே என்னவோ அடுத்த வீட்டுக்கு லீலா என்ற பெண் குடிவந்தாள்.

லீலா எங்கோ ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். கல்யாணமாகி இரண்டே வருஷமாகிறது. புருஷன் வீட்டுக்கு வரும்போது தாலிக் கயிற்றுடனும் சங்கடிப் புடவையுடனும்தான் வந்தாள். இந்த இரண்டு வருஷப் பட்டண வாழ்க்கை அவளை எப்படியோ மாற்றி விட்டது.

"ஏன் பாகீரதி! உன் புருஷனுக்கு இருநூறோ, முந்நூறோ சம்பளம் என்று சொல்லுகிறாய், அத்தனை பணத்தையும் என்ன செய்கிறாய்! நல்ல நகை நட்டாக ஏதாவது செய்து கொள்ளப் படாதோ! இதோ இதைப் பார். போன வாரம் செய்தது. நாலே சவரன், எப்படி இருக்கிறது! நீயும் இதுமாதிரி ஒன்று செய்து கொள்ளேன்" என்று அவள் ஒரு நாள் சொன்னபோது பாகீரதி மிகவும் அசந்தே போய் விட்டாள்.

நகை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் அது மாதிரி செய்து கொள்ள அவளுக்கு வகைதான் தெரியவில்லை. மாதம் பிறந்தால் கோட்டென்றும் ஷர்ட்டென்றும் ஏதாவது அவள் புருஷன் வாங்கி விடுவான். சம்பளத்தில் ஒன்றும் மிஞ்சாது. இரண்டு மாதங்களுக்கு முன் ஆபீஸில் முந்நூறு ரூபாய் போனஸ் கொடுத்தார்கள். அந்தப் பணத்துக்கு அப்படியே புதிய சைக்கிள் ஒன்று வாங்கி விட்டான். அதற்கு நாலைந்து மாதங்களுக்கு முன் கைகடியாரம் ஒன்று வாங்கினான். இப்படி ஊதாரித்தனமாகச் செலவு செய்தால் என்ன மிஞ்சும்! மனைவிக்கென்று எதை வாங்க முடியும்!

இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கப் பாகீரதிக்கு அவகாசமில்லை; தோன்றவுமில்லை. ஆனால் லலிதா, தினம் அவள் வீட்டுக்கு வந்து, தான் செய்து கொண்ட நகைகளையும் வாங்கிய பட்டுப் புடவைகளையும் பாகீரதியிடம் காட்டும்போது அவள் மனத்தில் சிறிது சிறிதாகச் சலனம் கிளைவிடத் தொடங்கியது. தானும் தனக்கென்று ஏதாவது செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

அந்த நினைவு அவள் நெஞ்சத்தில் வேர்விட்டுப் படரத் தொடங்கியது. கணவனுடைய செலவுகளுக்குக் கணக்குக் கேட்டாள். அவன் ஏதோ ஒன்றைச் சொன்னான்.

"மூன்று மாதங்களுக்கு முன்புதானே ஒரு ஜோடி தைத்தீர்கள். அதற்குள் வேறொன்று எதற்கு!" என்று கேட்டாள்.

"ஏன், வாங்கினால் என்ன! என் சம்பளத்தில் தைத்துக் கொள்ளுகிறேன். அதில் உனக்கு என்ன கஷ்டம்!" என்று கோபத்துடன் கேட்டான் நாராயணன்.

"தெரிகிறது, இதோ பாருங்கள் இந்தச் சங்கிலியை. எந்த யுகத்திலோ செய்தது. மூட்டு எல்லாம் விட்டுக் கொண்டு வருகிறது. கிணற்றில் தண்ணீர் இறைக்கும்போது ஒரு நாள் அறுந்து கிணற்றுக்குள் விழப்போகிறது. அதை அழித்து மேலே தங்கம் போட்டு வேறு ஒன்று செய்யலாமே!"

"செய்யலாம். ஆனால் அதற்கெல்லாம் பணம் வேண்டுமே. பணம்தான் என்னிடத்தில் இல்லை."

"மனம் இருந்தால்தானே பணம் இருக்கும்! உங்களுக்கு மனம் இல்லை."

"சரி, அப்படித்தான் இருக்கட்டும்."

அந்தமாதிரியில் அவர்கள் இருவருக்கும் மனஸ்தாபம் ஆரம்பித்தது. அது வரவரப் பெரிதாகிக் கொண்டே வந்தது.

"நான் ஊருக்குப் போய்க் கொஞ்ச நாள் அப்பா அம்மாவுடன் இருந்து விட்டு வருகிறேன்" என்றாள் பாகீரதி ஒருநாள்.

"ஓ, குஷாலாய்ப் போய் வா. ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு எனக்கும் ரொம்ப நாளாகிறது. நேற்றோ, முந்தாநாளோ அம்பிகா லாட்ஜ் ஐயர் கூட 'எங்கே ஸார் உங்களை இந்தப் பக்கம் காணவே இல்லை' என்று கேட்டார். எங்களை நம்பித்தானே, அவர்

ஹோட்டல் நடத்துகிறார். நிம்மதியாய் நாலு மாசம் இருப்பேன்."

"ஏன், நாலுதான் இருப்பேன். அம்மா கையாலே சாதம் சாப்பிட்டு எனக்கும்தான் எத்தனையோ நாளாகிறது."

அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்தில் பாகீரதியை அவள் பிறந்தகத்துக்கு 'பாக்' பண்ணி அனுப்பி விட்டான் நாராயணன்.

ஒரு வாரம் பத்து நாட்கள் ஓடிவிட்டன. அம்பிகா லாட்ஜ் சாப்பாடு நாராயணனுக்குப் பிரம்மானந்தமாக இருந்தது.

ஒருநாள் இரவு வழக்கம்போல் அவன் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, வீட்டுக்குள் நுழையும்போது ஒரு பெண், அவன் வீட்டுக்கு நேர் எதிர் வீட்டு வாசல் புறத்தில் நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு இருபத்திரண்டு இருபத்து மூன்று வயதிருக்கும். அழுத்தமான பச்சைக் கரை போட்ட வெண்பட்டுச் சேலையும், அரக்கு வர்ணத்தில் முழங்கை வரைக்கும் புதையப் புதைய ரவிக்கையும் அணிந்து தலையில் ஒற்றை ரோஜாப் பூ செருகியிருந்தாள். நாராயணன் சிறிது நேரம் நின்று அவள் அறியாதபடி அவள் அழகைத் தாகத்துடன் பருகிக் கொண்டிருந்தான்.

அந்தப் பெண் அவனை ஒரு மாதிரியாக உற்றுப் பார்த்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

சரியாக இரண்டு நாட்கள் கழிந்தன. அவளைப் பற்றி அவன் முழு விவரமும் அறிந்து கொண்டு விட்டான்.

அவள் அந்த ஊர் குபேரா பாங்கில் வேலை பார்க்கிறாள். பி. ஏ. படித்திருக்கிறாள். தாயார் இல்லை. நோயாளியான தகப்பனார் மட்டும் உடன் இருக்கிறார். பெயர் லக்ஷ்மி.

எப்படியாவது அவளுடன் பேசி அவளைப் பழக்கம் செய்து கொள்ள விரும்பினான் நாராயணன். இந்தச் சமயத்தில் பாகீரதி பிறந்தகம் போயிருந்தது அவனுக்கு எவ்வளவோ சௌகரியமாக இருந்தது. அந்தப் பெண் லக்ஷ்மியுடன் பழக்கம் பெற என்ன செய்யலாம் என்று யோசித்தான். மின்னல் வேகத்தில் ஒன்று தோன்றியது. பத்தோ, இருபதோ எடுத்துக் கொண்டு அவள் வேலை பார்க்கும் பாங்கியில் போய் அங்கே ஸேவிங்ஸ் பாங்கில் கட்டினால் சிறுகச் சிறுக அவள் தொடர்பு பெறலாம் என்று நினைத்தான். பாங்கில் பணம் கட்டுவதென்று நினைத்தது ஆயுளில் அவனுக்கு அதுதான் முதல் தடவை.


முதல் தேதி வந்தது. தன் செலவுகளைப் பற்றிய கவலையே இல்லாமல் ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்டு நேரே குபேரா பாங்கிக்குப் போனான். அவனுடைய அதிர்ஷ்டம் அந்தப் பெண் ஸேவிங்ஸ் பாங்க் செக்ஷனில் தான் இருந்தாள். லக்ஷ்மி அவனைப் புன்முறுவலுடன் வரவேற்றாள்.

அவனுடன் அவள் ஐந்து நிமிஷம் பேசினாள். அவனைத் தன் எதிர் வீட்டில் பார்த்திருப்பதாக அவளாகவே சொன்ன போது நாராயணன் நடக்காத கனவுகளில் ஆழ்ந்து புளகாங்கிதமடைந்தான். தன்னுடைய உத்தியோகத்தைப் பற்றியும், தன்னைப் பற்றியும் சொன்னான். அவளை மீண்டும் சந்திப்பதாகச் சொல்லி விட்டு, பாங்கு புஸ்தகத்துடன் வெளியேறினான். முத்து முத்தான அவள் கையெழுத்துப் பதிந்த அந்தப் புஸ்தகத்தைப் பல முறை பிரித்துப் பார்த்து மகிழ்ந்தான்.

சம்பளத்தில் ஐம்பது ரூபாய் துண்டு விழுந்ததால், அந்த மாதம் நாராயணன் ரொம்பக் கஷ்டப்பட்டான். பாங்கியிலிருந்து பத்து இருபது எடுக்க அவன் கை துடித்தது. 'சே! லக்ஷ்மி என்ன நினைத்துக் கொள்ளுவாள்' என்று நினைத்து அந்த யோசனையைக் கைவிட்டான்.

மேலும் இரண்டு மாதங்கள் ஓடின. கூடவே நாராயணன் பாங்க் புஸ்தகத்தில் இரண்டு ஐம்பது ரூபாய்கள் ஏறின.

அன்று அவன் காலை ஆகாரத்துக்காக வெளியே வந்தபோது, எதிரே லக்ஷ்மி அவன் வரவுக்காகக் காத்திருப்பவள் போல, வாசலில் நின்றுகொண்டிருந்தாள்.




"மிஸ்டர், ஒரே ஒரு நிமிஷம்! உங்களுக்காகத் தான் நிற்கிறேன்" என்றாள் அவள்.

நாராயணன் அவளை அணுகினான்.

"கணக்கிலே தவறோ, அன்றி யாருக்காவது நூறு ரூபாய் அதிகமாகக் கொடுத்து விட்டேனோ, தெரியவில்லை. நூறு ரூபாய் பாங்கிக் கணக்கில் குறைகிறது. பத்து மணிக்குள் சரிக் கட்ட வேண்டும். ஒன்றும் புரியாமல் திணறுகிறேன்" என்றாள் அவள்.

"இவ்வளவு தானே! நீங்கள் இதற்காகக் கவலைப் படத் தேவையே இல்லை. நான் தருகிறேன்" என்றான் நாராயணன்.





லக்ஷ்மிக்குக் கண்ணில் ஜலமே வந்துவிட்டது. அழாத குறையாக, " 'என்ன செய்யப் போகி றோம்' என்று தவித்தேன். நீங்கள் தெய்வம் போல வந்து 'நான் தருகிறேன்' என்கிறீர் களே. நீங்கள் என் வயிற்றில் பாலை வார்த் தீர்கள்" என்று சொல்லிக் கொண்டே, இடை யில் செருகியிருந்த கைக்குட்டையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஒன்பது மணிக்கு நூறு ரூபாயை அவளிடம் எண்ணிக் கொடுத்தான்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட அந்த நாரீ மணி, "நான் ஒன்று சொல்லுகிறேன். தாங்கள் வித்தியாசமாக நினைக்கக் கூடாது. இதோ இந்த மோதிரம்—போனமாதம் நூறு ரூபாய்க் குச் செய்தது—இதைத் தங்களிடம் கொடுக் கிறேன். பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு, திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன். நீங்கள் மறுக்கக் கூடாது" என்று சொல்லிக் கொண்டே தனது இடது கை விரலில் அணிந் திருந்த அந்த அழகிய மோதிரத்தை அவனிடம் கொடுத்தாள்.

நாராயணன் மறுக்கவில்லை. மிக்க மகிழ்ச்சி யோடு ஏற்றுக் கொண்டான். அவள் விரலில் பழகிய அந்த வண்ண மோதிரம், அவன் விர லில் பழக ஆரம்பித்ததில் அவனுக்குப் பரம சந்தோஷம்.

அந்த மாதம் நாராயணன் தன்னுடைய செலவுகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினான். வீட்டு வாடகை, ஹோட்டலுக் குப் பணம், ஜவுளிக் கடை பாக்கி இப்படியாக அவனை வளைத்துக் கொண்டது.

அதற்கடுத்த மாதம் அவனுக்கு வேறொரு செலவு காத்திருந்தது. அவன் மனைவி பாகீரதி அவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். "பணம் இல்லாமல் என்னால் இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்க முடியாது. நூறு ரூபாய் அனுப்பினால் ஆயிற்று. இல்லையேல் வந்து விடு வேன்" என்று பொருள்பட எழுதி யிருந்தாள்.

பாகீரதியை அவன் அந்தச் சமயம் அழைத் துக் கொள்ளத் தயாராக இல்லாததால், நூறு ரூபாயை அனுப்பித் தொலைத்தான்.

மேலும் நாலைந்து மாதங்கள் நாராயணன் தன் சம்பளத்தில் பெரும் பகுதியை லக்ஷ்மியின் பொருட்டுச் செலவு செய்தான்.

"உங்களுக்கு நான் அடிக்கடி ஏதாவது தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக் கிறேன்" என்று ஒரு நாள் ஆரம்பித்தாள் லக்ஷ்மி சிரித்துக் கொண்டே.

"ஏன், என்ன விசேஷம்! ஏதாவது வேண்டுமா!"

"ஒன்றுமில்லை, உங்களுக்குத் தெரிந்த ஜவு ளிக் கடை ஏதாவது இருக்கிறதா! எனக்கு இங்கே யாரையும் தெரியாது."

"வேண்டியது இருக்கிறது, உங்களுக்கு என்ன வேண்டும்!"

"ஆறு ஆறு கஜத்தில் இரண்டு பட்டுப் புட வைகள் வேண்டும் என்று அண்ணன் மனைவி எழுதியிருக்கிறாள். தாங்கள் உங்கள் பேரில் கடனாக வாங்கிக் கொடுத்தால் இரண்டு மாதங் களில் பணத்தைக் கொடுத்து விடுவேன், உங்கள் சௌகரியம் எப்படியோ!"

" இன்றைக்கே வாங்கித் தருகிறேன். என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்! பணத்தைப் பற்றிய கவலையே வேண்டாம். சௌகரியப் பட்டபோது கொடுங்கள். என்னுடன் கூட வந்தால் உங்களுக்குப் பிடித்தமான கலரில் எடுத்துக் கொண்டு வரலாம்."

" நான் வரவேண்டும் என்பதில்லை. நீங்கள் பார்த்து எடுத்து வந்தால் போதும். பெண்களைவிட ஆண்களுக்குத்தான் புடவைகளைப் பற்றித் தெரியும்" என்று சொல்லிச் சிரித்தாள்.

அவள் கடைசியாகச் சொன்னது நாராயணன் மனசுக்கு மிகவும் இதமாக இருந்தது. அன்றைக்கே போய் நூறு கடைகள் சுற்றி இரண்டைத் தேர்ந்தெடுத்து வந்தான்.

லக்ஷ்மி அவற்றைப் பார்த்துப் பிரமிப்பு மேலிட்டவளாய், " வெகு நன்றாக இருக்கின்றன, விலை என்னவோ!" என்று கேட்டாள்.

" விலையைப் பற்றி என்ன! என் கவலை புடவை பிடிக்க வேண்டுமே என்பதுதான்."

" ரொம்பப் பிரமாதமாய் இருக்கின்றன. விலை தெரிய வேண்டாமா!"

" இரண்டும் இருநூற்றிருபது ரூபாய்!"

" அவ்வளவுதானா! கொள்ளை மலிவு போங்கள். மூன்று மாதங்களில் அதற்குரிய பணத்தைக் கொடுத்து விடலாம் அல்லவா!"

" சௌகரியப்படி கொடுங்கள். சிரமப்பட வேண்டாம்."

மேலும் ஒரு வாரம் சென்றது. ஆபீஸில் இரண்டு வாரம் லீவு போட்டு விட்டு, லக்ஷ்மி தன் தகப்பனுடன் மதுரைக்குப் போய் விட்டாள். போகும் போது வீட்டைப் பூட்டிச் சாவியை நாராயணனிடம் கொடுத்து, " நான் வரும் வரை வீட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டு வாரம் லீவு போட்டிருக்கிறேன். அதற்குள் வந்தாலும் வந்து விடுவோம்" என்று சொல்லி விட்டுப் போனாள்.

அவள் குறிப்பிட்ட பத்து நாட்களும், இரண்டு வாரமும் கடந்தன. நாராயணனுக்கு அவளைப் பாராமல் கண்கள் பூத்தே போய்விட்டன.

இந்த நிலையில் அவளிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் பார்த்தான்.

" நமஸ்காரம், தங்களுக்கு வருத்தம் தரும்படியான ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னை இந்த ஊருக்கே மாற்றி விட்டார்கள். இன்னும் சில தினங்களில் என் தகப்பனார் அங்கே வருவார். மற்ற விவரங்கள் அவரே தங்களுக்குச் சொல்லுவார்.

இங்ஙனம்

லக்ஷ்மி "

"அடாடா, இவளை நம்பி என்னவெல்லாமோ செய்து விட்டேனே! கடைசியில் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினவன் கதையாக முடிந்து விட்டதே" என்று அங்கலாய்த்தான் நாராயணன்.

அதே சமயத்தில் வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து பட்டுப் புடவை சலசலக்க அவன் மனைவி பாகீரதி கீழே இறங்கி



சென்னை ராஜ்யத்தில் கிராம அபிவிருத்தி வேலைகளிலும், சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலும், தேசீய விஸ்தரிப்புச் சேவையிலும் சிறந்துவிளங்கும் கிராமங்களுக்குப் பரிசும் பாராட்டும் வழங்கச் சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படிப் பாராட்டுக்குரிய அறுபத்தோரு கிராமங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கு ஜவாஹர்லால் நேரு அக்டோபர் இரண்டாம் தேதி ரொக்கப் பரிசும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கினர். அவர்களுக்கு வழங்கவேண்டிய பாராட்டுப் பத்திரங்களைக் கனம் பக்தவத்சலம் அவர்களிடம் கொடுத்து வழங்குமாறு நேருஜீ சொல்வதையும், கிராமப் பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.



உள்ளே வந்து கொண்டிருந்தாள். அவளது திடீர் விஜயம் நாராயணனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதை விட ஆச்சரியம் அவள் உடுத்தியிருந்த அந்தப் பட்டுப் புடவை! அவளையும் அவள் உடுத்தியிருந்த புடவையையும் மாறி மாறிப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறீர்கள்! நீங்கள் லக்ஷ்மிக்கு வாங்கிக் கொடுத்ததுதான். மற்றொன்று உள்ளே பெட்டியில் இருக்கிறது. வாருங்கள், காட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டாள்.

நாராயணனுக்கு உள்ளத்தைச் சுட்டது. ஆயினும் பேசாமல் அவளைப் பின் தொடர்ந்தான்.

அவன் கைவிரல்களை அப்பொழுதுதான் கவனித்தவள் போல, "ஏது மோதிரம்! புதியதாக இருக்கிறதே!" என்று கேட்டாள் பாரதி.

" இதுவா, இதுதானே, வந்து— "

"என்ன வந்து! லக்ஷ்மி கொடுத்தாள் என்று சொல்லுங்களேன். நான் வாங்கின மோதிரம் தான் அது. அவளுக்கு அதை அனுப்பி அதன் விலையை உங்களிடம் கேட்டு வாங்கி அனுப்பச் சொல்லி யிருந்தேன். எவ்வளவு கொடுத்தீர்கள்! நூறு ரூபாயா! அதற்கு மேலேயா!"

நாராயணன் திணறினான்.

" ஏன் இந்தத் திணறல்! லக்ஷ்மி உங்களைப் பற்றிக் கதை கதையாக எழுதியிருக்கிறாள். பாங்க் புஸ்தகத்தைக் கொடுங்கள். அதிலே எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும்" என்று மேலே மேலே பேசிக் கொண்டே போனாள் பாரதி.

நாராயணன் பேசவில்லை. லக்ஷ்மி இவ்வளவு பொல்லாதவளா என்று ஆச்சரியப் பட்டான்.


" அவளை உனக்குத் தெரியுமா!" என்று வியப்புடன் கேட்டான்.

" உங்களைவிட எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்கும் அவளைத் தெரியும், மறந்துவிட்டீர்கள்போலிருக்கிறது. நம் கல்யாணத்தின் போது உங்களுடன் அரட்டையடித்துக் கேலி செய்து பாட்டுப் பாடி அமர்க்களம் பண்ணினாளே, என் மாமா பெண் லக்ஷ்மி - அவளை நினைவில்லையா, உங்களுக்கு! அவளுக்கு அடுத்த வாரம் கல்யாணம்."

" அவளா! மூன்பு சின்னவளா யிருந்தாள். அவளுக்குக் கல்யாணமா!" என்று திடுக்கிட்டுக் கேட்டான் நாராயணன்.

" ஏன், ஆகவேண்டியதுதானே! முதலில் பாங்க் புத்தகத்தைக் கொண்டு போய்ப் பணத்தை வாங்கி வாருங்கள். புதுமாதிரியில் ஒரு சங்கிலி பண்ணிக் கொள்ள வேண்டும். மாதிரி கூடக் கொண்டு வந்திருக்கிறேன். என் மாமா பெண் விவாகத்துக்கு அந்த நகையைப் போட்டுக் கொண்டு போக வேண்டும். நீங்களும் வருகிறீர்கள் அல்லவா!"

" நான் இல்லாமலா!" என்றான் நாராயணன் உத்ஸாகமாக.




மதிப்பில் முதன்மையானது

ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை 'கோலினாஸ்'
. . . ஏனெனில் அது உங்கள் பற்களை சுத்தம்
செய்வது தவிர, மேற்கொண்டும் உதவுகிறது!


நீங்கள் உபயோகிக்கும் டூத்பேஸ்டு பற்களை பளபளப்பாக்குவதுடன் நிற்காமல், மேற்கொண்டும் உதவக்கூடியதாக இருக்க வேண்டும். இதோ தற்கால விஞ்ஞானம் உங்களுக்கு அத்தகைய டூத்பேஸ்டு ஒன்று வழங்குகிறது—அதுவும் அதிகப்படி செலவு ஏதுமின்றி! ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சைக் 'கோலினாஸ்' உங்கள் பற்களை வெண்மையாக்குவதுடன், பல் சிதைவிற்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறது. இதன் இரகசியம் அற்புதமான 'கோலினாஸ்' நுரையில்தான் அடங்கியுள்ளது. அது ஆக்டிவ் க்ளோரோபிலை வாயின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் எடுத்துச் செல்கிறது. உங்கள் சுவாசம் மணிக்கணக்கில் புதுமணத்துடன் விளங்குகிறது.

'கோலினாஸ்' அதிக நாள் வருகிறது சாதாரணமாக பிரஷில் அரை அங்குல அளவே தேவை. ஆதலால்தான் ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' எல்லாவற்றிலும் அதிக மதிப்புடையதாக விளங்குகிறது! இன்றே இந்த சுவை டூத் பேஸ்டை உபயோகிக்கத் தொடங்குங்கள்.



GK. 1169

V. 2066



பஸ் செலுத்துபவர்கள் சொல்லுவது என்னவென்றால், இரட்டை-சக்தி வாய்ந்த மோபில்காஸ் பூரண சக்தியைக் கொடுக்கின்றது. மேலும் மிகச் சிக்கனமளிப்பதாகும். ஆகையினாலேயே பலபேர்கள் இதைத் தொடர்ந்து ஒழுங்காய் வாங்குகின்றனர்

அதிகப்படியான எஞ்ஜின் சக்தியை

இரட்டை

சக்தி வாய்ந்த

மோபில்காஸ்

மூலம் பெறுங்கள்

இன்றைய பெட்ரோல்களிலேயே இரட்டை சக்தி வாய்ந்த மோபில்காஸ் ஒன்றுமட்டுமே இத்தனை அளவு அதிகப்படியான சக்தியைத் தருகின்றது. அதற்குக் காரணம், இது மட்டுமே மற்ற பெட்ரோல்களைக்காட்டிலும் எஞ்ஜின் கெடுதல்களை அதிகம் திருத்துகின்றது!

இரட்டை சக்தி வாய்ந்த மோபில்காஸ் அதிகமான ஆக்ஸிலரேஷன் கொடுக்கிறது. தவிர உங்கள் வண்டியை கேலனொன்றுக்கு அதிக மைல்கள் விகிதத்தில் ஓடவைக்கிறது. உங்களுடைய கார் அல்லது டிரக் நல்ல சேவைபுரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்டதிற்குப் பொருத்த வேலை செய்ய இது உதவுகிறது.

இதற்கு முன் என்றுமே பெட்ரோலிலேயே சேர்க்கப்படாத அம்சங்களின் மிகவும் சக்தி வாய்ந்த கலப்பு — மோபில் பவர் காம்பவுண்ட் கொண்டுள்ள, இரட்டை சக்தி வாய்ந்த மோபில்காஸை வாங்கத் தொடங்குங்கள். இதற்கு மாறுவதில் பலனுண்டாகும். எப்படியெனில் மோபில்காஸ் உங்கள் பணத்திற்கு அதிக ஆதாயம் அளிக்கிறது.

பறக்கும் செங்குதிரை அடையாளமுள்ள
இடத்தில் மட்டுமே கிடைக்கும்

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தமிழ் கூறும் நல்லுலகம்

பத்ராவதி கன்னட நாட்டிலிருந்தாலும் அங்குள்ள தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியை வளர்க்க, தமிழ்ச் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, தொண்டாற்றி வருகிறார்கள். தற்போது அங்குள்ள இரும்பு, சிமென்ட் மற்றும் காகிதத் தொழிற்சாலை முதலியவைகளின் அதிபர் திரு கே. நாராயணசாமி, ஐ.ஏ.எஸ். அவர்களின் பத்தினியார் திருமதி லீலாவதி நாராயணசாமி அவர்கள் சங்கத் தலைவியாக அமைந்திருப்பதுமன்றி, அவ்வம்மையாரின் தலைமையின்கீழ் செப்டம்பர் 18-ந் தேதி பாரதி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாரதியாரின் திரு உருவப் படம் நன்றாக அலங்கரிக்கப்பட்டு, வாத்திய கோஷத்துடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் பாரதியார் பாட்டு, மற்றும் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. குமாரி சரோஜினி தேவி, திரு ஏ. ஜெயராமன், திரு பி. எம். ராம சர்மா, இவர்கள் "பாரதியும் பெண்களும்", "பாரதியும் தமிழகமும்", "நான் கண்ட பாரதி" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினார்கள். பொதுக் காரியதரிசி திரு எம். வேலாயுதம் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினார்.

★

அமரகவி பாரதியாரின் நினைவு நாளைப் புது தில்லி கரோல்பாக்கில் உள்ள தக்ஷிண பாரத ஸமாஜத்தார் செப்டம்பர் 25-ந் தேதியன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவ்விழாவுக்கு ஸுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு சந்திரசேகரய்யர் அவர்கள் தலைமை வகித்து, பாரதியார் அன்று கண்ட கனவுகள் நனவாகியதை வெகு அழகாக எடுத்துரைத்தார். பிறகு தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் திரு பி. கக்கன் எம். பி. அவர்கள் பாரதியாரின் அரிய சேவைகளை எடுத்துக் கூறினார். இவ்விழாவை யொட்டி பாரதிப் பாடல் போட்டியும், குமாரி ஏ. லலிதாவின் இன்னிசைக் கச்சேரியும் நிகழ்ந்தன. பாரதியார் பாடல் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர் சிறுமிகளுக்குப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

★

கடந்த 29-9-55 அன்றிரவு கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத்தின் ஆதரவில் மக்கள் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்குக் கல்கத்தா தேசிய உயர்நிலைப் பள்ளி ஹாலில் மகத்தான வரவேற்பளிக்கப் பட்டது. மன்றத் தலைவர் ஸ்ரீ ப. ந. தியாகராஜன் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கவிஞர் சுப்பு அவர்களின் மேதையைப் பாராட்டி அவரை வரவேற்றார். மன்ற உபதலைவர் ஸ்ரீ எஸ். கே. சாமி கவிஞருக்கு மாலை சூட்டினார்.

கவிஞர் சுப்பு தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குத் தக்க முறையில் பதில் அளித்தார். மூன்றுமணி நேரம் உள்ளத்தை உருக்கும் வண்ணம் அண்ணல் காந்தி மகான் கதையைக் கவிஞர் சுப்பு அவர்கள் நிகழ்த்தினார். இளம் கவிஞர் காளிதாஸ் அனுசரணையாக மிருதங்கம் வாசித்தார்.

பொதுச் செயலாளர் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

★

பூனா சரஸ்வதி வித்தியாலய மாணவ மன்றத்தின் ஆதரவில் பாரதி விழாவும், மாணவ மன்ற ஆண்டு விழாவும் சிறப்பாக அமைந்த சிங்காரக் கொட்டகையில் செப்டம்பர் மாதம் 11-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. விழா ஆரம்பிப்பதற்கு முன்னால் பாண்டு வாத்தியங்கள் முழங்கின. விழாவுக்குத் தமிழ் ஆர்வமுள்ள லெப்டினன்ட் கர்னல் என். ஆர். வேலு ஏ. எம். சி. அவர்கள் தலைமை வகித்தார்கள். விழாவை ஒட்டி நடைபெற்ற இசைப் போட்டி, இலக்கியப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி, சிறுகதைப் போட்டி, பாரதி விருந்து முதலிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி வள்ளி வேலு அவர்கள் அன்புடன் பரிசளித்தார்கள். விழாவின்போது பம்பாயிலிருந்து வந்த ஸ்ரீமான் டி. வி. ராமானுஜம் எம். ஏ. அவர்கள் அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார். திரு ஜே. பி. மாசில்லாமணி 'கவிஞன் பாரதி கண்ட காட்சி' என்ற பொருள் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

★

சென்ற செப்டம்பர் மாதம் 26-ந் தேதி திங்கட்கிழமை மாலை இலங்கை பாரதி இளைஞர் சங்கத்தில் சங்கத் தலைவர் 'கல்கிதாஸன்' ஸ்ரீ ஜயமணி கு. ச. வேலாயுதம் தலைமையில் கவிமணி தேசிகவிநாயகம் அவர்களின் முதலாவது நினைவு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கவிமணியின் கவிதைகள் சிலவற்றைத் தலைவர் இசையுடன் பாடினார். பின்பு, கவிமணி மறைந்து விட்டாலும் அவரது கவிதைகள் நமது உள்ளங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் உயிர்த் துடிப்புள்ள கவிதைகள் என்று கூறினார்.



கூலிப் பணம்

டி. எஸ். ராமச்சந்திரன்

குதிரைப் பந்தயத்தில் வீடு வாசலை யிழந்த பத்மநாபய்யர் அதே ஏக்கத்தில் கண்ணை மூடிவிட்டார். சிறு வயதிலேயே தாயை இழந்திருந்த சந்திரன் உறவினர்களின் ஆதரவில் இருக்க விரும்பாமல், ஊரை விட்டுக் கிளம்பி விட்டான். சந்திரனுக்குப் படிப்பு அதிகமில்லை. சுறுசுறுப்பு நிறைந்த அந்தப் பதினாறு வயது வாலிபனுக்கு மளிகைக் கடையிலோ, அல்லது வேறு ஏதாவது கம்பெனிகளிலோ சொற்பச் சம்பளத்தில் வேலை கிடைப்பது எளிதாயிருந்தாலும் உலகமறியாத அவனுக்கு எதிலும் நிரந்தரமாக ஒட்டிக் கொள்ளக் கூடிய ஒரு மனப்பான்மை ஏற்படவில்லை.

பதின்மூன்று வருஷங்கள் இப்படியே ஓடி மறைந்தன. இப்பொழுது ஆஜானுபாகுவாக வளர்ந்திருந்த சந்திரனின் முகக் களை என்றும் போல் குன்றியிருந்தது. ஆனாலும் ஒரு பொறுப்புள்ள குடும்பஸ்தனாக இருக்க வேண்டிய அவன் இன்று “தண்டபாணி விலாஸி”ன் ஊழியர்களில் ஒருவனாகத் திகழ்ந்தானென்றால் அதற்குக் காரணம் விதியின் சதியைத் தவிர வேறொன்றுமில்லை. ஒரு நாளைப்போல் கோட்டை அடுப்புச் சாம்பலெடுப்பதும், கிணற்றிலிருந்து தொட்டிக்குத் தண்ணீர் இறைப்பதும் அந்த ஹோட்டலுக்கு வருபவர்களின் இச்சைப்படி பக்ஷணம், பலகாரங்களைக் கொடுத்து ‘பில்’ போடுவதும் கடந்த ஏழு வருஷங்களாக நடந்து கொண்டிருந்தன. அதில் ஒரு மாறுதலுமில்லை.

“தண்டபாணி விலாஸ்” மாடியில் ஒரு சிறிய அறை. அதில்தான் சந்திரனுக்கு இரவு வாசம். மத்தியான வேளைகளில் இரண்டொரு தரம் தன் அறைக்குச் சென்று கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்வதைத் தவிரக் காலை ஐந்து மணி முதல் இரவு பதினொன்று அல்லது பன்னிரண்டு மணி வரையில் இயந்திரம்போல் உழைத்து வந்தான் அவன்.

* * *

அன்று காலை எட்டு மணி இருக்கும். சந்திரன் சமையலறை வேலைகளை முடித்து விட்டுக் கூடத்துக்கு வந்தான். எப்பொழுதும்போல் அன்றும் கூட்டம்.

“என்ன வேணும், ஸார்?”

“காராபூந்தி கொண்டா!”

அவருக்கு ‘பில்’ போட்டுக் கொடுத்து விட்டு அடுத்த மேஜையின் பக்கம் சென்றான் சந்திரன். வியப்பில் அவன் ஒரு கணம் அப்படியே அயர்ந்து விட்டான்.

ஒரு ஆடவனுடன் ஒரு பெண்மணி அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தாள்! அவள் பக்கத்தில் ஒரு ஐந்து வயதுச் சிறுவனும் காணப்பட்டான்.

நிலைமை தடுமாறிய தன் மனத்தை ஒருவாறு சாந்தப்படுத்திக் கொண்டான் சந்திரன்.

“என்னவேணும், ஸார்?”

“இரண்டு கப் காப்பி கொண்டு வா!”

சிறுவன் இடைமறித்தான்.

“அம்மா, எனக்கு மசால்வடை வாங்கித் தரேன் என்றாயே!”

“இங்கே தின்ன வேண்டாம்; கையில் வாங்கிக் கொண்டு போகலாம்” என்று சிறுவனுக்குப் பதிலுரைத்த அந்தப் பெண்மணி சந்திரனின் பக்கம் திரும்பி, “அப்படியே இரண்டு மசால்வடையும் கட்டிக் கொண்டு வாருங்கள்” என்றாள்.

இயந்திரம்போல், இரண்டு கப் காப்பியும் ஒரு பொட்டலம் மசால்வடையும் கொண்டு வந்து வைத்தான் சந்திரன். பிறகு ‘பில்’ போட்டு மேஜையின் மேல் வைத்துவிட்டு நகர்ந்த அவனை நிறுத்தி, “இந்தா” என்று நான்கு ஒரு ரூபாய் நோட்டுகளை நீட்டினான் அந்த ஆடவன். அவனைத் தொடர்ந்து, “இது தானமில்லை; நான் உங்களுக்குக் கொடுக்க வேண்டியது” என்றாள் அந்தப் பெண் ஒரு இளநகை புரிந்தவாறே.

பிறகு அம்மூவரும் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள். சரிந்து விழுந்து கொண்

டிருந்த மேலாடையைச் சரிப்படுத்திய வாறே அன்ன நடையுடன் படிகளிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த அப் பெண்ணையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த சந்திரனின் மார்பு 'பட பட' வென்று அடித்துக் கொண்டது.

* * *

ஏழு வருஷங்களுக்கு முன், பொன்மலை ஸ்டேஷனில் அந்த அகால வேளையில் 'எக்ஸ்பிரஸ்' வந்து நின்றது. பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு ஒரு மூன்றாவது வகுப்பு வண்டியில் ஏறினான் சந்திரன். அதிகக் கூட்டமில்லை. உள்ளே புகுந்து ஒரு இடத்தையும் பிடித்துக் கொண்டான். 'சாமான்களுக்கு மாத்திரம்' என்று எழுதப்பட்டிருந்த அந்த மேல் தளத்தில் நடுவயதுக்கார மனிதர் ஒருவர் நிச்சிந்தையாக உறங்கிக் கொண்டிருந்தார். பெட்டியை அவர் கால் பக்கத்திலிருந்த கொஞ்ச இடத்தில் மெதுவாக வைத்துவிட்டுத் தனி இடத்தில் வந்து அமர்ந்தான் அவன். சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டி கிளம்பி விட்டது.

உட்கார்ந்தபடியே கண்ணயர்ந்து விட்ட அவன் சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு விழித்துக் கொண்டான். அங்கு உட்கார்ந்திருப்பவர்களின் மீது அவன் பார்வை சென்றது. அடுத்தாற்போல் வரும் ஸ்டேஷனில் இறங்கவிருந்த சிலரைத் தவிர பாக்கியுள்ளவர்களில் அநேகமாக யாவரும் நித்திரையில் ஈடுபட்டிருந்தார்கள்.

'இந்தாம்மா, தூக்கம் வந்தால் என் மேலே ஏன் விழுறே?'' என்று சீறினான் அந்தக் கிழவி, தூங்கி வழிந்து கொண்டிருந்த அந்தப் பெண்ணை எழுப்பியவாறே.

தூக்கத்திலும் கோபம் அப்பெண்ணின் முகத்தில் தாண்டவமாடியது. இடுப்பிலிருந்த 'மணி பர்ஸை' எடுத்துக் கையில் பிடித்திருந்த பையில் திணித்தவாறே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள் அப்பெண். கிழவியின் மனசு என்ன காரணத்தினாலோ ஒரு நிமிஷத்தில் மாறி விட்டது.

''என் ராஜாத்தியம்மா, கோவிச்சுக்காதே. நீ என் வயிற்றில் பிறந்த பொண்ணு மாதிரிதான். என் மூட்டையைக் கீழே வைத்துக் கொள்ளுகிறேன். இருக்கிற இடத்தில் நீ படுத்துக் கொள்'' என்றாள் மிகுந்த அங்கலாய்ப்புடன்.


பையைத் தலையணையாக வைத்துக் கொண்டு, இருந்த இடத்தில் உடம்பைச் சுருட்டிக் கொண்டு படுத்த அந்த இளம் பெண்ணின் மீது சந்திரனின் பார்வை லயித்திருந்தது.

கொடி போன்ற சரீரம். தங்கத்தின் நிறம். கலைந்திருந்த தலை மயிர் நெற்றியில் விழுந்து புரண்டு கொண்டிருந்தது. அதிக ஆபரணங்களில்லா விட்டாலும் இயற்கை யழகே அந்தப் பெண்ணுக்கு அலங்காரமாயிருந்தது.

வண்டி நின்ற பிறகுதான் சந்திரனுக்கு விழிப்புக் கொடுத்தது. காலை மணி ஆறு இருக்கும். கிழவியைக் காணவில்லை. அந்தப் பெண் தன் சாமான்களை ஒன்று சேர்த்த வண்ணம் இறங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

அடே! இவள் ஏன் அழுகிறாள்? என்ன நேர்ந்து விட்டது? ஊரில் தன் தாய் தகப்பனருக்கு ஏதாவது ...?

அழுகைக் கிடையில், ''கூலி, ஏய் கூலி'' என்று கத்தினாள், ஜன்னலின் வழியாகத் தலையை வெளியில் நீட்டிக் கொண்டே.



ஒரு கூலிக்காரன் ஓடி வந்தான்.

"இதை இறக்கு!"

"எங்கே கொண்டு போகணுங்க?"

"பிளாட்பாரத்துக்கு வெளியிலே. எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும்?"

"ஆறணாவுங்க."

"நாலணாத்தான் கொடுப்பேன். என்னிடம் அவ்வளவுதான் இருக்கிறது."

"வேறே ஆளைப் பாருங்க" என்று சொல்லியவாறே சவிரக்கமின்றிப் போய் விட்டான் அவன்.

சிறிது நேரத்தில் வண்டி பெரும்பாலும் காலியாகி விட்டது. ஏதோ பறி கொடுத்தவன்போல் பிரமித்துப் போய் நின்ற அந்தப் பெண்ணின் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

சந்திரனுக்குப் பொறுமை கொள்ளவில்லை. தன் பெட்டியை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிய அவன் ஜன்னல் பக்கமாக வந்து "கூலி வேணுங்களா?" என்றான்.

"நீ...நீங்கள்...கூலி வேலை..."

"ஆமாம். எங்கே போகவேண்டும்?" என்று அழுத்தத்துடன் கேட்டான் சந்திரன், ஒன்றும் தெரியாதவன்போல.

"பிளாட்பாரத்திற்கு வெளியில்...வண்டி ஸ்டாண்டு வரை. ஆனால்...என்னிடம் நாலணாக் கூட......"

"அப்புறம் பேசிக் கொள்ளலாம். வண்டி நகரப் போகிறது. எடுங்கள் சாமானை."

பெட்டி, பை, கூஜா இவைகளை ஜன்னல் வழியாக வாங்கிக் கொண்டு தன் பெட்டியையும் சுமந்தவாறே அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்தான் சந்திரன்.

மேல் பாலத்தின் 'கேட்'டில் நின்று கொண்டிருந்த டிக்கெட் கலெக்டர் சாமான்களைச் சுமந்து வரும் சந்திரனைப் பார்த்து, "ஏனப்பா, உன்னிடம் 'லைசென்ஸ்' இருக்குதா?" என்றார்.

"நான் ரயில்வே கூலியில்லை, ஸார்! இந்த அம்மாவுடன் வருகிறேன். அவங்க வீட்டு வேலைக்காரன் நான்" என்று சொல்லியவாறே அந்தப் பெண்ணைச் சுட்டிக் காட்டினான் சந்திரன். அப்பொழுது அப்பெண் தலையைக் குனிந்தவாறு தன் ஒற்றை விரலின் நுனியைக் கடித்துக் கொண்டதை அவன் கவனிக்காமலில்லை.

டிக்கட்டுகளைக் கொடுத்து விட்டு அங்கிருந்து கிளம்பிய அவர்களிருவரிடையே சிறிதுநேரம் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

பிறகு, சந்திரனைப் பார்த்து அப்பெண் சொன்னாள் :

"ரயிலில் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தக் கிழவி வழியில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறங்கி விட்டாள். எனக்கு விழிப்புக் கொடுத்தபோது பையைப் பார்த்தேன். 'மணி பர்ஸை'க் காணோம்."

அவள் கண்கள் கலங்கிப் போயிருந்தன.

"உன்னுடன் வேறு யாரும் வரவில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை. நான் திருச்சி காலேஜில் படிக்கிறேன். ஒருவாரம் சேர்ந்தாற்போல் விடுமுறை வந்தால் நான் தனியாகத்தான் ஊருக்குப் போவது வழக்கம். பெண்கள் வண்டி கூட்டமாக இருந்ததால் பக்கத்திலிருந்த இந்தப்பெட்டியில் ஏறிக் கொண்டேன்."

"'பர்ஸி'ல் எவ்வளவு இருந்தது?"

"சுமார் பதினைந்து ரூபாயும் கொஞ்சம் சில்லறையும். என்னிடம் இப்பொழுது நாலணாவைத் தவிர வேறு பணமில்லை."

"அந்தத் திருட்டுப் போயிராவிட்டால் எனக்கு இப்பொழுது எவ்வளவு கொடுத்திருப்பாய்?" அவள் மனத்தை யறியவே இந்தக் கேள்வியை அவளிடம் கேட்டு வைத்தான் அவன்.

"ஏன், நாலு ரூபாய் கூடக் கொடுத்திருப்பேன்" என்றாள் அந்தக் கள்ளமற்றவள்.

அப்பொழுது அவளுடைய சிவந்த முகத்தில் தவழ்ந்த புன்னகை சந்திரனை மெய் மறக்கச் செய்தது.

அங்கிருந்த குதிரை வண்டி ஒன்றில் அப்பெண்மணியின் சாமான்களை வைத்தான் சந்திரன். வண்டியில் ஏறிக் கொண்ட பின் தன்னிடமிருந்த ஒரு நாலணாவை எடுத்து அவன் முன்பு நீட்டினாள் அவள். அவன் அதை வாங்க மறுப்பதைக் கண்ட அவள் முகத்தில் ஏமாற்றத்தின் சாயை படர்ந்தது. பணத்தை ஏந்திய அந்தக் கையை மெல்ல உள்ளே இழுத்துக் கொண்ட அப்பெண் அவனை அப்பொழுது பார்த்த பார்வை சந்திரனின் உள்ளத்தில் ஒரு இனம் தெரியாத வேதனையைக் கிளப்பிற்று.

குதிரை வண்டி கிளம்பி விட்டது. வண்டிக்குள் அமர்ந்திருந்த அந்த அழகிய உருவம் சிறிதாகி மறையும் வரையில் அங்கேயே சிலை போல் நின்று கொண்டிருந்தான் அவன்.

* * *

"என்னய்யா, கூப்பிடறது காதில் விழல்லே?"

சுயநிலைக்கு வந்த சந்திரன் ஆவியே வெளியில் போவது போன்ற ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான். கையில் கசங்கிக் கொண்டிருந்த அந்தக் கூலிப் பணம் அவனுக்கு மதிப்பே யில்லாதது போல் காணப் பட்டது.

தத்தளித்துக் கொண்டிருந்த மனத்தைப் பொருட்படுத்தாமல், "என்ன வேணும், ஸார்!" என்று அவன் உதடுகள் வழக்கம் போல் முணுமுணுத்தன.


சலவை
வேலையை
சுலபமாக்க..
காவேரி
பார் சோப்
கந்தையானாலும் சரி, காசிப்பட்டானாலும் சரி, கசக்கியுடுத்துவதே தமிழ் நாட்டு மரபு. காவேரி பார் சோப் எல்லாவித துணிகளுக்கும் ஏற்றது. அதன் நுரை ஆடைகளின் நூலிழைகளிடையே ஊடுருவிப் பாய்ந்து, அழுக்கை அகற்றி, வெள்ளைத் துணிகளை மேலும் வெண்மையாகவும், வர்ண ஆடைகளை மேலும் பிரகாசமாகவும் செய்கிறது.
ஆடைகளுக்கு ஆயுளை அளிப்பது
காவேரி
பார் சோப்
CAUVERY BAR SOAP
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

பாப்பா மலர் தொடர்கதை

பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

14. ரகசியம்!

“யாரது? ரமணியா!” என்று மதுரநாயகம் கேட்டதும், “இல்லை, சார்! நான் கோவிந்தன். நாடகக் கொட்டகையில் வெற்றிலை பாக்குக் கடை வைத்திருக்கிறாரே பரமசிவம், அவருடைய பிள்ளை” என்றான் அந்தச் சிறுவன்.

இந்தப் பதிலைக் கேட்டதும், மதுரநாயகத்துக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, “அடடே, கோவிந்தனா! என்னப்பா விஷயம்? இந்த நேரத்தில் எங்கு வந்தாய்?” என்று கேட்டார்.

“உங்களிடம்தான் சார். ரமணியைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டும்...”

“என்ன! ரமணியைப் பற்றியா? என்ன சொல்ல வேண்டும்? சீக்கிரம் சொல்லு, தம்பி!”

“ரகசியமான விஷயம், சார்! யாருக்கும் தெரியக் கூடாது!”


“அப்படியானால், உள்ளே வா. அறைக்குள்ளிருந்து பேசுவோம்” என்று கூறி, கோவிந்தனைத் தம்முடைய அறைக்குள்ளே அழைத்துச் சென்றார் மதுரநாயகம்.

உள்ளே சென்றதும், “அந்த ரகசியம் என்ன? உடனே சொல், கேட்கலாம்” என்று மதுரநாயகம் மிகவும் ஆவலோடு கேட்டார்.

“சொல்லுகிறேன். ஆனால் நான் சொன்னதாக மட்டும் வெளியிலே சொல்லி விடாதீர்கள்!” என்று பீடிகை போட்டுக் கொண்டு கோவிந்தன் சொல்ல ஆரம்பித்தான்:

“இன்று நாடகம் முடிந்த பிறகு மேக் – அப் மேன் ஸ்ரீகண்டன் இருக்கிறாரே, அவரும் திரை இழுக்கிற துரைசாமியும் எங்கள் கடைக்கு வந்தார்கள். ஸ்ரீகண்டன் ஒரு சீப்பு வாழைப் பழத்தை வாங்கித் துரைசாமியிடம் கொடுத்து, ‘துரைசாமி, இப்போது இதை வைத்துக் கொள். வேறொரு சந்தர்ப்பத்திலே நிறையத் தருகிறேன்’ என்றார். உடனே துரைசாமி, ‘எனக்கு இது எதற்கு? ஐந்து ரூபாய் தருவதாகச் சொல்லி, ஒரு சீப்பு வாழைப் பழத்தோடே சரிக்கட்டப் பார்க்கிறாயே!’ என்று சிறிது கோபமாகக் கூறிவிட்டு ஸ்ரீகண்டனிடமே வாழைப் பழச் சீப்பைத் திருப்பிக் கொடுத்தார். ஸ்ரீகண்டன் விடவில்லை. ஏதேதோ சமாதானம் சொன்னார். அவர்கள் பேச்சு சுவாரஸ்யத்தில் நான் இருந்ததைக்கூடக் கவனிக்கவில்லை. ஆனால், நான் மட்டும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாதபடி கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அவர்கள் பேசியதிலிருந்து நான் என்ன தெரிந்து கொண்டேன் என்பதைச் சொல்லி விட்டாலே, உங்களுக்கு எல்லாம் புரிந்து விடும்!

“மேக் – அப் மேன் ஸ்ரீகண்டனுக்கு ஒரு மைத்துனன் இருக்கிறானும். அவன் பத்தாவது வரை படித்திருக்கிறானும். ரமணி வேலைக்கு வருவதற்கு முதல் நாள் ஸ்ரீகண்டன் முதலாளியைப் பார்த்து மைத்துனனுக்கு ஒரு வேலை வேண்டுமென்று சொன்னாராம். முதலாளி, ‘ஆபீஸ் பையன் ஞானமுத்து ஒரு வார லீவில் ஊருக்குப் போனவன் இரண்டு வாரமாகியும் இன்னும் வரவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்துப் பார்க்கிறேன். அவன் வராமல் போனால், உன் மைத்துனனுக்கு அந்த வேலையைக் கொடுத்து விடலாம்’ என்று சொன்னாராம். அவர் அப்படிச் சொன்ன மறுநாளே, நீங்கள் ரமணியைக் கொண்டுவந்து வேலையில் சேர்த்து விட்டீர்களாம். இது ஸ்ரீகண்டனுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டதாம். இப்போது பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பு, திரும்பவும் முதலாளியிடம் மைத்துனனுக்கு வேலை வேண்டுமென்று ஸ்ரீகண்டன் கேட்டாராம். ‘இப்போது வேலை காலி இல்லை. காலி ஏற்பட்டால் கட்டாயம் வேலை தருகிறேன்’ என்று சொன்னாராம் முதலாளி. ‘காலி ஏற்பட என்ன வழி?’ என்று ஸ்ரீகண்டன் யோசித்திருக்கிறார். ஒரு குறுக்கு வழி தோன்றியிருக்கிறது. அதைத் துரைசாமியிடம் சொல்லி, ‘உனக்கு ஐந்து ரூபாய் தருகிறேன். வேலையை ரகசியமாக முடித்து விடு’ என்று ஆசை காட்டியிருக்கிறார். துரைசாமி அவர் சொன்னபடி அறைக்குள்ளிருந்த பட்டுத் துணியைச் சாப்பாட்டு நேரம் பார்த்து ஜன்னல் வழியாக எடுத்திருக்கிறார்; அதை ‘டிக்கெட்’ அறைக்குள் ஒளித்து வைத்து விட்டு, நீங்கள் தபாலாபீஸ் போன சமயம் பார்த்து ‘ரமணிதான் எடுத்து ஒளித்து வைத்



திருக்கிறான்!' என்று கதை கட்டிவிட்டிருக்கிறார். உடனே முதலாளி அவர் பேச்சை நம்பி விடுவார்; ரமணியைப் பிடித்து வெளியே அனுப்பி விடுவார் என்று நினைத்தே அப்படிச் செய்தார்கள். அவர்கள் நினைத்தபடியே தான் நடந்தது. ஆனாலும், முக்கியமானது எதுவோ அதுமட்டும் நடக்கவில்லை!" – இப்படிக் கூறிச் சிறிது நேரம் நிறுத்தினான் கோவிந்தன். இதுவரை மூச்சு விடாமல் பேசினானே, கொஞ்சம் ஓய்வு வேண்டாமா அவனுக்கு?

உடனே மதுரநாயகம், "அடடே! விஷயம் இப்படியா! இதிலும் ரமணிக்கு அநியாயம் செய்து விட்டோமே!" என்று வருத்தத்துடன் கூறிவிட்டு, "ஆமாம், முக்கியமான ஒரு காரியம் மட்டும் நடக்கவில்லை என்றாயே, அது என்ன?" என்று கேட்டார்.

"அதையும் சொல்லாமல் விடுவேனா? ரமணியை எந்த நேரத்தில் முதலாளி வெளியிலே பிடித்துத் தள்ளினாரோ, அதே நேரத்தில் ஸ்ரீகண்டனின் மைத்துனன் மாமரத்திலிருந்து கீழே விழுந்து வலது கை முறிந்து விட்டதாம்! அதனால் அவனுக்கு வேலை கொடுக்க முடியவில்லை" என்றான் கோவிந்தன்.

"கோவிந்தா, நீ சிறு பையனாக இருந்தாலும், பலே கெட்டிக்காரனாக இருக்கிறாயே! நீ இதை உடனே வந்து சொன்னது ரொம்ப நல்லதாய்ப் போய் விட்டது" என்று கூறினார் மதுரநாயகம்.

"சொல்லாமல் படுத்திருந்தால், எனக்குத் தூக்கமே வந்திருக்காது, சார்! ரமணி ரொம்ப நல்லவன் சார்! அவன் இல்லாதது என்னவோ போல் இருக்கிறது."

"சரி, கோவிந்தா, உனக்கு நேரமாகிறது. வீட்டுக்குப் போ."

"இதோ போகிறேன், சார்! நான் சொன்னதாகமட்டும் ஸ்ரீகண்டனுக்கும், துரைசாமிக்கும் தெரிய வேண்டாம், சார்!" என்று மறுபடியும் கூறி விட்டுக் கிளம்பிச் சென்றான் கோவிந்தன்.

மறுநாள் பொழுது விடிந்தது. மதுரநாயகம் விரைந்து எழுந்தார். முகத்தைக் கழுவிக் கொண்டு நேராக முதலாளி மோகனரங்கத்தின் வீட்டுக்குச் சென்றார். அவரைப் பார்த்துக் கோவிந்தன் சொன்னதை அப்படியே சொன்னார். சொன்னவுடனே முதலாளி யோசனையில் இறங்கி விட்டார்!

"என்ன, யோசிக்கிறீர்களே! ரமணியைச் சேர்ப்பதற்கு முன்னால் ஸ்ரீகண்டன் தன் மைத்துனனைப் பற்றி உங்களிடம் சொன்னது உண்மைதானா?" என்று மதுரநாயகம் கேட்டார்.

"உண்மைதான்."


"திரும்பவும், பத்துப் பதினைந்து தினங்களுக்கு முன்பு, மைத்துனன் வேலை விஷயமாக அவன் உங்களைக் கேட்டானா?" என்று வினவினார்.

"ஆமாம், அதுவும் உண்மைதான்."

"அப்படியானால், கோவிந்தன் சொன்னது எல்லாமே உண்மையாகத்தான் இருக்கும்" என்றார்.

"மதுரநாயகம்! இப்போது நீங்கள் வீட்டுக்குப் போங்கள். சபாவுக்கு வந்ததும், இதை விசாரிக்கிறேன்" என்றார்.

"சரி சார்! ஆனால், பக்குவமாக விசாரிக்க வேண்டும். கோவிந்தன் பெயரை மட்டும் நீங்கள் வெளிப்படுத்திவிடக் கூடாது!" என்று கூறிவிட்டு மதுரநாயகம் வீடு திரும்பினார். (தொடரும்)


ஹத்திபாயின்
தராசு
மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2


Arvind
QUALITY FABRICS
·SANFORIZED·
REGD TO ME
SHRUNK FABRIC
ஷர்டிங்குகள்
பாப்ளின்கள்
கோட்டுத் துணிகள்
மற்றும்
பல வர்ண
பிரிண்டுகள்



டாக்டர் சுந்த

சரஸன்

சுந்தரி ஆஸ்பத்திரியில் தன் கடமையை முடித்துக் கொண்டு, ஓய்ச்சலுடன் வீடு திரும்பினாள். சமையல்கார அம்மாள், சூடாகக் காப்பியைக் கொண்டு வந்து அவள் முன் மேஜை மேல் வைத்தாள்.

"டாக்டர் அம்மா! இன்று ஏன் ரொம்ப ஆயாசமாய் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சமையல்காரி பரிவுடன்.

"ஆயாசம் ஒன்றுமில்லை, பார்வதி! மனம்தான் சரியில்லை" என்று கூறி விட்டு மேலே குறிப்பில்லாமல் அண்ணாந்து நோக்கினாள் சுந்தரி.

தினமும் சுந்தரி தன் சமையல்காரியிடம் ஆஸ்பத்திரியில் அன்றன்று வரும் விசேஷமான கேஸ்களைப் பற்றிக் கூறுவது வழக்கம். அதைக் கேட்டு, பார்வதி மிகவும் துக்கப்படுவாள்.

சுந்தரியின் வாழ்க்கையைப் பற்றிப் பார்வதிக்கு ஒன்றும் அதிகமாகத் தெரியாது. ஆனால் அவள் மணமானவள் என்றும், புருஷனுடன் சேர்ந்து வாழவில்லை என்றும் மட்டும் எப்படியோ அறிந்திருந்தாள்.

ஒரு நாள் சுந்தரி தன் கதையைப் பார்வதியிடம் கூறினாள்.

"பார்வதி! என்னைப்போன்ற துர்ப்பாக்கியம் படைத்தவர்கள் யாரும் இருக்க முடியாது. என் பெற்றோருக்கு நான் ஒரே பெண். என்னைச் சீரும் சிறப்புமாய் வளர்த்தார்கள். போதிய பண வசதியுமிருந்தது. என்னை நன்றாய்ப் படிக்கவும் வைத்தார்கள். நான் டாக்டர் படிப்புப் படித்தேன். அதில் தேறவும் செய்தேன்.

"அப்போதுதான் அந்த எதிர்பாராத துக்க சம்பவம் நிகழ்ந்தது. என் தாயும் தந்தையும் வடக்கே போயிருந்தார்கள், என் தந்தையின் உத்தியோகம் காரணமாக. நான் உடல் நிலை காரணமாய் இங்கே தங்கி விட்டேன். என் பெற்றோர் திரும்பும் போது, அவர்கள் பிரயாணம் செய்த ரயில் கவிழ்ந்து, என்னுடைய பெற்றோர்கள் யமலோகம் போனார்கள். அதன் பின்பு, நான் டாக்டர் தொழிலைத் தொடங்கினேன். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் எனக்கு வேலை கிடைத்தது.

"சிலகாலம் சென்றதும், என் திருமணமும் நடந்தது. நான் விரும்பியே மணந்து கொண்டேன், பாஸ்கரன் என்பவரை. அவருக்குச் சென்னை அரசாங்கத்தில் கல்வி இலாகாவில் வேலை. என் உத்தியோகத்தை அவர் வெறுக்கவில்லை. ஆரம்பத்தில் ரொம்பவும் உற்சாகமாகவேதான் இருந்தேன்.

"சொல்லப் போனால், எங்களது இல்லற வாழ்க்கையிலே, மக்கட் பேறு இல்லை என்பதைத் தவிர, வேறு எந்தக் குறையும் எங்களுக்கு இருக்கவில்லை. அவ் வாழ்க்கை நீடித்திருக்குமானால், எவ்வளவோ ஆனந்தமாகத்தானிருந்திருக்கும். யார் கண் பட்டு விட்டதோ, எங்களுக்குள் திடீரென்று மனக்கசப்புக்குக் காரணமான அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது.

"ஒருநாள் இரவு மணி ஒன்பதுக்கு மேலிருக்கும். நானும் என் கணவரும் உல்லாசமாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருந்தோம். அப்போது என் வீட்டு வாசற் கதவு தட்டப்பட்டது. போய்க் கதவைத் திறந்தார் என் கணவர்.

"'ஸார்! டாக்டர் அம்மா இருக்கிறாரா? ஒரு அவசரமான கேஸ்' என்றார் ஒரு வயோதிகர். அது என் காதில் விழுந்தது.

"'ஐயா! உங்களுக்கு வேலை, பொழுது ஒன்றும் கிடையாதா? இப்போதுதான் அலைந்து விட்டு அவள் வந்திருக்கிறாள். அவளும் மனுஷிதானே!' என்று என்னுடைய கணவர் அவரிடம் எரிந்து விழுவதும் என் காதில் விழுந்தது.

“அவருடைய மனப் போக்கை என்னால் உணர முடியாதா? இருப்பினும், என் கடமையை நான் செய்யத் தவற முடியுமா?

“என் கணவருக்கும் அந்த நபருக்கும் பேச்சு வளர்ந்து கொண்டே யிருந்தது.

“‘ஸார்! என் பெண் பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறாள். எங்களுக்குப் பயமாயிருக்கிறது. கல்யாணம் ஆகி இன்னும் முழுசாக ஒரு மாதமாக வில்லை. அக்கம் பக்கத்தில் வேறு டாக்டர் இல்லை. கொஞ்சம் தயவு செய்ய வேண்டும்.’

“அவர் பேச்சை முடிப்பதற்குள், நான் என் கைப் பையுடன் வாசலுக்கு வந்து சிறிதும் தாமதிக்காமல் வந்தவருடன் கிளம்பினேன்.

“நல்ல வேளை, நான் போன சமயம் தக்க சமயந்தான். சிறிது தாமதம் ஏற்பட்டிருந்தால், கேஸ் விபரீதமாய் முடிந்திருக்கலாம்.

“நான் திரும்பியதும், என் கணவர் உறங்கிக் கொண்டிருந்தார் — இல்லை, அம்மாதிரி பாவனை செய்தார்.

“மறு நாள் முதல் என்னிடம் அவர் முகம் கொடுத்துப் பேசவில்லை. வீட்டில் சாப்பிடுவதையும் நிறுத்திக் கொண்டார்.

“‘ஏன்? என்மீது என்ன குற்றம்? என்னுடைய கடமையை நான் செய்வது தவறா?’ என்றேன்.

“‘அதற்கு மணந்து கொண்டிருக்கவேண்டாம். கன்னிகையாகவே இருந்திருக்கலாம்’ என்றார் வேகத்துடன்.

“மற்றொரு நாள் என் கணவர் காரியாலயத்திலிருந்து என் ஆஸ்பத்திரிக்கே ஒரு கடிதம் அனுப்பினார். அதில் தம்மை வெளியூருக்கு மாற்றி விட்டதாகவும், தாம் அன்றிரவே கிளம்பப் போவதாயும் எழுதியிருந்தார். அன்று கடுமையாயிருந்தது ஆஸ்பத்திரி வேலை. எனவே நான் வீடு திரும்புவதற்குள், அவர் போய் விட்டார். நான் உண்மையில் வருந்தினேன்.

“அதன் பின்பு அவரிடமிருந்து வந்த கடிதத்தில், என் வாழ்க்கைக்கும் தம் வாழ்க்கைக்கும் ஒத்துவரவில்லையென்றும், அவரை நான் அவமதித்து விட்டதாயும் என் இஷ்டம் போல் இருக்கலாம் என்றும் எழுதியிருந்தார்.

“மூன்று நாள் ரஜாவில் அவர் மாற்றலாகிச் சென்ற ஊருக்குச் சென்றேன்.

“என்னைக் கண்டதும் என் கணவர் ‘தங்களை நான் வரச் சொல்லவில்லையே! ஏன் தங்களுக்கு இந்தச் சிரமம்?’ என்றார்.

“எனக்கு மரியாதை கொடுத்துப் பேசியது என்னைச் சித்திரவதை செய்தது. ‘கணவரைப் பார்க்க மனைவிக்கு அழைப்பு வேண்டுமா?’ என்றேன்.

“‘அந்த உறவு அற்றுப் போய் விட்டது. இனிமேல் தங்களுக்கு இங்கு இடமில்லை’ என்று அவர் கூறி எழுந்து போய்விட்டார்.

“உடைந்த உள்ளத்துடன் திரும்பினேன். எனக்கும் சென்னை வாழ்க்கை புளித்து விட்டது. கோவைக்கு மாற்றல் கேட்டேன். கிடைத்தது. அது முதல் இங்கு என் தொழில் நடத்தி வருகிறேன்” என்று கூறி முடித்தாள் சுந்தரி.

இந்த நிலையில், ஆரம்பத்தில் கூறியபடி ஒரு நாள் டாக்டர் சுந்தரிக்குத் திடீரென்று மனம் கிலேசப் பட்டதற்குக் காரணம், அன்று எதிர்பாராத விதமாகத் தன் ஆஸ்பத்திரியில் தன் கணவரைப் பார்த்ததுதான். அவர் யாரோ ஒரு நோயாளியைக் காண வந்திருந்தார். அந்த நோயாளி ஒரு ஸ்திரீ! அவள் பெயர் பங்கஜம். நல்ல அழகியும்கூட.

அந்தப் பங்கஜம் யார்? அவளுக்கும் தன் கணவருக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது? இந்த விவரங்களை அவளால் அறிய முடியவில்லை.

இந்த விஷயத்தை ஏனோ பார்வதியிடம் கூறச் சுந்தரி விரும்பவில்லை. அன்றிரவு முழுவதும் கண்ணீரைச் சொரிந்தபடியே படுக்கையில் கிடந்தாள்

மறுநாள் அந்தப் பங்கஜம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி விட்டாள் என்று




குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்

ரம்மிய மணம் கொண்ட ப்ரோடெக்ஸ் உயர்ந்தரக சர்வ பிரயோக வாசனைப் பௌடர்; மிக மிகக் குறைந்த விலையில் மிக மிகப் பெரிய டப்பா! இந்தியா வெங்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ப்ரோடெக்ஸ் டால்கம் பௌடரைவிரும்புகின்றன—அதன் வசீகரமான வாசனையினாலும் எல்லாவற்றிற்கும் உபயோகப்படும் பரிமள டால்கம் பௌடர் என்பதனாலும்......

இன்று ப்ரோடெக்ஸ் உபயோகித்தீர்களா?

குணம் உத்தரவாதம் கால்கேட் பாமாலிவ் அளிக்கிறது



ப்ரோடெக்ஸ்
சர்வப்பிரயோக
வாசனைப்பௌடர்

தெரிந்தது. சுந்தரி என்ன பாடுபட்டும், தன் உள்ளத்தில் ஏற்பட்ட குழறலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சுந்தரியின் மனப் போராட்டம் தீர வில்லை. திடீரென்று யாரோ கதவைத் தட்டினார்கள். படுக்கையில் புரண்டு கொண்டிருந்த சுந்தரி எழுந்து கதவைத் திறந்தாள். ஒரு வேலைக்காரன் நின்று கொண்டிருந்தான். "ஒரு அவசரமான கேஸ் அம்மா! உடனே நீங்க வரணும்!" என்றான்.

சுந்தரியின் மனம் அவனுடைய அவசர அழைப்பை ஏற்கத் தயாராயில்லை. எப் போது இம்மாதிரி ஒரு அவசர அழைப்பை ஏற்க மறுத்திருந்தால், இந்த நிலை தனக்கு ஏற்பட்டிராதோ, அச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டோம்! இப்போது மறுத்து என்ன புண்ணியம்? தன் கடமையைச் செய்த தாகவாவது ஆகும் அல்லவா? உடனே அவனுடன் கிளம்பினாள்.

அந்த வீட்டுக்குள் நுழைந்ததும், அவள் கண்டது யாரை? சினிமாக் கொட்டகை யில் பங்கஜத்துடன் அமர்ந்திருந்த மற் றொரு நபரைத்தான்! அருகில் பங்கஜம் கவலையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"டாக்டர்! நல்ல சமயத்தில் வந்தீர்கள். உங்களை எங்களுக்குத் தெரியாது. எங்கள் ஆள்தான் உங்களைப் பற்றிச் சொல்லி, அழைத்து வருகிறேன் என்று ஓடினான். சற்று முன்புதான் சினிமாவுக்குப் போய் விட்டு வந்தோம். திடீரென்று என் தாயார் இம்மாதிரி பேச்சு மூச்சற்றுப் படுத்து விட்டாள்" என்றான் கண்கலங்க.

சுந்தரி அந்த அம்மாளைப் பரிசோதித்து, ஒரு இஞ்செக்ஷன் கொடுத்தாள்.

அப்போது யாரோ வரும் சத்தம் கேட் டது. திரும்பினாள்.

"மன்னி! சீ! என்ன உலகம்! இந்த டாக்டர்களை என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நான் போய் இருவரைக் கூப் பிட்டேன். 'வர முடியாது. வேணுமானால் இங்கே கொண்டு வாருங்கள் நோயாளியை' என்று இரக்கமில்லாமல் கூறினார்கள்" என்று கூறிக்கொண்டே பாஸ்கரன் வந் தான். அவன் சுந்தரியைக் கவனிக்கவில்லை.

"அம்மாதிரி சொல்லாதீர்கள். இதோ ஒரு டாக்டர் வந்திருக்கிறார்" என்று கூறிச் சுந்தரியைக் காட்டினாள் பங்கஜம்.


சுந்தரியை அப்போதுதான் கண்ணுற்ற பாஸ்கரன், "ஆ, சுந்தரி! நீயா?" என்று அதிர்ச்சியுற்றுக் கூறினான்.

சுந்தரி ஒன்றும் அயர்ந்து விடவில்லை. அலட்சியமாகவே இருந்தாள். இஞ்செக் ஷன் மருந்து வேலையைச் செய்தது. மூர்ச் சித்த அம்மாள் கண் விழித்தாள்.

"டாக்டர்! என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள். நள்ளிரவு என்றும் பாரா மல் வந்து எங்களுக்கு உதவிய தங்களுக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக் கிறோம். அது சரி, இவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று பாஸ்கரனைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள் பங்கஜம்.

சுந்தரி அவளுக்குப் பதில் சொல்லுவ தற்கு முன்னால், பாஸ்கரன் முந்திக் கொண்டு, பங்கஜத்தைப் பார்த்து, "மன்னி! நான் பாவி! அவளை ஒன் றும் கேட்டு விடாதீர்கள். என் மனைவி அவள். மட்டமான என் எண்ணத்தின் காரணமாகச் சிறிது காலம் பிரிந்து வாழ நேர்ந்தது!" என்று கண்ணீருக்கு இடையே கூறிவிட்டுச் சுந்தரியின் பக்கம் திரும்பி னான். "சுந்தரி! என்னை மன்னித்து விடு. இந்தப் பெண்மணி பங்கஜம் என் மன்னி; அவர் என் ஒன்றுவிட்ட சகோ தரர்; இவர்களிருவரும் நம் கல்யாணத் துக்கு வரவில்லை. ஆகையினால் நீ இவர் களைப் பார்த்ததில்லை. இப்பொழுது நீ சிகிச்சை செய்தது என் மன்னியின் தாயா ருக்குத்தான். இவர்களிடம் கூட, உன்னைப் பற்றிய உண்மையை மறைத்து வைத்தேன். போனதெல்லாம் போகட்டும். சுந்தரி, இன்று முதல் நாம் புனர் வாழ்வு தொடங்கு வோம்!" என்று கண்களில் நீர் மல்கக் கூறினான் பாஸ்கரன்.


இருமல்
ஜலதோஷம்
ப்ரான்கைடிஸ்
ஆஸ்த்மா
கக்குவான் இருமல்
தொண்டை ரணம்
Apothecary E.Taeschner
Pertussin
for coughs, asthma,
and bronchial catarrh
whooping-cough
100 c.c.



ரவிசந்திரிகா

27. சித்தர் ஆசிரமம்

பொதிகை மலைக் காட்டிலே பளிஞர் குடியிருப்பில், இலஞ்சிச் சாமியாருக்கு நடந்த பிரிவு உபசாரக் கூட்டம், டாக்டர் சுரேஷின் பிரவேசத்தினால் கலகலப்பு அடைந்தது. இலஞ்சிச் சாமியாருக்கு டாக்டர் சுரேஷ் காட்டிய மரியாதை மற்றச் சாமியார்களுக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் அளித்தன. மகிழ்ச்சி எதனால் என்றால், தங்களைப் போன்ற ஒருவருக்கு இத்தனை மதிப்பு கால்-குழாய் மாட்டிய ஒருவர் கொடுக்கிறாரே என்பதனால்! வியப்பு எதனால் என்றால், இத்தனை மதிப்புக்கு வேண்டிய விசேஷம் இலஞ்சிச் சாமியாரிடம் உண்மையிலேயே இருக்கிறதா என்பது. இந்த வியப்பு அதிகமாவதற்குள் டாக்டர் சுரேஷ் பேச ஆரம்பித்தார்.

"என்ன சாமிகளே! உங்களோடு ஒருவராக நடமாடும் இந்தச் சாமியாரை நான் இத்தனை தூரம் பிரியத்தோடு நடத்துவது உங்களுக்கு ஆச்சரியமாகப் பட்டால் நான் ஆச்சரியப் படுவதற்கில்லை. நீங்கள் ஆச்சரியப்படாமல் இருந்தால்தான் நான் ஆச்சரியப் படவேண்டும். ஏனென்றால் பொதுவாக என்னைப் போன்ற ஆங்கிலம் படித்த மக்களிடையே நம்முடைய சித்த வைத்தியத்தைப் பற்றிப் பல தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

"முக்கியமாக, இந்த சித்த வைத்திய முறைகள் எல்லாம் ஒரே சங்கேதப் பதங்களாக, இரகசிய பாஷையாக எழுதப்பட்டிருக்கின்றன. 'அத்திப் பிஞ்சு' என்று சொல்வதற்குப் பதில் 'ஆனைக் கன்று' என்றும் 'முசு முசுக்கை' என்று சொல்வதற்குப் பதில் 'இரு குரங்கின் கை' என்றும் பாட்டாக எழுதப்பட்டிருக்கிறது, இந்த சித்த வைத்திய முறையில். இதனால் இந்தப் பாடல்களைப் புரிந்து கொள்வது



மும்மூர்த்திகள் ஞாபகச் சின்னம்

பிரசித்தி பெற்ற கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான தியாகய்யா, முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் தோன்றிய திருவாரூரில் அவர்களுக்குத் தக்க ஞாபகச் சின்னங்களாகத் திருவுருவங்கள், பஜனை, சங்கீத கச்சேரிகள் முதலியவற்றுக்கு ஏற்ற மண்டபங்கள் எழுப்பச் சென்னையில் ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அறிந்து மகிழ்கிறேன். இம் முயற்சி சங்கீத சாஹித்ய கர்த்தாக்களான இவர்களின் நினைவை என்றும் பசுமையாக வைத்திருப்பதுடன் மற்றவர்கள் அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றவும் ஊக்கமளிக்கும் என்று நம்புகிறேன்.

— டாக்டர் ராதாகிருஷ்ணன்
(உதவி ஜனாதிபதி)

கஷ்டமாக இருக்கிறது. அது மட்டுமில்லை. தவறாகப் புரிந்து கொண்டு விபரீதமான மருந்துகளைச் செய்து 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்று வெளிவருபவர்களும் பலர். ஆகவே இத்தனை குழப்பங்கள் நிரம்பிய வைத்தியத்தைப் பற்றிச் சாதாரணமாகத் தப்பபிப்பிராயம் பரவுவது இயல்பு. ஆனால் அதிர்ஷ்ட வசமாக நான் சென்னை மருத்துவக் கலாசாலையில் படிக்கும்போது எங்கள் ஆசிரியர்களில் ஒருவர் சித்த வைத்தியமும் நன்றாகப் படித்தவராக இருந்தார். அவருடைய தொடர்பினால் இரண்டொரு நுட்பங்களைத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. ஆகையினால்தான் இன்று இந்த இலஞ்சிச் சாமியாரை நான் மிகவும் மதிக்கிறேன்..."

இப்படி ஒரு நீண்ட சொற்பொழிவே நிகழ்த்தினார் டாக்டர் சுரேஷ்.

அந்தச் சொற்பொழிவில் எல்லாரையும் கவர்ந்த விஷயம், இலஞ்சிச் சாமியார் மலைக் காட்டில் அந்தக் குடியிருப்பிலேயே நிரந்தரமாகத் தங்கி விட வேண்டும் என்று டாக்டர் சொன்ன யோசனைதான்.

பிரிவு உபசாரம் முடிந்த பிறகு, டாக்டர் சுரேஷ், இலஞ்சிச் சாமியார், அப்புலிங்கம், கந்தப்பன் — நான்கு பேரும் நீண்ட நேரம் மரத்தடியிலே பேசிக் கொண்டிருந்தார்கள். டாக்டர் சுரேஷ் பல மூலிகைகளின் பெயர்களையும் அவற்றில் ஆராய வேண்டிய விஷயங்களையும் பற்றிச் சாமியாரிடம் சொன்னதைக் கேட்டு அப்புலிங்கம் அசந்து போய் விட்டான். கந்தப்பனோ, தான் பிறந்த அந்த மலைக் காட்டில் இத்தனை விசேஷமான மருந்துச் செடிகள் இருக்கின்றனவா என்று திகைத்த வண்ணம் இருந்தான்.

திருச்சியில் எத்தனையோ பெரிய விபரீதக் குழப்பங்கள் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் மலைக் காடுகளிலே டாக்டர் சுரேஷ் காமிராவும் கையுமாகச் சுற்றிக் கொண்டே இருந்தார். மரங்கள், செடி கொடிகள், வானத்தின் பல பல காட்சிகள், நீரோடைகள், அருவிகள், மான்கள், மயில்கள் என்று அவருடைய காமிரா "கிளுக்"கிக் கொண்டே இருந்தது. கந்தப்பன் மலை காட்டுத் தலைவனின் எதிர்கால மாப்பிள்ளை என்றும், சொக்கி என்ற அந்த வன சுந்தரிதான் கந்தப்பனுடைய எதிர்கால மனைவி என்றும் டாக்டர் சுரேஷுக்குத் தெரிந்த வினாடியிலிருந்து, அவருடைய காமிரா அந்த மலை காட்டுக் கன்னியிடம் கண்ணும் கருத்துமாக இருந்தது. அவளுடைய கம்பீரம், அவளுடைய நடை



யின் ஒயில், அந்த மேனியின் எழில், அவள் நடந்து செல்லும் போது அந்த இயற்கைச் சூழ்நிலையில் ஏற்படுகிற கலகலப்பு—இப்படி எத்தனையோ பல வண்ணக் காட்சிகளைக் காமிராவிலே படம் பிடித்தார் சுரேஷ். நிலவுப் பாறையைப் பற்றிக் கேள்விப்பட்டு மறு நாள் பிற்பகல் அந்த நிலவுக் காட்டுக்குள்ளே சென்று நல்ல சூரிய வெளிச்சத்திலேயே சிற்றோடையையும், சிற்றருவியையும் காமிராவுக்குள்ளே பிடித்துப் போட்டுக் கொண்டார். சொக்கி தனது யானையுடன் பேசிய 'கானு பாஷை' டாக்டர் சுரேஷைக் கவர்ந்தது. அதனால் அவர் மிக்க பிரியத்தோடு சில சமயங்களில் 'சுசோ கக் கி' என்று கூடச் சொக்கியைக் கானு பாஷையில் கூப்பிட ஆரம்பித்தார்!

இப்படியாக இரண்டு நாட்கள் மலைக் காட்டிலே உல்லாசமாகப் பொழுதைக் கழித்து விட்டு, இலஞ்சிச் சாமியாரையும் அந்தச் சொக்கி குடியிலேயே இருத்தி விட்டு, டாக்டர் சுரேஷ் மலையிலிருந்து புறப்பட்ட போது, பளிஞர் தலைவனுக்குக் கூட மனம் கஷ்டப்பட்டது. இந்த மாதிரி ஒரு நல்ல பதவியிலே இருக்கக் கூடிய டாக்டரும், திருச்சியில் உள்ள ஒரு இளம் பிரமுகரும் தன்னுடைய மருமகனுக்கு நண்பர்களாகக் கிடைத்ததில் தலைவன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான். ரவீந்திரன் என்ற ஒரு மனிதனைப் பற்றிக் கந்தப்பன் சொன்னதைக் கேட்டதிலிருந்து, பளிஞர் தலைவனுக்கு ரவியிடம் அபாரமான மதிப்பு உண்டானது மட்டும் இல்லை. ரவீந்திரன் என்றால் அவன் ஏதோ தெய்வப் பிறவி என்றும், அவனுடைய புல்லாங்குழல் வாசிப்பு அந்த மலைப் பிராந்தியத்தில் ஒரு தரம் நிகழ்ந்தால் பிறகு 'கவலையே இல்லை, கூப்பிட்ட நேரத்துக்கு எல்லாம் வனதேவதைகள் வந்து வரம் கொடுத்துச் செல்வார்கள்' என்றும் பட்டது அவனுக்கு. டாக்டர் சுரேஷிடம் முக்கியமாக ஒரு வேண்டுகோள் செய்து கொண்டான். வெகு விரைவில் டாக்டர் சுரேஷ் தம்மோடு அந்த அபூர்வ ரவீந்திரனையும் அழைத்துக் கொண்டு மலை காட்டுக்கு வர வேண்டும் என்றும், வந்து ஒரு வாரமாவது தங்களோடு தங்கியிருக்க வேண்டும் என்றும், தங்கள் மலைக் காட்டில் அவர்கள் வரும்போது ஒரு விசேஷ பூஜைத் திருவிழா நடத்த வேண்டும் என்றும், அகவல் மகளைக் கூப்பிட்டு அந்த ரவீந்திரனுக்கும் பெரிய ஆசீர்வாதமாகச் செய்யும்படி சொல்ல வேண்டும் என்றும் எல்லாம் மிக்க உத்சாகத்தோடு சொன்னான் பளிஞர் தலைவன்.

"என்ன, சுசோ கக் கி! நாங்கள் போய் விட்டு வருகிறோம். கச கரி கதா கனு?" என்று சொக்கியிடம் விடைபெற்றார் டாக்டர் சுரேஷ். அவள் டாக்டருக்குக் கை கூப்பி வணக்கம் செய்து கொண்டே சிரித்த வண்ணம் குடிசைக் குள்ளே சென்று விட்டாள். அப்படியே அதை ஒரு 'ஸ்நாப்' எடுத்துக் கொண்டார் டாக்டர் சுரேஷ்.

அப்புலிங்கமும் கந்தப்பனும் எல்லாருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு டாக்டர் சுரேஷோடு புறப்பட்டார்கள். அவர்களோடு கூடவே உஸ்தாதுக்காக ஐந்து மலைப் பளிஞர்களும் உடன் புறப்பட்டார்கள்.

இவர்கள் அனைவரும் சொக்கி குடிக் காட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகு இலஞ்சிச் சாமியார் மலை நாட்டுப் பளிஞர்



தலைவனைத் தனியாக அழைத்துக் கொண்டு ஆலமரத்தடிக்குச் சென்றார். அவருடைய மனத்தில் ஏதேதோ யோசனைகள் ஓடிக் கொண்டிருந்தன.

"சொக்கப்பா! நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேட்க வேண்டும், தெரிந்ததா?" என்று சொல்லிக் கொண்டே பேச்சை ஆரம்பித்தார் சாமியார்.

"உன்னுடைய குடியிருப்புக்கு வந்து போயிருக்கிற டாக்டர் சாதாரண மனிதர் இல்லை. நேற்று இரவு என்னைத் தனியாகச் சந்தித்துச் சில விவரங்கள் பேசிக் கொண்டிருந்தார். அது காரணமாகத்தான் நான் கொஞ்ச நாள் இங்கே தங்கலாம் என்று நினைத்தேன். இன்றைக்கோ அவர் என்னை இங்கே நிரந்தரமாகவே இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்!" என்று கூறியவாறு சிரித்தார் சாமியார். பளிஞர் தலைவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சொல்லுவான்: "சாமி இங்கே இருக்குதான்னு நெனைச்சா, அது பெரிய நல்ல காலமாக்கும் இந்தச் சொக்கி குடிக்கு! கட்டாயம் இருக்கணும்!"



சொக்கப்பன் இப்படிச் சொன்னபோது, அந்த வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்ட களிப்பும் வாஞ்சையும் அவனுடைய முகத்திலே பிரகாசித்தன.

"சொக்கப்பா! உங்களுடைய மலைக் காட்டில் சர்ப்பகந்தி என்ற மூலிகை இருக்கிறதல்லவா? அந்த மூலிகைதான் இனி மேல் என்னுடைய ஆராய்ச்சிக்கு முக்கியமான மருந்து. டாக்டர் சுரேஷ் இந்த மூலிகை எத்தனையோ பெரிய பெரிய நோய்களுக்கெல்லாம் கைகண்ட மருந்து என்று சொல்கிறார். இரத்தக் கொதிப்பு என்ற நோயைப் பற்றி நகரங்களில் எல்லாம் பெரிது பெரிதாக இங்கிலீஷ் வார்த்தைகளைப் போட்டு வர்ணிப்பார்கள். இந்த நோய்க்குச் சர்ப்பகந்தியினால் அதிசயமான பலன் உண்டு என்று மேனாடுகளில் கண்டு பிடித்திருக்கிறார்களாம். நம்முடைய சித்த வைத்தியத்திலும் இந்த மாதிரி ஒரு பச்சிலையைப் பற்றிச் சொல்லி யிருக்கிறது. டாக்டர் சுரேஷ் இந்த மருந்துச் செடியை நன்றாக ஆராயும்படி சொல்லி யிருக்கிறார். ஆகையினால்......"

"ஆகையினால் என்ன சாமி? தாராளமாகச் சொல்லணுமாக்கும்!" என்றான் பளிஞர் தலைவன் சொக்கப்பன்.

"ஆகையினால் நான் இந்த ஆல மரத்தடியில் தனியாக ஒரு சிறு குடிசை கட்டிக் கொண்டு என்னுடைய மருந்து ஆராய்ச்சிகளை நிம்மதியாக நடத்தலாம் என்று நினைக்கிறேன். கடவுள் புண்ணியத்திலே தேனும் பழங்களும் நீரோடையும் தட்டு இல்லாமல் உண்டு இந்தக் காட்டிலே! ஒரு சாமியாருக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?" என்றார் இலஞ்சிச் சாமியார் சிரித்துக் கொண்டே.

"என்ன சாமி! இப்படிச் சொல்லணுமாக்கும்! வேண்டிய அளவு செடி செடியாக நம்ப காட்டிலே......"

"ஓ! கமனை ஓடியைச் சொல்லுகிறாயா? பலே பலே! அதுதான் ஏராளமாகக் கிடைக்குமே! ஆனாலும் அதை அளவுக்கு மீறி உபயோகிக்க ஆரம்பித்து விட்டால் நம்முடைய ஆராய்ச்சி நடக்காது! அதுவும் உறங்க ஆரம்பித்து விடும்! ஏதோ முருகன் கிருபையிலே கமனை ஓடியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துவிட வேண்டும் என்று எண்ணி யிருக்கிறேன். டாக்டர் சுரேஷ் இனிமேல் எனக்கு எத்தனையோ முக்கியமான அலுவல்கள் கொடுத்து விட்டார். ஆகையினால்கமனை ஓடியை எச்சரிக்கையோடுதான் இனிமேல் உபயோகிக்க வேண்டும். கெட்ட பழக்கம் அது!" என்றார் சாமியார். சொக்கப்பனுக்கு இந்த வார்த்தைகள் ஒரே ஆச்சரியமாக இருந்தன.

"சாமிக்கு எது எது எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படியே செய்யணு

மாக்கும்! இந்தச் சொக்கி குடியிலே நல்ல காலம் பிறந்திருக்குதாக்கும்! அதுனாலே தான் எங்க குல தெய்வமே உங்களை யெல்லாம் இங்கே அனுப்பி யிருக்கிறதாக்கும்!'' என்று ஆனந்தத்தோடு சொன்னான் பளிஞர் தலைவன் சொக்கப்பன்.

“அதெல்லாம் சரி, சொக்கப்பா! இந்தக் காட்டுக்குள்ளே என்னுடன் சுற்றுகிறதற்கும், நான் சொன்ன இடத்தில் சொன்ன மூலிகைகளைப் பறிப்பதற்கும் மட்டும் இரண்டு ஆள் கொடு. போதும். மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!'' என்று ஒரே பேச்சில் விஷயத்தை முடித்துவிட்டு எழுந்தார் சாமியார்.



அவர் வார்த்தைக்குச் சரி சொல்லி விட்டுச் சொக்கப்பனும் ஆலமரத்தடியிலிருந்து புறப்பட்டான். புறப்படும்போது தன்னுடைய ஒரே விருப்பத்தை மீண்டும் சாமியாரிடம் சொன்னான்:-

“நம்ப குல தெய்வத்துக்குச் சொக்கி குழல் வாசிச்சா ரொம்ப ரொம்பப் பிடிக்குமாக்கும்! அந்த ரவீந்திரன் மட்டும் இங்கே ஒரு தடவை வந்து பூசையிலே வாசிச்சாருன்னா, எப்படி யிருக்குமாக்கும்!''

இப்படி அவன் சொன்னபோது அந்த ஆலமரம் காற்றிலே அசைந்து அதன் இலைகள் அத்தனையும் சலசலத்தன. ஏதோ வருங்காலத்தை அறிந்து அந்த ஆலமரம் ‘கல கல’ என்று சிரிப்பது போல இருந்தது, இலைகளின் அந்தச் சல சலப்பு!

ஆமாம்; மலைக் காட்டிலே இப்படி ஏதேதோ எதிர்காலத் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்த அந்தச் சமயத்திலே தான் திருச்சியில் ரவீந்திரனுடைய நிலைமை மணிக்கு மணி மோசமாகிக் கொண்டு வந்தது. எத்தனை பேர் இழுத்து அமுக்கிப் பிடித்தாலும், அத்தனை பேரையும் கீழே தள்ளிக் கொண்டு பாய்ந்து விடுகிற அளவுக்கு ரவியினுடைய ஆவேசம் அதிகரித்தது. அந்த உடம்பில் இத்தனை பலமும், இவ்வளவு வேகமும் இத்தனை நாள் எங்கே மறைந்து கிடந்தன? சாதாரணமாக வெறுங் கோபம் வந்தாலே ‘பட பட’ என்று ஆடக் கூடிய அந்த உடம்பிற்குள் இத்தனை ஆற்றல் இதுவரை எங்கே குடி கொண்டிருந்தது? இது கண்டு மிராசுதார் முருகானந்தத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. காலையில் உஸ்தாதையும் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரையும் பார்த்து வந்த பிறகும்கூட மனத்தில் நிம்மதி இல்லாத முறையில் சம்பவங்கள் குமைந்து கொண்டிருந்தன. உடனே வந்து விடுவதாகச் சொன்ன உஸ்தாத் வருவதற்குத் தாமதம் ஆக ஆக, அவருடைய ஆத்திரம் அளவுகடந்து போயிற்று. ‘சரி; மறுபடியும், ஒரு முறை உஸ்தாதைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டியதுதான் போலிருக்கிறது!’ என்று நினைத்துப் புறப்படத் தயாராகும் சமயத்தில், பங்களாவுக்குள்ளே மீரான் நுழைந்தார். ஆனால் அமைதியோடும், நிதானத்தோடும் வழக்கமாக நுழைகிற உஸ்தாத் மீரான் ஒரே பரபரப்போடு வந்தார்.

“மிராசுதார்வாள்! கொஞ்சம் தனியாக வருகிறீர்களா? ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். அதன் பிறகு ரவீந்திரனுடைய விஷயத்தைக் கவனிக்கலாம்!'' என்று சொன்னார்.

மிராசுதார் அப்படியே பதறி எழுந்து வந்தார். உஸ்தாத் மீரானும் அவருமாக வெளி முற்றத்துக்கு வந்து ஏதோ இரகசியமாகப் பேச ஆரம்பித்தார்கள். **(தொடரும்)**

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram.

இந்த ஆச்சரியமான சோப்புத்தூள் வெள்ளைத் துணிகளை வெள்ளை வெளேரென்று வெளுக்கிறது—கஷ்டப்பட்டுக் கசக்காமல்!

ரின்ஸோவினல் — இந்த ஆச்சரியமான சோப்புத் தூளினல் — வெளுக்கப்பட்ட எந்த ஆடையையும் சாதாரணமாக வெளுக்கப்பட்ட ஆடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் உடனே காண்பீர்கள் — ரின்ஸோ எவ்வளவு அதி வெண்மையாக வெளுத்திருக்கிறது என்று! ரின்ஸோவின் சக்தி வாய்ந்த நுரை எல்லா அழுக்கையும் வெளிப்படுத்துகிறது. வீட்டில் விரும் எல்லா, கலர், மற்றும் வெள்ளை ஆடைகளையும் வெளுப்பதற்கு ரின்ஸோவை உபயோகப்படுத்துங்கள். நீங்களே காண்பீர்கள் — அது உங்களுடைய பாதி வேலையை செய்துவிடுகிறது என்பதை! கஷ்டப்பட்டுக் கசக்க வேண்டியதில்லை! அடித்துத் துவைக்க வேண்டியதில்லை! நீங்கள் அதனுடைய அதிசயப்படியான வெண்மைக்கு வேறொன்றும் சேர்க்கவேண்டியதில்லை.

ரின்ஸோவை இன்றே உபயோகியுங்கள்!



ரின்ஸோ மிக வெண்மையாக வெளுக்கிறது!

R. 4-30 TM   லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெடினல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

